www.padippakam.com

# புதிய ஜனநாயகம்



ஜனதாதளம்:
பதவிப்
போட்டிக்கு
லட்சிய வேடம்!

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு
16 ஜூலை - 15 ஆகஸ்ட் '90 5/17 - 18 விலை ரூ.2/-











## கொலைப்பட்டியல் விண்ணப்பதாரர்கள்










படிப்பகம்

www.padippakam.com



# ''ரோமம்'' உதிர்க்கிறார் ஜெயலலிதா!

சினிமாவைப் போல் அவ்வளவு சுலபமாக நிரந்தர கதாநாயகி வேடம் தமிழக அரசியலில் கிடைக்காமல் போகவே வில்லியாக அவ்வப்போது அரசியல் அரங்கில் தோன்றி மறைகிறார். ஜெயலலிதா. அவர் தோன்றி மறையும் ஒவ்வொரு முறையும் அ.தி.மு.க.வில்—தமிழக அரசியலில் அல்ல — கொந்தளிப்புகளும் குழப்பங்களும் கோமாளித்தனங்களும் பொங்கி வழிகின்றன.

மார்ச்சு 25ல் சட்டசபையில் கருணாநிதியுடன் மோதிய பிறகு இதுநாள்வரை சட்டசபைக்கே போகவில்லை 'புரட்சி' தலைவி. சேலை கிழிப்பை காட்டி ஆட்சி கவிழ்ப்பை கோரினார். கருணாநிதி ஆட்சியை கவிழ்ப்பதற்கு முன் பாசிச ராஜீவ். தானே கரையேற முடியாமல் தேர்தலில் மூழ்கி போனார். வெறுத்துபோன ஜெயலலிதா நீண்ட நாட்கள் காணாமல் போனார்

திடீரென கடந்த மாதம்; 37 பேர் கொண்ட குழுவை உருவாக்கி, தனது அதிகாரங்களை அதனிடம் ஒப்படைத்து இருப்பதாகவும், இனி அ.தி.மு.க.வை அக்குழு தான் வழிநடத்தி செல்லும் என்றும், தனது உடல் சீரானவுடன் தமிழக மக்களுக்கு தொடர்ந்து தொண்டாற்றுவேன் என்றும் அறிக்கை வெளியிட்டார். இதனால் எஸ்.டி. சோமசுந்தரம், வீரப்பன், காளிமுத்து போன்றவர்களுக்கு ஏற்கனவே ஜெயலலிதா கொடுத்த பதவிகள் செல்லாத நோட்டாகியது.

மேலும், திருநாவுக்கரசு, சாத்தூர் ராமச்சந்திரன் போன்ற முக்கிய புள்ளிகள் 37 பேர் கொண்ட குழுவில் சேர்க்கப்படவில்லை. கட்சி அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் இந்த இருவர் உட்பட 16 பேரை அடுத்த 2-வது வாரத்தில் நீக்கினார். ''கட்சி கட்டுப்பாட்டை மீறியது'' ''கட்சிக்கு கெட்ட பெயர் ஏற்படுத்தியது'' ''கட்சியில் குழப்பம் விளைவித்தது'' - ஆகிய குற்றங்கள் சாட்டி குழந்தைவேலு, கருப்பசாமி பாண்டியன், ஜே.சி.டி.பிரபாகரன், சோ.நவநீத கிருஷ்ணன், நடிகர் ராமராஜன் போன்ற 16 பேர்களுக்கு சீட்டு கிழித்தார். 37 பேர் கொண்ட குழுவில் 49 பேரை மேலும் சேர்த்தார். நீக்கப்பட்டவர்களின் பலத்தை சிதைக்க அவர்களின் ஆதரவாளர்கள் பலருக்கு குழுவில் இடம் கொடுத்தார்.

அதே போல் நீக்கப்பட்டவர்களுக்கு இணையான அரசியல் ரௌடிகளை—தாமரைக்கனி, அண்ணாநம்பி போன்றவர்களை மாவட்ட செயலாளராக்கினார். இதில் உக்கம்சந்த். பழக்கடை பாண்டியன் போன்றோர் ஜெயலலிதாவின் பிடியில் சிக்காமல் திருநாவுக்கரசு - சாத்தூர் ராமச்சந்திரன் கும்பலுக்கு ஓடிப்போனார்கள். தி-சா கும்பலுக்கு ஆதரவு திரட்ட தமிழகம் பூராவும் மேடைகளில் கவர்ச்சி காட்டிய ராமராஜன் கடைசியில் ஜெயலலிதாவிடமே ஓடிப் போனார்.

காளிமுத்து மதில் மேல் பூனையாக நோட்டமிட்டு திருநாவுக்கரசுக்கு மாலை போட்டு விட்டு 'ஜெயலலிதாவே என் தலைவி' என்று ஓடிவிட்டார்! துரத்தப்பட்ட தி-சா கும்பல் 'புரட்சிதலைவி' தங்களை எப்படியெல்லாம் நடத்தினாரென்று சோகக்கதை போல் விளக்கினார்கள். ''எங்களை கட்சியில் இருந்து நீக்கியது மனசாட்சி இல்லாத செயல்... ஜெயலலிதாவை முதல்வராக்கியே தீருவது என்ற தீவிரத்தில் எம்.ஜி.ஆர். உருவாக்கிய ஜானகி ஆட்சியைக்கூட நாங்கள் கவிழ்த்தோம்... எம்.ஜி.ஆர். புகழைப் பாடியதைத் தவிர - ஜெயலலிதாவை ஆதரித்து தமிழகத்தில் மீண்டும் எம்.ஜி.ஆர். ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று நினைத்ததைத் தவிர - வேறு எந்த பாவத்தையும் நாங்கள் செய்யவில்லை...'' என்றனர்.

''... இதற்காக என் முகத்தில் திராவகம் வீசி என் குடும்பத்தையே கொலை செய்ய முயற்சித்தார்கள். அதற்கு நான் தொடுத்த வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு ஜெயலலிதா கூறியபோது, ... 'வீட்டில் கலந்து பேசி முடிவு செய்கிறேன்' என்றேன்... ஜெயலலிதா, நாகரீகமற்ற முறையில் 'என்னய்யா பெரிய குடும்பம்! உன் அம்மாவைக் கேட்காமல் எதுவும் செய்ய மாட்டாயோ?' என்று கேவலமாகப் பேசி என்னை வீட்டை விட்டுத் துரத்தினார். அவரால் தாய்குலத்திற்கே (!) அவமானம்'' என்று கண்ணை கசக்கினார், கே.கே.எஸ்.எஸ்.ஆர். ''...எங்களைப் போன்ற முன்னணித் தலைவர்கள் ஜெயலலிதாவை நேரில் பார்த்து ஒன்றரை வருடமாகிவிட்டது. அங்கு இருக்கும் தலைவர்கள் எஸ்.டி.சோமசுந்தரம், மாதவன், ஆர்.எம்.வீரப்பன் போன்றோர் 6 மாதமாக ஜெயலலிதாவை பார்க்கவில்லை'' என்றனர்.

''...பொதுக்கூட்டங்களில் பேசுவதற்குக் கூட... நாங்கள் தடுக்கப்பட்டோம். ஆனால் அமைதி காத்தோம். பலமுறை அவமானப்படுத்தப்பட்ட போதும் எம்.ஜி.ஆரின் தொண்டர்களை மனதில் வைத்துப் பொறுத்துக் கொண்டோம்..'' என்றனர். ''ஜெயலலிதா, வீட்டு முற்றத்தில் வளர்ப்பு பிராணிகளில் ஒன்றாகக் கூட எங்களை ஏற்கவில்லை. இருந்தும் நாங்கள் அவரை சுற்றி சுற்றி வந்தோம்'' என சொரணையை உதிர்த்துவிட்டு பிழைப்பு நடத்தியதை பகிரங்கப்படுத்தி அதிலும் அனுதாபம் தேடினர்.

கட்சி வேட்பாளர் தேர்வுக்கும் பணம் கறக்கிறார். கட்சி சொத்தை விற்கிறார், என்று புதிதாக கண்டுபிடித்தது போல் கூப்பாடு போட்டனர். ஜெயலலிதா படத்தை தொண்டர்களை விட்டு கொளுத்தினர் ''...அ.தி.மு.க. வளர்ச்சிப் பாதையில் செல்லாமல் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது. எனவே கட்சியின் மூத்த தலைவர்களை சந்தித்து நல்ல முடிவு எடுக்க வேண்டும். எம்.ஜி.ஆரின் ஆட்சியை ஏற்படுத்த உங்களின் கீழ் பணியாற்ற நாங்கள் தயாராக உள்ளோம்'' என்றனர்.

மூத்த தலைவர்கள் என்று இவர்கள் குறிப்பிடும் நபர்கள் நெடுஞ்செழியன், பண்ருட்டி ராமச்சந்திரன், ஆர்.எம்.வீரப்பன் ஆகியோர்தான்! ஜெயலலிதா இந்த 'மூத்ததலைவர்'களை விரட்டியடித்த போதும், நக்கல் செய்தபோதும், பதவி பறிப்பு, பதவி குறைப்பு என்று அவமானப்படுத்திய போதும் எதிர்க்காதது மட்டுமல்ல அதை நியாயப்படுத்தியவர்களும் இவர்கள்தான்! ஜெயலலிதா விரட்டியவுடன் புதிய எஜமானனை தேடி நாயாய் அலைகிறார்கள். யாரும் கிடைக்காவிட்டால் ஜெயலலிதாவிடமே திரும்பி வந்து விடுவார்கள்! தாயிடமே வந்துவிட்டதாக கூச்சமில்லாமல் பிறகு பல்லைக் காட்டுவார்கள். ஏற்கனவே இவர்கள் 'உதிர்ந்த மயிராகி' ஒட்டிக் கொண்டவர்கள்தான்!

பாசிஸ்டுகளின் அடிவருடிகளைப் பொறுத்தவரை சுயமரியாதை - தன்மானம் என்பதெல்லாம் நக்கிப் பிழைப்பதுதான்!

● குணசேகரன்

படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

17 - 18

16-31 ஜூலை —
1-15 ஆகஸ்ட் '90

உள்நாடு
தனிஇதழ் : ரூ.2.
ஆண்டு சந்தா : ரூ.48

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுசந்தா : US$ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

## ஜனதாதள அரசியல் நெருக்கடி:

# பேரங்கள் - முறிவுகள் - பேரங்கள்!

அரியானாவில் தேவிலால், சௌதாலா கும்பல் நடத்திய ஆட்சிக் கவிழ்ப்பு - பதவியேற்பு சாகசத்தைத் தொடர்ந்து ஜனதாதளம் - தேசிய முன்னணி அரசாங்கத்தைக் குலுக்கிய ஐந்து நாள் அரசியல் நெருக்கடி ஒரு வழியாகத் தீர்ந்தது. அதன் ஆதரவாளர்கள் பலர் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர். இது அரசியல் ஒழுக்க நெறிமுறைக்கும் ஜனநாயகத்துக்கும் அவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதமர் விசுவநாத் பிரதாப் சிங்குக்கும் கிடைத்த மகத்தான வெற்றி என்றும் சிலர் குதூகலிக்கின்றனர். ஆனால் இது ஒரு தற்காலிகத் தீர்வு, தற்காலிக வெற்றிதான் என்பதை அனைவரும் அறிவர்.

இதையே கூட தேவிலால் - சௌதாலா கும்பலுக்குச் சில 'வெகுமதிகள்' கொடுத்துத்தான் சாதிக்க முடிந்தது. பதவி வெறியனும் கொலைகாரனும் கொடிய நிலப்பிரபுவுமான சௌதாலாவுக்கு ஜனதாதள பொதுச் செயலாளர் பதவி; அவர்களது அடிவருடிகள் ஜனதா தள அரசியல் விவகாரக் கமிட்டி எனும் உயர்மட்டக் குழுவில் இடம் பெறுவர்; கட்சிக் கட்டுப்பாட்டுக் கமிட்டிக்கு அவர்களது விசுவாசி பாபுல் ரெட்டிதான் தலைவர்; சௌதாலாவின் இடத்தில் அவரது எடுபிடி உக்கும்சிங்தான் அரியானா முதல்வராவார். இத்தனைக்கும் பிறகு கூட தேவிலால் - சௌதாலா கும்பல் சும்மா இருந்துவிடாது. வி.பி.சிங் - அருண்நேரு கும்பலைப் பழிவாங்குவதற்குத் தொடர்ந்து முயலும்; ஜனதா தள - தேசிய முன்னணி அரசை உருட்டி மிரட்டவும், மீண்டும் பதவிகளைக் கைப்பற்றவும், சந்திரசேகர், ராஜீவ் கும்பல்களுடன் கள்ளக்கூட்டுச் சேர்ந்து, அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தவும் ஆட்சியைக் கவிழ்க்கவும் தயங்காது. இதில் யாருக்குமே சந்தேகம் கிடையாது.

'நித்திய கண்டம் பூரண ஆயுசு' என்பதை அதன் பிறப்பிலேயே உள்ளடக்கியிருப்பதுதான் ஜனதாதளம் - தேசிய முன்னணி அரசாங்கம். லஞ்சஊழல், அதிகார முறைகேடுகள், அரசு பயங்கரவாதம் போன்றவைகள் காரணமாக பாசிச ராஜீவ் கும்பலின் அரசாங்கத்தின் மீது மக்கள் வெறுப்புற்றிருந்தார்கள். அதைப் பயன்படுத்திக் கொண்டு சில ஜாதித் தலைவர்கள், பதவி வெறியர்கள், கட்சி மாறிகள், பிழைப்புவாதிகள், கிரிமினல் - பொறுக்கி அரசியல் பிரமுகர்கள் தற்காலிகக் கூட்டுச்சேர்ந்து ஜனதாதளக் கட்சி அமைத்தனர். இதே தன்மைகளைக் கொண்ட சில பிராந்தியக் கட்சிகளுடன் சேர்ந்து தேசிய முன்னணி அமைத்தனர். இது என்னதான் அரசியல் ஒழுக்கநெறி, ஜனநாயக மாண்பு மற்றும் முற்போக்குக் கூச்சல் போட்ட போதிலும் காங்கிரசு — பாசிச ராஜீவ் கும்பலின் இலட்சியங்கள் - கொள்கைகளில், அடிப்படையில் மாறுபட்டதில்லை. இதன் கடந்த ஏழுமாத ஆட்சியே அதற்கு நிரூபணமாக விளக்குகிறது.

நாடாளுமன்றத் தேர்தல்கள் முடிந்ததும் மதவெறி பாரதீய ஜனதா, போலிக் கம்யூனிஸ்டுகளின் தயவில் ஆட்சி அமைத்துவிட முடியும் என்றதுமே ஜனதாதளத்துக்குள் பதவிச் சண்டை முற்றிவிட்டது. அரசியல் ஒழுக்கநெறி, ஜனநாயக மாண்புகளை எல்லாம் காற்றில் பறக்கவிட்டுவிட்டு தேவிலால் - வி.பி.சிங் கோஷ்டிகள் பதவிகளைப் பகிர்ந்து கொள்வதற்கான இரகசிய பேரங்கள் - ஒப்பந்தங்கள் போட்டுக் கொண்டன. பிரதமர் பதவிக்கான சந்திரசேகரின் போட்டியை சதி - மோசடி மூலம் முறியடித்து வி.பி.சிங் கைப்பற்றினார். இதற்கு ஈடாக தேவிலாலுக்குத் துணைப்பிரதமர், அவரது மகன் சௌதாலாவுக்கு அரியானா முதல்வர் பதவி, தேவிலாலின் விசுவாசிகளுக்கு மேலும் மூன்று மாநில முதல்வர் பதவிகள், இன்னும் சிலருக்கு மத்திய அமைச்சர்கள், மாநில கவர்னர் பதவிகள் ஆகியன அளிக்கப்பட்டன.

தேவிலால் கும்பலைப் போலவே, வி.பி.சிங், அருண்நேரு, அஜித்சிங், சந்திரசேகர் கோஷ்டிகளும் குடுமிப்பிடிச் சண்டை போட்டு பதவிகளைப் பகிர்ந்து கொண்டன. அதோடு தேசிய முன்னணிக் கட்சிகளுக்கும், அதன் ஆதரவு - கூட்டணிக் கட்சிகளுக்கும் கூட பங்கு வைக்கப்பட்டது. பதவிகளைப் பிடிப்பதோடு பஞ்சாப் - காஷ்மீர், நிதி - தொழில், அயலுறவு போன்ற பல விவகாரங்களிலும் இந்தக் கோஷ்டிகளும் கட்சிகளும் பல்வேறு நிர்ப்பந்தங்கள், உருட்டல் மிரட்டல்களில் ஈடுபட்டன. இதற்கிடையே மாநில ஜனதா தளத்தலைவர்கள் பதவிகளைப் பிடிப்பதிலும் ஈடுபட்டார் தேவிலால். பதவிவெறி தலைக்கேறி பிரதமர் பதவியைக் குறிவைத்து சந்திரசேகர், ராஜீவ் கும்பல்களுடன் இரகசிய பேரங்கள் நடத்தினார்.

ஆனால் தேவிலால் குடும்பத்திலேயே பதவிச் சண்டை வெடித்தது. அவரது இன்னொரு மகன் ரஞ்ஜித்சிங், அண்ணனும் அரியானா முதல்வருமான சௌதாலாவுக்கு எதிராக ஜாட் ஜாதி ஆதரவைத் திரட்டி மேகம் தொகுதி இடைத் தேர்தலில் போட்டி வேட்பாளரை நிறுத்தினார். தோல்வி பயம் முற்றியதால் வேட்பாளரை நிறுத்தினார். தோல்வி பயம் முற்றியதால் பகிரங்கமாகவே கொலைகளிலும், ஓட்டுச் சாவடிகளைக் கைப்பற்றுவதிலும் ஈடுபட்டார் சௌதாலா. இதைப் பயன்படுத்திக் கொண்டு ரஞ்ஜித்சிங் கும்பலை மறைமுகமாக ஆதரித்ததுடன், பத்திரிக்கைகளின் துணை கொண்டு தேவிலால் - சந்திரசேகர் ராஜீவ் கூட்டையும் அம்பலப்படுத்தின வி.பி.சிங், அருண்நேரு, அஜித்சிங் கோஷ்டிகள். பாரதீய ஜனதாவும் போலிக் கம்யூனிஸ்டுகளும் இதற்கு ஊக்கமளித்தனர். சௌதாலாவை விரட்டும் முயற்சி நடப்பதைக் கண்டு தேவிலால் ராஜினாமா செய்வதாக நாடகமாடி, நிர்ப்பந்தம் கொடுத்து பதவியைக் காப்பாற்றிக் கொண்டார்.

மேகம் தொகுதி வன்முறைகளை வைத்து அங்கு நடந்த தேர்தலை ரத்து செய்தார்கள் வி.பி.சிங்கும் ஆதரவுக் கோஷ்டிகளும். பிறகு வந்த ஜனதா தளத் தலைவர் தேர்தலை முடக்கியதோடு, தனது பிரதிநிதி பொம்மையைப் பதவியில் அமர்த்துவதில், தேவிலால் - சந்திரசேகர் கூட்டு வெற்றி பெற்றது. சௌதாலா அரியானா முதல்வராக நீடிக்க வேண்டுமானால் எம்.எல்.ஏ. வாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதற்காக தர்பகலான் மற்றும் மேகம் ஆகிய இருதொகுதி

படிப்பகம்

www.padippakam.com



களில் அவர் போட்டியிட்டார். மேகம் தொகுதியில் வெற்றி பெற முடியாது என்று உறுதியாகிவிடவே ஒரு கூலி வேட்பாளரை நிறுத்தி, அவரையும் கொன்று தேர்தலை ரத்து செய்ததோடு, பழியைப் போட்டி வேட்பாளர் மீது சுமத்தியது தேவிலால் - சௌதாலா கும்பல். ஆள்பலம், பணபலம், அதிகாரபலம் ஆகியவற்றை வைத்து தர்பகலான் தொகுதியில் வெற்றி பெற்றது.

மேகம் தொகுதி படுகொலைகளுக்காக சௌதாலா பதவி விலக வேண்டுமென சந்திரசேகர் - ராஜீவ் கும்பல்கள் தவிர அனைத்துப் பிரிவுகள், கட்சிகளும் பத்திரிக்கைகளும் கடும் பிரச்சாரம், நிர்ப்பந்தங்களில் இறங்கின. இரண்டாவது முறையாக ஜனதா தளப் பிளவு - அரசியல் நெருக்கடி எழுந்தது. சௌதாலாவை நீக்கியதோடு, மேகம் கொலைகள் பற்றி சி.பி.ஐ. மற்றும் உச்சநீதிமன்ற விசாரணைகள் செய்வதாக பிரதமர் வாக்களித்தார். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. பிரதமருக்குக் கட்டுப்பட மறுத்துவந்த தேவிலால் அவரது அரசியல் கூட்டாளியான ராமகிருஷ்ண ஹெக்டேயின் ஊழல்களை அம்பலப்படுத்தி அரசியலில் இருந்தே விரட்டுவதில் வெற்றி பெற்றார். இதற்கிடையே சந்திரசேகர் - ராஜீவுடன் பேரங்களை முடித்துக் கொண்டு, வி.பி. சிங்குக்கு மேலும் நிர்ப்பந்தங்களை உருவாக்கினார்.

ஜூலை இரண்டாம் வாரம் ஒரு விருந்தில் சந்தித்து, தேவிலால் - வி.பி.சிங் ஒரு உடன்பாட்டிற்கு வந்தனர். அதன்படி சௌதாலாவுக்கு அரியானா முதல்வர் மற்றும் ஜனதாதளப் பொதுச் செயலாளர் பதவிகள் தருவது, தேவிலாலின் எடுபிடி தீபக் என்பவருக்கு தூதர் பதவி தருவது என்று முடிவானது. அடுத்தநாளே தேவிலால் சௌதாலா கும்பல் அரியானாவில் ஆட்சிக் கவிழ்ப்பு - பதவியேற்பு சாகசத்தை நடத்தியது. இதைத் தொடர்ந்து ஜனதாதள - தேசிய முன்னணி அரசுக்கு மூன்றாவது நெருக்கடி எழுந்து முற்றியது.

சௌதாலாவை முதல்வராகத் தேர்ந்தெடுத்தது, அரியானா எம்.எல்.ஏக்களின் ஜனநாயக உரிமை; அதில் தான் தலையிடுவதில்லை என முதலில் நியாயப்படுத்தினார், வி.பி.சிங். பிறகு அருண்நேரு கும்பல் ராஜினாமா செய்து, சௌதாலாவை நீக்கும்படி நிர்ப்பந்தித்து அரசியல் ஒழுக்க நெறி பற்றிப் பேசவே, திடீர் 'பல்டி' அடித்தார். தானும் பிரதமர் பதவியில் இருந்து விலகுவதாக நாடகமாடினார். தேவிலால் - சந்திரசேகர் - ராஜீவ் கூட்டணியைத் தவிர எல்லா கோஷ்டிகளும், கூட்டணிக் கட்சிகளும் வி.பி.சிங் - அருண்நேருவுக்கு ஆதரவாகத் திரண்டன. பத்திரிக்கைகளும் பக்கபலமாக வந்து பெரும் ஆரவாரம் செய்தன. இவை அனைத்தும் சேர்ந்து தேவிலாலைத் தனிமைப்படுத்திப் பின்வாங்கச் செய்வதிலும், சௌதாலாவைப் பதவி விலகச் செய்வதிலும் தற்காலிகமாக வெற்றி பெற்றுவிட்டன. இதைத் தொடர்ந்து வி.பி.சிங்கின் தலைமை கேள்விக்கிடமின்றி எல்லாத்தரப்பு ஆதரவைப் பெற்று விட்டது; இனி அரசியல் ஒழுக்க நெறியில் வலிந்து நின்று அவர் செயல்பட வேண்டும் என அவரது ஆதரவு சக்திகள் உசுப்பி விடுகின்றன. அப்படி அவர் துணிந்தால் மீண்டும் நெருக்கடி முற்றுவதும் ஜனதாதள - தேசிய முன்னணி அரசே வீழ்வதும் கூட நடக்கும். மத்தியில் மட்டுமல்ல, மாநில ஜனதாதள அரசுகளுக்கும் கூட இதே கதிதான்.

பதவிக்காக நடக்கும் இந்தக் குடுமிப்பிடிச் சண்டையையே ஏதோ இலட்சியம், கொள்கைக்காக நடப்பதைப் போல இரண்டு தரப்புமே கூறிக் கொள்கின்றன. கோயங்கா, பிர்லா, ஜெயின், அம்பானி முதலிய ஏகபோக முதலாளிகள் தனக்கு எதிராக சதி செய்து மேகம் போன்ற பிரச்சினைகளைப் பெரிதுபடுத்துவதாகக் கூறுகிறது தேவிலால் - சௌதாலா கும்பல். வி.பி.சிங் - அருண் நேரு போன்றவர்கள் நகர்ப்புற மேட்டுக் குடியினர் என்றும், தான் கிராமப்புற விவசாயிகள் நலனுக்காகப் போராடுவதாகவும் சவடால் அடிக்கிறது. வி.பி.சிங் - அருண்நேரு கோஷ்டிகளோ, தாம் அரசியல் ஒழுக்க நெறி, ஜனநாயக மாண்புகளுக்காகப் போராடுவதாக ஆரவாரம் செய்கிறார்கள். அதே சமயம் துரோகிகள், திருடர்கள் என்றும் கிராமப்புறக் கொடியவர்கள், மோசடி - மிரட்டல் பேர்வழிகள், குரூரமான பதவி வெறியர்கள் என்றும் ஒருவரை ஒருவர் ஏசிக் கொள்கின்றனர்.

இவ்வாறு அரசியல் நெருக்கடிகளுக்குள் சிக்கியிருப்பது ஜனதாதளம் - தேசிய முன்னணி கட்சிகளும் அரசாங்கங்களும் மட்டுமல்ல. நாடாளுமன்ற அரசியல் அமைப்பு முழுவதும்தான் என்பதைச் சற்று ஆழமாகப் பார்க்கும் எவரும் புரிந்து கொள்ள முடியும். வி.பி.சிங்கை விட்டால் ஜனதாதளம் - தேசிய முன்னணிக்கு வேறு தலைமை கிடையாது; ஜனதாதளம் - தேசிய முன்னணியை விட்டால் இந்த அரசியல் அமைப்பில் ஆட்சி நடத்த வேறு நாதி கிடையாது என்கிற நிலை இதைத்தானே காட்டுகிறது. இப்போதைய அரசியல் அமைப்பில் நான்கு வகையான சக்திகள் உருவாகியுள்ளன. ஒன்று, பதவியிழந்துள்ள பாசிச ராஜீவ் கும்பல். மற்றது, அதற்கு மாற்றாக ஆட்சியைப் பிடித்துள்ள ஜாதி - குழுத்தலைவர்கள், பதவிவெறியர்கள், கட்சிமாறிகள், பிழைப்புவாதிகள், கிரிமினல் - பொறுக்கி அரசியல் பிரமுகர்கள் அடங்கிய ஜனதாதளம் - தேசிய முன்னணிக் கூட்டு. இன்னொன்று, பதவியைப் பிடிக்கக் காத்திருக்கும் இந்துமதவெறி பாசிச ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா கட்சி. பிறிதொன்று, சந்தர்ப்பவாத, கூட்டுகளுக்காகக் காத்திருக்கும் போலிக் கம்யூனிஸ்டுகள் - போலி சோசலிஸ்டுகள் அடங்கிய இடதுசாரிக் கூட்டு. இவை எதுவுமே நாட்டுக்கும், மக்களுக்கும் ஜனநாயகத்துக்கும் நல்லது செய்யமுடியாது. ஆகவே இப்படிப்பட்ட பாசிச, பதவி வெறி, மதவெறி, சந்தர்ப்பவாத சக்திகளை மட்டுமே உருவாக்கக்கூடியது தான் இந்த நாடாளுமன்ற அமைப்பு என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு வருகிறது. ●

# ரூ.10,000 வரையிலான விவசாயக் கடன் தள்ளுபடி:

இலவச - கவர்ச்சித் திட்ட மயக்கு மொழிகளால் பாமர மக்களை ஏய்த்து வரும் கருணாநிதி, விவசாயக் கடன் தள்ளுபடி என்ற இன்னுமொரு மோசடியை அண்மையில் அறிவித்துள்ளார். ரூ.10,000 வரையிலான கடன்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்படும்; விவசாயிகள் மட்டுமின்றி கைத்தறி - கிராமக் கைவினைஞர்களும் இதனால் பயன்பெறுவர்; கடன் நிவாரணப் பணி உடனடியாகத் தொடங்கும் என்று கடந்த ஜூன் மாத இறுதியில் கருணாநிதி பரபரப்பாக இத்திட்டத்தை அறிவித்தார்.

கருணாநிதி எந்த ஒரு சலுகை - கவர்ச்சித் திட்டம் அறிவித்தாலும் அதனால் ஆதாயமடையும் கழகக் கண்மணிகளும், தொழில் - வர்த்தக சூதாடிகளும் 'நன்றி! நன்றி!' என்று ஆளுயர போஸ்டர் ஒட்டுவது வழக்கம். ஆனால் ரூ.10,000 வரை கடன் தள்ளுபடி செய்யும் திட்டத்துக்கு நன்றி தெரிவிக்க எந்த விவசாயியும் முன்வரவில்லை. அந்த அளவுக்கு எடுத்த எடுப்பிலேயே இந்தத் திட்டம் அம்பலப்பட்டுப் போயுள்ளது.

கருணாநிதியின் அறிவிப்பு ஏதோ புதுமையானதோ புரட்சிகரமானதோ அல்ல. இது தேசிய முன்னணி அரசின் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் திட்டம். ரூ.10,000 வரையிலான விவசாயக் கடன் அனைத்தையும் நிபந்தனையின்றி தள்ளுபடி செய்வதாக தேர்தல் வாக்குறுதி அளித்திருந்த தேசிய முன்னணி, ஆட்சிக்கு வந்தபின் போதிய நிதி ஆதாரமில்லை என்று காரணங்காட்டி இழுத்தடித்து வந்தது. பின்னர் அனைத்து தரப்பிலும் நிர்ப்பந்தம் வந்ததும் அரசுடமை வங்கிகளிலும், கிராமப்புற வங்கிகளிலும் விவசாயிகள் பெற்றுள்ள ரூ.10,000 வரையிலான கடன்களை ரத்து செய்வதாக அறிவித்தது. அதேசமயம் கூட்டுறவு சொசைட்டிகளில் விவசாயிகள் வாங்கிய கடனைத் தள்ளுபடி செய்யும் பொறுப்பை மாநில அரசுகளின் தலையில் கட்டியது.

இது உங்கள் தேர்தல் வாக்குறுதி. இதனை நிறைவேற்ற எமது மாநில அரசின் கஜானாவைக் காலி செய்ய மாட்டோம் என்று எதிர்கட்சியினரும் தேசிய முன்னணியின் கூட்டணி கட்சியினரும் எதிர்ப்பு தெரிவித்தனர். அண்மையில் நடந்த தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்திலும் கடன் தள்ளுபடி விவகாரத்தையொட்டி, காரசார



படிப்பகம்

www.padippakam.com

# ...ன்னுமொரு மோசடி!

மான விவாதம் நடந்தது. அதன்பிறகு கூட்டுறவு கடன் தள்ளுபடியில் 50 சதவிகிதத்தை மட்டுமே மத்திய அரசு ஏற்பதாக அறிவித்தது. ஆயினும் பல மாநில அரசுகள் இதை ஏற்க மறுத்து முழுவதையும் மத்திய அரசே ஏற்க வேண்டுமெனக் கோரின. பின்னர், மாநில அரசுகள் ரிசர்வ் வங்கியிடம் கடன் பெற்று இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும், இக்கடனை மூன்றாண்டுகளுக்குள் மூன்று தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டுமென்றும் நிதிமந்திரி மது தண்டவதே இப்போது அறிவித்துள்ளார்.

இருப்பினும் ரிசர்வ் வங்கியிடம் கடன் பெற்று சுமை ஏற்றிக் கொள்ள எந்த மாநில அரசும் தயாராக இல்லை. ஜனதாதளம் ஆட்சி செய்யும் மாநில அரசுகள் மட்டுமே இத்திட்டத்தை ஏற்றுள்ளன. இதர மாநில அரசுகள் மத்திய அரசு ஏற்கும் அளவுக்கே கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்ய முன்வந்துள்ளன. எனவே, அந்தந்த மாநில அரசுகளின் தன்மைக்கேற்ப கடன் தள்ளுபடி திட்டம் சுருங்கிவிட்டது.

இதன்படியே கருணாநிதியும் தமது அரசுக்கு சுமை ஏற்படாத வகையில் இக்கடன் தள்ளுபடி திட்டத்தை அறிவித்துள்ளார். புதிய நிபந்தனைகளை விதித்து விவசாயிகள் இதனால் பயன்பெற முடியாதபடி பட்டை நாமத்தைச் சாத்திவிட்டார். அதாவது, கூட்டுறவு சங்கத்தில் 1.4.86க்கு பிறகு கடன் வாங்கி அது 2.10.89 வரை நிலுவையாக இருக்க வேண்டும். இக்காலத்தில் கடன் பெற்றவர் வாழும் பகுதி வறட்சிப் பகுதி என அரசு அறிவித்திருக்க வேண்டும். இந்த வறட்சி காலத்தில் கடன் பெற்ற விவசாயிகள் அனாவாரி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் என்பது கருணாநிதி அரசு விதித்துள்ள நிபந்தனை. இந்நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விவசாயிகளுக்கு மட்டுமே கடன் தள்ளுபடி செய்யப்படும்.



இந்நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தாலும் அவ்வளவு சாதாரணமாக எளிதில் கடன் தள்ளுபடியை விவசாயிகள் பெற்றுவிட முடியாது. கூட்டுறவு சங்கங்கள் தள்ளுபடிக்குத் தகுதியான விவசாயிகளின் பட்டியலைத் தயாரிக்கும். அதன்பிறகு மாவட்ட கூட்டுறவு வங்கி அதைப் பரிசீலித்து முறைப்படுத்தும். அதன் பிறகு மாவட்ட மாஜிஸ்திரேட், மாவட்ட கூட்டுறவு வங்கி செயலர் மற்றும் கிராம சொசைட்டியின் பிரதிநிதி ஆகியோரைக் கொண்ட பரிசீலனைக் கமிட்டி அதுபற்றி இறுதி முடிவெடுக்கும். ஆக, அதிகார வர்க்க இழுத்தடிப்புகள், ஆளுங்கட்சியின் தலையீடுகளுக்குப் பிறகு தான் கடன் தள்ளுபடியை விவசாயிகள் பெறமுடியும்.

இதிலே கொடுமை என்னவென்றால், கடன் பெற்ற விவசாயிகள் வறட்சி காலத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரால வழங்கப்படும் அனாவாரி சான்றிதழைப் பெற்றிருந்தால் தான் கடன் தள்ளுபடிக்கு விண்ணப்பிக்க முடியும். அனாவாரி சான்றிதழ் என்றால் என்ன என்பதே பல விவசாயிகளுக்குத் தெரியாது. மேலும் அதனைப் பெறுவது மிகவும் கடினம். அதிகாரிகள் சோதனையிட்டதன் அடிப்படையில்தான் இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கூட, விவசாயிகள் இச்சான்றிதழைப் பெற்றிருக்க மாட்டார்கள்.

மேலும் அனாவாரி சான்றிதழ் இருந்தால்தான் கடனை ரத்து செய்ய முடியும் என்று நிபந்தனை போட்டால், ஒரு கடனைக்கூட வங்கிகள் ரத்து செய்ய முடியாது. ஏனெனில், தமிழகத்தில் ஒரு சில மாவட்டங்கள் மட்டுமே கடந்த மூன்றாண்டுகளில் வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக தஞ்சை, திருச்சி மாவட்ட விவசாயிகள் இத்திட்டத்தால் பலனடைய முடியாது. ஏனெனில் இம்மாவட்டங்கள் வறட்சி பகுதியாக அறிவிக்கப்படவில்லை. அனாவாரி சான்றிதழும் வழங்கப்படவில்லை.

புதிய ஆட்சியாளர்களின் தேர்தல் வாக்குறுதியை நம்பி பல விவசாயிகள் தமது கடனை இதுவரை திருப்பிச் செலுத்தாமல் இருந்தனர். தற்போதைய நிபந்தனையின் படி கடன் தள்ளுபடிக்குத் தகுதியான விவசாயிகள் தவிர மற்றவர்கள் அனைவரும் தங்களது முழுக்கடனையும் திரும்பச் செலுத்தினால்தான் புதிதாகக் கடனைப் பெறமுடியும். கடைசியில், கடன் நிவாரணமும் இல்லாமல் புதிதாகக் கடனைப் பெறவும் முடியாமல் விவசாயிகள் வஞ்சிக்கப்பட்டு விட்டார்கள்.

சில விவசாய சங்கங்கள், இந்நிபந்தனைகளை விலக்கிக் கொள்ளுமாறு வலியுறுத்திய போது, மத்திய அரசு போதிய அளவு நிதியுதவி செய்தால் எந்த நிபந்தனையும் விதிக்க வேண்டிய அவசியமிருக்காது என்று மத்திய அரசு மீது கருணாநிதி பழியைப் போடுகிறார். மத்திய அரசோ நாங்கள் இத்திட்டத்திற்கு பாதியளவு நிதிப் பொறுப்பேற்றுள்ளோம்; மீதியை ரிசர்வ் வங்கியிடம் கடன் வாங்கி நிறைவேற்றுமாறு மாநில அரசுகளுக்கு கூறியுள்ளோம் என்று மாநில அரசுகள் மீது பழியைப் போடுகிறது. இப்படி ஒருவர் மீது ஒருவர் பழி சுமத்திக் கொண்டு விவசாயிகளை ஏய்ப்பதில் குறியாக உள்ளனர்.

மேலும் இக்கடன் தள்ளுபடி திட்டம் கூட நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகளுக்கு மட்டுமே ஆதாயமானது. வறட்சியாலும் கடன் சுமையாலும் பெருமளவு பாதிக்கப்படும் கூலி - ஏழை - நடுத்தர விவசாயிகளுக்கு இத்திட்டத்தால் எந்த நிவாரணமும் கிடைக்கப் போவதில்லை. இதிலே கூலி - ஏழை விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்க வாய்ப்பில்லை. நடுத்தர விவசாயிகளில் கணிசமானோரும் நிலப்பிரபுக்களும் பணக்கார விவசாயிகளும்தான் அதிகமாக கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்குகின்றனர். ஆனால் தராதரமின்றி நடுத்தர விவசாயிகளையும் நிலப்பிரபுக்களை ஒன்றாக வைத்து அனைவருக்கும் இச்சலுகையை அறிவித்திருப்பதன் மூலம், நிலப்பிரபுக்கள் மேலும் ஆதாயமடையவே புதிய ஆட்சியாளர்கள் வழிவகை செய்துள்ளனர்.

எனவே, மீண்டும் மீண்டும் வஞ்சிக்கப்படும் விவசாயிகள் இனிமேலும் ஓட்டுக் கட்சிகளை நம்புவதில் பலனில்லை. புதிய ஆட்சியாளர்களின் தகிடுதத்தங்களை அம்பலப்படுத்தி கூலி - ஏழை விவசாயிகளுக்கு புதிய நிவாரணமும், நடுத்தர விவசாயிகளுக்கு நிபந்தனையின்றி கடன் தள்ளுபடியும் கோரி அணிதிரண்டு போராடுவதைத் தவிர வேறுவழியும் இல்லை.

● பாலன்.

## அறிவிப்பு!

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

தவிர்க்கவியலாத காரணங்களினால் இதழ் எண்-17 வெளிவருவது தாமதப்பட்டதால் இதழ் எண்-18-ஐயும் சேர்த்து ஒரே இதழாக இவ்விதழை வெளியிட்டுள்ளோம்.

— ஆசிரியர்குழு.

படிப்பகம்

www.padippakam.com

● கருணாநிதி ●வீரமணி ●சோ ●குமரிஅனந்தன்
● மூப்பனார் ●ஜெயலலிதா ●???...

# கொலைப்பட்டியல் விண்ணப்பதாரர்கள்

ஈழத் துரோகிகளான ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத் தலைவர்கள் சென்னையில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, ''ஐயோ! என்னைக் கொல்லச் சதி!'' என்ற கூப்பாடு தமிழக அரசியலை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. ''இந்திய மண்ணிலேயே புலிகள் கொலை வெறியாட்டம் நடத்துமளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது. புலிக்ளின் கொலைப் பட்டியலில் என் பெயரும் உள்ளது'' என்று குமரிஅனந்தன், சோ, மூப்பனார், வாழப்பாடி கோஷ்டிகள் ஒருபுறமும், ''ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினர் என்னையும், வீரமணி உள்ளிட்டு திராவிட இயக்கத் தலைவர்களையும் கொன்றொழிக்க சதி செய்கிறார்கள்'' என்று கருணாநிதியும் ஆளுக்கொரு கொலைப்பட்டியலை அறிவித்து மலிவான பிரச்சாரத்தில் இறங்கியுள்ளனர்.

ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர்கள் கொலையைத் தொடர்ந்து, ''தமிழகத்தில் வன்முறைக் கலாச்சாரம் பெருகிவிட்டது. கடல்தாண்டி வந்து புலிகள் இங்கே கொட்டமடிக்கிறார்கள். கருணாநிதி அரசு புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுகிறது. தமிழகத்தில் யாருடைய உயிருக்கும் பாதுகாப்பில்லை; தமிழகம் பஞ்சாபாக மாறிவிட்டது'' என்று எதிர்க்கட்சியினரான காங்கிரசும், அ.தி.மு.க.வும் கருணாநிதி அரசை டிஸ்மிஸ் செய்யக் கோரி இயக்கம் நடத்தி வருகின்றன. இதனை ஆதரித்து துக்ளக் சோவும், பாரதீய ஜனதாக் கட்சியும், ஒத்துதுகின்றனர். தி.மு.க.வின் கூட்டாளிகளான போலிக் கம்யூனிஸ்டுகள் கூட, போராளிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதாக கருணாநிதி அரசைக் குற்றம் சாட்டுகின்றனர். இதோடு தி.மு.க. எதிர்ப்பு நாளேடுகளும, வார இதழ்களும் புலிகளின் நடமாட்டத்தைப் பற்றிய சில ஆதாரங்களை வெளியிட்டு இந்த விவகாரத்தை உசுப்பி விடுகின்றன. இது ஒரு புறமிருக்க, ஏற்கனவே தஞ்சையில் நெடுமாறன் நடத்திய தன்னுரிமை மாநாட்டைத் தடை செய்தும், முன்னணித் தலைவர்களைக் கைது செய்தும் தமிழக இளைஞர்களிடமும், இனவாதிகளிடமும் கருணாநிதி அம்பலப்பட்டு வெறுப்புக்கு ஆளாகியுள்ளார்.

### தனிமைப்பட்ட கருணாநிதி தயாரித்த கொலைப்பட்டியல்

எனவே அனைத்து தரப்பிலிருந்தும் வரும் தாக்குதலால் தனிமைப்பட்டுப் போயுள்ள கருணாநிதி, அனுதாபம் தேடி ஆதாயமடையும் நோக்கத்துடன், ''என்னைக் கொல்ல சதி!'' என்று கூப்பாடு போடுகிறார். திராவிட இயக்கத் தலைவர்கள் இத்தகைய புரளியை அவிழ்த்து விடுவது ஒன்றும் புதிதல்ல. ஏற்கனவே எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் அவர்களுக்கு முன்னோடியான கருணாநிதியும் கூட இத்தகைய கொலை முயற்சி நாடகத்தைப் பலமுறை அரங்கேற்றி உள்ளனர்.

இப்போதைய நாடகத்தின்படி சூத்திரர் கருணாநிதியைக் கொல்ல பார்ப்பனர்கள் சதி செய்கிறார்கள்! ''பிற்பட்ட - தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் நன்மைக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதனால்தான் இன்றைக்கு ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினர் 'விட்டேனா பார், கருணாநிதியை' என்று தோள் தட்டி நிற்கிறார்கள். இதற்குப் பாசறைகளாக சில பத்திரிகை அலுவலகங்கள் விளங்கிக் கொண்டிருக்கின்றன. திராவிட இயக்கத் தலைவர்களைத் தீர்த்துக் கட்ட ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினரின் ஆலோசனைக் கூட்டங்கள் இந்த பத்திரிகை அலுவலகங்களில் நடைபெறுகின்றன'' என்று கருணாநிதி குற்றம் சாட்டினார்.

உடனே ஆர்.எஸ்.எஸ்.ஐ முந்திக் கொண்டு பாரதீய ஜனதா கட்சியே கருணாநிதியின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்தது. ''ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் மீதும் பத்திரிகைகள் மீதும் பழிவாங்க முற்படுவதைத்தான் இது காட்டுகிறது. இக்குற்றச்சாட்டு ஆதாரமற்றது; நிருபிக்க முடியாதது; கீழ்த்தரமானது'' என்று அக்கட்சியின் துணைத் தலைவர் ஜனா.கிருஷ்ணமூர்த்தி சாடினார். அதைத் தொடர்ந்து ''முதல்வரின் கருத்துக்கள் விஷமத்தனமானவை; எமக்கு சதியிலோ வன்முறையிலோ நம்பிக்கை இல்லை'' என்று ஆர்.எஸ்.எஸ்.-ின் தமிழகத் தலைவர் மறுப்பறிக்கை வெளியிட்டார்.

### பார்ப்பன சூழ்ச்சி! தமிழறிஞரின் கண்டுபிடிப்பு!

ஆனாலும் கருணாநிதியின் 'கொலை முயற்சி' கூப்பாட்டுக்குப் பலன் இல்லாமல் போய்விடவில்லை. எதிர்பார்த்தபடியே தமிழின 'அறிஞர்கள்' இதை ஊதிப் பெருக்கத் தொடங்கி விட்டார்கள். 'உலகத் தமிழினத்தின் ஒரே தலைவர்' கலைஞரின் உயிருக்கு ஆபத்து என்றால் 'நடை கொண்ட படை வேழங்கள்' சும்மா இருக்க முடியுமா? அப்புறம் தமிழன் நாதியற்றுப் போய்விடுவானே! எனவே கருணாநிதியின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கித் தவிக்கும் சாலை இளந்திரையன், தனது ''அறிவியக்கம்'' ஏட்டில் எல்லோரையும் முந்திக் கொண்டு கருணாநிதியின் 'கொலை முயற்சி' கூத்துக்குப் பக்கமேளம் வாசித்தார்.

''பார்ப்பனிய ஆட்சியை நாம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகப் பொறுத்துக் கொண்டோம். அவர்கள் நம்முடைய ஆட்சியை ஐந்தே ஆண்டுகள் கூட பொறுக்க மாட்டார்கள் என்று நம்முடைய தலைவர்கள் எச்சரித்தது எவ்வளவு உண்மை என்பதும் நமக்கு இப்போது புலப்படுகிறது... எந்தப் பத்திரிகையின் அலுவலகங்களில் தமக்கு எதிராகச் சூழ்ச்சி நடப்பதாக கருணாநிதி சொல்லுகிறாரோ, அந்தப் பத்திரிகைகளின் தூண்டுதலால் தான் மாசற்ற தமிழ்ப் பேரறிஞர்களையும் தமக்கு அரணாக விளங்கக் கூடிய தமிழ்த் தொண்டர்களையும் சிறைக்குள்ளே முடக்கிப் போட்டிருக்கிறார் கருணாநிதி. மாற்றாரின் சூழ்ச்சி இவ்வளவு தெளிவாக அம்பலத்துக்கு வந்துவிட்ட இப்போதாவது... கருணாநிதி உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அதன் மூலம் தமக்குப் பாதுகாப்பான அரணை அவர் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்று அறிவியக்கம் சூலை இதழில் சாலையார் தலையங்கம் தீட்டியுள்ளார்.

அதாவது, தஞ்சை தன்னுரிமை மாநாட்டில் தமிழறிஞர்களை கருணாநிதி கைது செய்து சிறையிலடைத்ததற்கு மாற்றாரின் (பார்ப்பனர்களின்) சூழ்ச்சிதான் காரணம். மற்றபடி பதவியைப் பாதுகாத்துக் கொள்ள கருணாநிதி எடுத்த தமிழின விரோத - பிழைப்பு வாத நிலைப்பாடு காரணமல்ல என்ற அரிய கண்டுபிடிப்பை சாலையார் அவிழ்த்து விட்டுள்ளார். ஒருவழியாக, இக்கொலைப் பட்டியலை உருவாக்கியதன் மூலம் கருணாநிதியும் ''தமக்குப் பாதுகாப்பான அரணை வலுப்படுத்திக்'' கொண்டுள்ளார்.

### கொலைப் பட்டியலில் பாசிசக் கோமாளி ''சோ''

தன்னையும் திராவிட இயக்கத் தலைவர்களையும் சேர்த்து கருணாநிதி உருவாக்கிய இந்தக் கொலைப் பட்டியலுக்கு போட்டியாக, அடுத்த சில நாட்களிலேயே தான் புலிகளின் கொலைப் பட்டியலில் இருப்பதாக துக்ளக் ''சோ'' அறிவித்தார்.

'தமிழகம் புலிகளின் பாசறையாகி விட்டது. காயமுற்றவர்கள் என்கிற பெயரில் புலிகள் தடையின்றி தமிழகத்தில் உலாவுகின்றனர். சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் அவர்களைப் போலீசார் ஒன்றும் செய்ய முடிவதில்லை. ஏனெனில் தமிழக அரசே புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுகிறது. மனிதாபிமானம் என்ற பெயரில் குருட்டுத்தனமாக புலிகளைப் பாதுகாக்கின்றனர். என்னைப் போல ஒரு சிலருக்கு புலிகளால் அச்சுறுத்தல் ஏற்படும் நிலை இருந்தபோது அரசு எமக்கு அளித்த பாதுகாப்பில் அர்த்தமிருந்தது. ஆனால் இன்று மாநிலம் முழுவதுமே அச்சுறுத்தலில் உள்ள போது எனக்கு மட்டும் பாதுகாப்பு என்பதில் அர்த்தமில்லை. அது வக்கிரமான வேடிக்கையாகி விட்டது. எனவே எனக்கு அளிக்கப்படும் பாதுகாப்பை ரத்து செய்யக் கோருகிறேன்' என்று ஜூன் 29 அன்று டி.ஐ.ஜி.க்கும் பின்னர் ஜூலை 2ந் தேதியன்று தமிழக உள்துறை செயலர் மற்றும் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும் பகிரங்க கடிதம் எழுதினார். இதனை தனது துக்ளக் ஏட்டில் வெளியிட்டதோடு, 'உயிரைப் பற்றி நான் கவலைப்படுபவன் அல்ல' என்று வீரவசனமும் பேசியுள்ளார்.

கடந்த ஓராண்டு காலமாக உயிருக்கு அஞ்சி பாதுகாப்புடன் நடமாடிய ''சோ'', இப்போது திடீரென பாதுகாப்பே வேண்டாம்; என்னைக் கொல்லச் சதி என்று கூப்பாடு போடுவதிலிருந்தே இதுவும் கீழ்த்தரமான பிரச்சாரம் என்று ஆரம்பத்திலேயே



படிப்பகம்

www.padippakam.com

அம்பலமாகிவிட்டது. வழக்கமாக ''சோ'' வின் படைப்புகளில் தர்க்க - குதர்க்க வாதங்கள் இருக்கும். ஆனால் இப்போதைய அவரது நாடகம், மரபுகளை மீறி கருணாநிதி பாணியிலான கொச்சையான கூத்தாகிவிட்டது. ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர்கள் கொல்லப்பட்ட போதாவது அவர் இந்த 'சதி' நாடகத்தை அரங்கேற்றியிருந்தால் ஓரளவுக்கு நம்ப முடியும். ஆனால் கருணாநிதி குற்றம் சாட்டிய அடுத்த சில நாட்களிலேயே ''சோ'' வும் அதே பாணியில் கொலைப் பட்டியலில் இருப்பதாக ஒப்பாரி வைப்பதைப் பார்க்கும் போது அவசர. கோலத்தில் போடப்படும் போட்டி நாடகம் என்பது புரிந்து விடுகிறது.

ஏற்கனவே தனது ஈழ விடுதலை எதிர்ப்பு, ஆர்.எஸ்.எஸ். ஆதரவு நிலைப்பாட்டினால் தமிழக மக்களிடம் தனிமைப்பட்டுப் போயுள்ள சோ, தஞ்சை தன்னுரிமை மாநாட்டை எதிர்த்தும், தமிழகம் பிரிவினை - பயங்கரவாத சக்திகளின் களமாகிவிட்டது என்று பீதியூட்டியும் கூட தனது அரசியலை நியாயப்படுத்த முடியாத அளவுக்கு மேலும் தனிமைப்பட்டு போயுள்ளார். எனவே இழந்த செல்வாக்கை ஈடுசெய்ய அவருக்கு இப்படியொரு கீழ்த்தரமான அனுதாப அரசியல் அவசியமாகி விட்டது.

பலப்பட்டுப் போன பத்திரிகை இது. கருணாநிதி குடும்பத் தகராறுகளைப் பற்றி கண் - காது - மூக்கு வைத்து கிசுகிசு செய்திகளை வெளியிட்டு கருணாநிதியின் ஆத்திரத்துக்கும் அடக்குமுறைக்கும் ஆளான பத்திரிகை. எனவே கருணாநிதியும் புலிகளும் கூட்டுச் சேர்ந்து தம்மைக் கொல்லச் சதி செய்கின்றனர் என்று காட்டுவதற்காக, ''மர்ம ஆசாமிகள் மோட்டார் சைக்கிளில் வந்தனர்; யாழ்ப்பாண தமிழில் பேசினர்'' என்று வழக்கம் போலவே ஒரு பரபரப்புச் செய்தியை வெளியிட்டு தராசு ஆசிரியர் ஷ்யாமும், தலைமை நிருபர் ஏ.எஸ்.மணியும் தமக்கு பாதுகாப்பு அளிக்கக் கோரினர். அதன்படியே இப்போது அவர்களது வீடுகளிலும், தராசு அலுவலகத்திலும் ஆயுத போலீசார் நிற்கின்றனர்.

### அனுதாபம் தேடும் குற்றவாளிகள்

பட்டியல் இத்துடன் முடியவில்லை. இன்னும் ஜெயலலிதாவுக்கும் பாதுகாப்பு தர வேண்டுமென அவரது கட்சியினரும் தம் பங்குக்கு இப்பட்டியலை விரிவாக்குகிறார்கள். நாளை இன்னும் சிலர் இக்கொலைப் பட்டியலில் சேர்ந்து கொண்டு மேலும் விரிவாக்கலாம். ஆனால் இத்தகைய கொலைப் பட்டியலை உருவாக்கும் எவருமே அனுதாபத்திற்குரிய நேர்மையான அரசியல்வாதிகள் அல்ல; அனைவருமே தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகள்!

அவருக்குப் போட்டியாக கொலைப் பட்டியலை உருவாக்கும் துக்ளக் சோ, ஈழ விடுதலைப் போரை எதிர்த்தும், ராஜீவின் பாசிச நடவடிக்கைகளை ஆதரித்தும் அப்பட்டமாக ஆர்.எஸ்.எஸ். - இந்து வெறியைக் கக்கும் மக்கள் விரோதியாக இனங்காட்டிக் கொண்டுள்ளார். அவருடன் கூட்டு சேர்ந்துள்ள காங்கிரசுப் பெருச்சாளிகளின் பாசிச முகவிலாசம் எல்லோரும் அறிந்தது தான்.

கருணாநிதியோ கடைந்தெடுத்த பிழைப்புவாத அரசியல் நடத்தும் இனத்துரோகி! அவருடன் கொலைப்பட்டியலில் சேர்ந்துள்ள தி.க.வீரமணி, பெரியாரின் பெயரால் கட்சி சொத்துக்களை அனுபவிக்கும் சாயம் வெளுத்துப் போன தமிழின விரோதி!

இவர்களுக்குப் போட்டியாக பட்டியல் உருவாக்கும் பாசிசக் கோமாளி 'சோ', இந்துவெறியைக் கக்கும் மக்கள் விரோதி! அவருடன் சேர்ந்து கொண்டு புதுப்பட்டியல் உருவாக்கும் காங்கிரசு பெருச்சாளிகளோ தேச விரோத, மக்கள் விரோத, ஜனநாயக விரோத, இன விரோத நடவடிக்கைகளில் இறங்கும் பாசிஸ்டுகள்! இப்பட்டியலில் புதிதாகச் சேரும் ஜெயலலிதாவும், பார்ப்பன மற்றும் 'கிசுகிசு' பத்திரிகையாளர்களும், இப்பாசிச கும்பலின் விசுவாசமான பிழைப்புவாத அடிவருடிகள்.



### விரிவடைகிறது கொலைப்பட்டியல்

துக்ளக் 'சோ'வுடன் காங்கிரசு 'தேசிய' வாதிகளும் ஈழ விடுதலை எதிர்ப்பாளர்களும் கூட்டு சேர்ந்து தாங்களும் புலிகளின் மிரட்டலுக்கு ஆளாகியிருப்பதாக கூறிக் கொண்டு புதிய கொலைப் பட்டியலை உருவாக்குகிறார்கள். ''புலிகளிடமிருந்து எனக்கு அனாமதேய மிரட்டல் கடிதங்கள் வருகின்றன. அவர்களின் கொலைப்பட்டியலில் நானும் வைக்கப்பட்டுள்ளேன். ஆனால் எனது உயிர் போவதைப் பற்றி நான் கவலைப்படுபவனல்ல!'' என்று 'தேசியவாதி' குமரி அனந்தன் இப்போது கூட்டுக் கோரஸ் பாடுகிறார்.

ஏற்கனவே போலீஸ் பாதுகாப்புடன் நடமாடும் மூப்பனார், வாழப்பாடி ஆகியோரோடு, தலைவர் பதவிக்கு தானும் தகுதியானவர் என்பதைக் காட்டுவதற்காக இப்படியொரு கொலைப் பட்டியலை உருவாக்கி ஆதாயமடையத் துடிக்கிறார், அவர்.

இவர்களோடு ஈழ விடுதலை எதிர்ப்பு - கிசுகிசு பத்திரிக்கையான ''தராசு'' கூட்டு சேர்ந்துள்ளது. முன்பு ''பிரபாகரன் கொல்லப்பட்டார்'' என்ற வதந்தியையே உண்மையாக்கி பரபரப்பாக செய்தி வெளியிட்டு அம்பலப்பட்டுப் போன பத்திரிகை இது.

இதில் கருணாநிதி தன்னை ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினர் கொல்ல சதி செய்வதாக குற்றம் சாட்டுவதற்கு அடிப்படையே இல்லை. ஏனெனில், இந்திய ஒருமைப்பாடு - ஐக்கியமே தமது கொள்கை என அறிவித்துக் கொண்டு 'பார்ப்பன'க் கொள்கையைத் தான் அவர் விசுவாசமாகச் செயல்படுத்துகிறார். டி.வி.எஸ்., சிம்சன் முதலான பார்ப்பன முதலாளிகளுக்காக தமிழ்த் தொழிலாளிகளை அடக்கி ஒடுக்கும் கருணாநிதி குடும்பமே ஒரு தரகு அதிகார முதலாளியாக முன்னேறிவிட்டது. பாரதீய ஜனதா, இந்து முன்னணி மற்றும் தினமலர் போன்ற பார்ப்பன பத்திரிகைகளின் கோரிக்கைகளை ஏற்று தஞ்சை தன்னுரிமை இயக்கத்தின் மீது தாக்குதல் தொடுத்து பதவி - அதிகாரம் - சொத்துக்காக எதையும் செய்யத் துணியும் தமிழினத் துரோகியாக அவர் காட்டிக் கொண்டுள்ளார். அதைவிட, தஞ்சம் புகுந்த போராளிகளையும், அப்பாவி அகதிகளையும் சிறையிலடைத்து தன்னை ஈழ மக்களின் விரோதியாகவும் நிரூபித்துக் கொண்டுள்ளார்.

எனவே தான் தமது மக்கள் விரோத - இன விரோதக் குற்றங்களுக்காக தண்டிக்கப்படுவோம் என்ற பீதியில் தாங்களாகவே கொலைப்பட்டியலை உருவாக்கி விரிவாக்குகிறார்கள். இக்குற்றங்களுக்கு என்ன தண்டனை என்பதைக் கூட அவர்களே தீர்மானித்து விட்டார்கள். ஆகவே, கீழ்த்தரமான முறையில் அனுதாபத்தைத் தேடும் பொருட்டு தங்களைக் கொல்ல சதி நடப்பதாகக் கூப்பாடு போடுகிறார்கள்.

இந்நிலையில் ஆத்திரமுற்ற சில தனிநபர்களால் அவர்கள் கொல்லப்பட்டால் கூட அவர்கள் பாசிச இந்திராவைப் போல் 'தியாகி'களாகி விடுகிறார்கள். அவர்களது குற்றங்கள் மறைக்கப்பட்டு, அனுதாபத்தைத் திரட்டி, ஓட்டுப் பொறுக்க பிழைப்புவாதிகளுக்கு அது வாய்ப்பாக அமைந்துவிடும். எனவே, தனிமைப்பட்டுப் போயுள்ள இக்குற்றவாளிகளை அம்பலப்படுத்தி, அவமானப்படுத்தி மக்கள் திரள் எழுச்சியில் பகிரங்கமாகத் தண்டிக்க தமிழக மக்கள் புரட்சிப் பாதையில் அணி திரள வேண்டும்.

■ மனோகரன்.

படிப்பகம்

www.padippakam.com




● *பெரியார் கட்டி வளர்த்த திராவிடர் கழகம் இப்போது பெரியாரின் நடைமுறையில் இல்லை என்கிறீர்களே, ஏன்?*

*— கலைஅரசி, ஊரணிபுரம்.*

☆ பகுத்தறிவு, சுயமரியாதை, சமூக விடுதலை ஆகியவற்றைத் தனது இலட்சியமாகக் கொண்டிருந்தார், பெரியார் ஈ.வெ.ரா. அதற்காக சாதி, மத, இன, மொழி ஒடுக்குமுறைகளையும், பெண்ணடிமைத்தனத்தையும், மூடத்தனங்களையும் எதிர்த்துப் போராடினார். இயக்க மறுப்பியல் பொருள் முதல்வாத முதலாளித்துவ தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட பெரியார் சிந்தனையையும் அரசியல் ரீதியில் அவர் செய்து கொண்ட சமரசங்களையும் நாம் ஏற்கவில்லை. இருந்தபோதும் அவரது இலட்சியங்களில் உறுதியாக நின்று போராடினார்; அவை பின்தங்கிய தமிழ்ச் சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க வீச்சை ஏற்படுத்திய முற்போக்கான சீர்திருத்தங்கள் ஆகும். பெரியாருக்குப் பிறகு கட்சியையும் அதன் சொத்துக்களையும் கைப்பற்றிக் கொண்டது, பிழைப்புவாத - காரியவாத சுயநல வீரமணி கும்பல். பெரியாருடைய பெயரைத் தமது கேடான நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்காக அவரது இலட்சியங்களை வெறுமனே உச்சாடனம் செய்தும் கண் துடைப்புக்காக மொழி, இனஉரிமை பெண் விடுதலை, பகுத்தறிவு - சீர்திருத்தப் பாசாங்குகள் செய்தும் ஏய்க்கிறது. மற்றபடி இப்போது வீரமணி கும்பலின் இலட்சியங்கள் இரண்டுதான். தமிழ் நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ சக்திகளுக்குச் சேவை செய்யும் நீதிக்கட்சியின் கொள்கைகளை, குறிப்பாக அதன் 'வகுப்புரிமை - சாதிநலன்'களையே தமிழினத்தின் - சூத்திர சாதியின் நன்மைக்கானவை என்று காட்டி அவற்றுக்காகப் போராடுவது; பெரியார் சேர்த்து வைத்த கட்சிச் சொத்துக்களோடு, தமிழ்ச் சமுதாயத்தையே கொள்ளையிட்டுத் தமது சுயநலன்களுக்காக அனுபவிப்பது. இவற்றை எதிர்க்கும் பகுத்தறிவுத் தமிழர்களையே வெளியேற்றியும், எதிரிகளுக்குக் காட்டிக் கொடுத்தும் துரோகமிழைக்குமளவு வீரமணி கும்பல் சீரழிந்து விட்டது. ஆகவேதான் பெரியார் கட்டி வளர்த்த திராவிடர் கழகம், இப்போது பெரியாரின் நடைமுறையில் இல்லை என்கிறோம்.

● *கலைஞர் 'பாக்கெட்' சாராயம் அமுல்படுத்தியது மக்களுக்கு நல்லதா?*

*— ஜெ.பிலால், கூத்தாநல்லூர்.*

☆ இல்லை. வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்வோர் எண்ணிக்கையிலும்,நிரந்தரமான பஞ்சம் - வறட்சி, வேலையில்லாத் திண்டாட்டத்தால் வெளி மாநிலங்களுக்கு பிழைப்பு தேடிப் போவோர் எண்ணிக்கையிலும், பீகார், ஒரிசாவோடு போட்டி போடுகிறது தமிழகம். இந்நிலையில் கருணாநிதி சாராயத்தால் தமிழக மக்களுக்குக் கேடுதான் விளையும். சாராய சாம்ராஜ்ஜியங்களுக்கும், பொறுக்கி அரசியல் தலைவர்கள் - பிரமுகர்களுக்கும், குறிப்பாக கருணாநிதி கும்பலுக்கும்தான் கோடி கோடியாகக் குவியும்' - லஞ்சமும் கறுப்புப் பணமும்.

● *இன்று இந்தியாவில் ஆட்சி மாற்றத்தின் மூலம் பதவியைப் பிடித்திருக்கும் வி.பி.சிங் ஆட்சி, பாசிச ராஜீவ் ஆட்சி முறைக்கு மாறுபட்டதா?*

*— இரா.கதிரவன், நல்லம்பள்ளி.*

● *பிரதமர் வி.பி.சிங்கைப் பற்றி....?*

*— ஜே.பிலால், கூத்தாநல்லூர்.*

☆ பஞ்சாப், காஷ்மீர் பிரச்சினைகளில் அரசு பயங்கரவாதத்தைத் தொடர்வது; சாதி-மத வெறிச் சக்திகளுடன் கூடி சாதிக் கொலைகள், மதக்கலவரங்களுக்குத் தூபமிடுவது; நிலப்பிரபுக்கள், தரகு அதிகார முதலாளிகள், ஏகாதிபத்தியங்களுக்குத் தாராள சலுகைகள் வழங்குவது - அரசுத் துறையைத் தனியார்களுக்குத் தாரை வார்ப்பது; பல சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வரும்போதே ஒடுக்குமுறைகளையும் ஏவுவது; தேசியவெறி, யுத்தவெறியைத் தூண்டுவது; மாநிலங்களில் ஆட்சிக் கவிழ்ப்புகள் நடத்துவதும் கட்சிக்குள் ஜனநாயகத்தை மறுத்து கோஷ்டிச் சண்டைகள் - கோஷ்டி பலத்தைக் கொண்டு பதவிகளைப் பகிர்ந்து கொள்வது; தேர்தல் கொலைகள், தில்லுமுல்லுகள், சாதி - மத கறுப்புப்பண ஆதிக்கத்தைக் கொண்டு தேர்தல் வெற்றிகளை ஈட்டுவது — இப்படி பல விஷயங்களிலும் காங்கிரசு ஆட்சி - கொள்கைகளில் இருந்து ஜனதாதள ஆட்சி மாறுபட்டதாக இல்லை.

தவிர்க்க முடியாத நிர்பந்தங்கள் காரணமாக சில வித்தியாசங்களும் உண்டு. சிறுபான்மை அரசாக உள்ளது. எனவே கட்சிக்குள் உள்ள கோஷ்டிகள் மற்றும் பாரதீய ஜனதா, போலிக் கம்யூனிஸ்டுகளின் இழுப்புகளுக்கேற்ப சந்தர்ப்பவாதமான, தற்காலிகமான, முரணான முடிவுகள் எடுத்துச் செயல்படுகிறது; பாசிச ராஜீவைப் போல தனிமனித ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. சமரச - சந்தர்ப்பவாத சாகசங்களால்தான் காரியங்களைச் சாதிக்க முடிகிறது. இக்காரணங்களால் நேரடியாக ஜனதாதள - தேசிய முன்னணி தலைமையே பாசிச சக்தியாக வளர முடியவில்லை; எனினும் அரசு எந்திரம் பாசிசமயமாவதும், ஆர்.எஸ்.எஸ். மதவெறி பாசிசம் பலம் பெற்று வருவதும், ஜனதாதள - தேசிய முன்னணித் தலைமையும் ஆட்சியும் அதற்குத் துணைபோவதும் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

● *திரைப்படத் துறை உங்களுக்குப் பிடிக்கவில்லை என்பதனால்தானே 'மக்கள் கவிஞர்' பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தை 'புரட்சி' கவிஞராக அங்கீகரிக்கத் தயங்குகிறீர்கள்?*

*— அன்பன் அறிவழகன், சென்னை-5.*

☆ ''பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரமா? யார் அவர்?'' என்று கேட்கிறார்கள், மக்கள். அவர்தான் ''எத்தனைக் காலந்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே...'' ''தூங்காதே தம்பி தூங்காதே'' ''தம்பிப் பயலே தம்பிப் பயலே சேதி கேளடா'' - போன்ற 'புரட்சிப்' பாடல்களை எழுதியவர் என்று நீங்கள் சொல்வீர்கள். ''இல்லையே! அதெல்லாம் எம்.ஜி.யார் தானே பாடினாரு!'' என்று உங்களை மடக்குவார்கள். ''இல்லை, இல்லை. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் தான் எழுதினார். டி.எம்.எஸ். பாடினார். எம்.ஜி.ஆர். வாயசைத்து நடித்தார்'' என்று சொல்வீர்கள். ''அதெல்லாம் கிடையாது. எம்.ஜி. யாரு பாட்டுத்தான்!'' என்று சொல்லிவிட்டுப் போய் விடுவார்கள். ''ஜனங்களுடைய அறியாமைதான் காரணம். சொன்னாப் புரிஞ்சுக்க மாட்டேங்கிறாங்க!'' என்று சொல்லி ஆறுதலடைந்து கொள்வீர்கள்.

இப்படித்தான் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் புரட்சிப் படைப்புகளை மக்களுக்குச் சொல்ல கடந்த 30 ஆண்டுகளாக போலிக் கம்யூனிஸ்டுகள் முயலுகிறார்கள். மக்களோ அதெல்லாம் எம்.ஜி.ஆரின்–'புரட்சித் தலைவரி'ன் படைப்புகளாகவும், 'புரட்சித் தலைவி'யேஅவற்றுக்கு வாரிசுரிமை உடையவர் என்றும் தான் நம்புகிறார்கள். எம்.ஜி.ஆர். தனிக் கட்சி வைத்து ஆட்சியைப் பிடிப்பதற்கு அரசியல் ரீதியில் போலிக் கம்யூனிஸ்டுகள் உதவினர். அதற்

**''இனிமேலும் அவர்கள் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் ஓர் அங்கம் இல்லை. அதற்கெதிரான சதிகாரர்களாகவும் ஏகாதிபத்திய ஏஜெண்டுகளாகவும் டிராட்ஸ்கியவாதிகள் செயல்படுகிறார்கள்'' என்று தோழர் மாவோ வரையறுத்துள்ளார்.**



படிப்பகம்

www.padippakam.com

கும் முன்பாக எம்.ஜி.ஆரின் தனிநபர் மோகம் - கவர்ச்சி வளர்வ தற்கு உதவினார், பட்டுக்கோட்டையார். ஆகவே என்ன சொல்கிறோம் என்பதைப் போலவே எந்த மேடையில் நின்று சொல்கிறோம் என்பதும் முக்கியமானது; கருத்துதானே முக்கியம் யார் மூலமாவது, முதலாளித்துவ ஏடுகள் போன்ற எந்த மேடையிலாவது வாய்ப்புக் கிடைத்தால் பயன்படுத்திக் கொள்வோம் என்கிற போலிப் புரட்சியாளர்கள் இலக்கியவாதிகளுக்கு பட்டுக்கோட்டையார் ஒரு படிப்பினையாக இருக்கிறார்.

அதுசரி! திரைப்படத் துறையில் பிடித்தமான விஷயம் என்ன இருக்கிறது - விஞ்ஞான ரீதியில் - தொழில்நுட்ப ரீதியில் மிகப் பெரிய மக்கள் திரள் தொடர்பு சாதனம் என்பதைத் தவிர. அதுவும் இப்போது ஆளும்வர்க்கங்களின் கலாச்சார ஒடுக்குமுறைச் சாதனமாகத்தானே பயன்படுகிறது!

•

● *டிராட்ஸ்கியவாதம் என்றால் என்ன? புரட்சியில் அதன் நிலை என்ன? என்பதை விளக்கவும்.*

*— என்.அம்பிகாபதி, சீர்காழி.*

☆ டிராட்ஸ்கியவாதம் பற்றிய விரிவான விளக்கம் தருவது இங்கு சாத்தியமில்லை. அதன் முக்கியமான அம்சங்களை இங்கே தருகிறோம். **தனியொரு நாட்டில் சோசலிசம் சாத்தியமில்லை:** 1917 ருஷ்ய அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து, ஜெர்மனி மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளில் அடுத்தடுத்து புரட்சி வெடிக்கும் என லெனின் - ஸ்டாலின் உட்பட ருஷ்யக் கம்யூனிஸ்டுத் தலைவர்கள் அனைவருமே மதிப்பிட்டனர். ஆனால் அங்கு பல நாடுகளிலும் நடந்த புரட்சிகர எழுச்சியும், தொழிலாளர் இயக்கங்களும் எதிர்ப் புரட்சியினால் ஒடுக்கப்பட்டன. இருந்தபோதும் "ஏகாதிபத்தியக் கட்டமைப்பு என்ற சங்கிலியின் பலவீனமான கண்ணியில் புரட்சி வெடிக்கும்; தனியொரு நாட்டிலேயும் சோசலிசப் புரட்சி வெல்வதும், சோசலிசக் கட்டுமானமும் சாத்தியம்" என்ற லெனினியக் கோட்பாட்டை லெனினும் - ஸ்டாலினும் பின்பற்றினர். அதற்காக ஜெர்மானிய ஏகாதிபத்தியத்துடன் தற்காலிக சமாதான ஒப்பந்தம் புதிய பொருளாதாரக் கொள்கை ஆகியவற்றைப் பயன்படுத்தினார்கள். ஜெர்மனி ஏகாதிபத்தியத்துடன் பிரஸ்ட் லிவ்ஸ்டோக் ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்தும், புதிய பொருளாதாரக் கொள்கையை சீர்குலைத்தும் ருஷ்யாவில் சோசலிசத்தைத் தோல்வியடையச் செய்வதன் மூலம் தனியொரு நாட்டில் சோசலிசம் வெற்றி பெற முடியாது; அடுத்தடுத்த பல நாடுகளில் சோசலிசப் புரட்சி வென்று உலகு தழுவிய ஆதரவின்றி சோசலிச அரசு நீடிக்க முடியாது என்பன நிரூபிக்க முயன்றனர் டிராட்ஸ்கிய வாதிகள்.

**விவசாயிகள் புரட்சிகர சக்திகள் அல்ல:** பின்தங்கிய நாடுகளில் தொழிலாளர் தலைமையில் நடக்கும் ஜனநாயகப் புரட்சியில் விவசாயிகள் தான் தொழிலாளர் வர்க்கத்தின் மிகவும் நம்பகமான கூட்டாளிகள். ஆனால் சிறு உற்பத்தி, தனிஉடமை அடிப்படையான விவசாயிகள் பிற்போக்கானவர்கள், சோசலிசப் புரட்சிக்கு எதிரானவர்கள் என்றும், அதன் காரணமாக உழுபவனுக்கே நிலம் சொந்தம், தொழிலாளர் - விவசாயிகள் கூட்டு, விவசாயிகள் சோவியத்துக்கள் ஆகியவற்றை ஏற்கமுடியாது என்றும் வாதிடுகிறது, டிராட்ஸ்கியவாதம். அதே சமயம் சோவியத் ருஷ்யாவில் விவசாயிகள் கம்யூன்களை உருவாக்குவதற்காக புதிய நிலப்பிரபுக்களான குலக்குகளின் நிலங்களைக் கைப்பற்றும் நடவடிக்கை எடுத்தபோது டிராட்ஸ்கியவாதிகள் குலக்குகளுடன் சேர்ந்து கொண்டு சதி- நாச வேலைகளில் ஈடுபட்டு அதீத சோசலிச வேடம் கலைத்துக் கொண்டனர்.

**எங்கும், எப்போதும் சோசலிசப் புரட்சிதான்:** ஏகாதிபத்திய சகாப்தம் தோன்றி, அக்டோபர் புரட்சி வெற்றியடைந்த பிறகு நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சிக்கு இறுதிவரை தலைமையேற்று நடத்தும் திராணி - தகுதியை முதலாளிவர்க்கம் இழந்துவிட்டது; ஆகவே, சோசலிசம், கம்யூனிசத்தை அதிகபட்சத் திட்டமாகவும், ஜனநாயகத்தைக் குறைந்தபட்சத் திட்டமாகவும் இரண்டு கட்டங்களாகக் கொண்டு பாட்டாளி வர்க்கத் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சியின் மூலமே அதைச் சாதிக்க வேண்டும் என்பது மார்க்சிய - லெனினியமாகும். இதற்கு மாறாக ஜனநாயகப் புரட்சியை நடத்தும் பொறுப்பு முதலாளிகளிடமே விட்டுவிட வேண்டும் என்று ஒருபுறமும், எத்தகைய சமுதாயப் பொருளாதார அமைப்பிருப்பினும் சோசலிசப் புரட்சிதான் என்று மறுபுறமும் இரட்டை நிலை எடுக்கிறது டிராட்ஸ்கியவாதம். அதே போல் பின்தங்கிய நாடுகளில் நீண்ட கால மக்கள் யுத்தப்பாதை என்கிற மாவோவின் இராணுவ யுத்த - தந்திர செயல்தந்திரக் கோட்பாடுகள் நிரூபிக்கப்பட்ட போதும், டிராட்ஸ்கியவாதிகள் எல்லா நாடுகளுக்கும் ஆயுதந்தாங்கிய பேரெழுச்சிப்பாதை என்கிற இராணுவ யுத்த தந்திரத்தையே எந்திர ரீதியில் பொருத்த வேண்டும் என்கிறார்கள்.

**தொளதொளப்பான கட்சி அமைப்பு:** மார்க்சிய - லெனினியத்தை ஆயுதமாக ஏந்திய அமைப்பு ரீதியில் திரட்டப்பட்ட, பாட்டாளி வர்க்கத்தின் முன்னோடியான படைப்பிரிவுதான் போல்ஷெவிக் கட்சி. அது விமர்சனம், சுயவிமர்சனம், ஜனநாயக மத்தியத்துவம், எஃகுறுதி வாய்ந்த கட்டுப்பாடு ஆகிய அடிப்படையில் இயங்குவதாகும். இதற்கு நேரெதிரான தொள தொளப்பான, கட்டுப்பாடற்ற, மத்தியத்துவத்தை நிராகரிக்கும் ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கும் குட்டி முதலாளித்துவ அறிவு ஜீவிகளின் கோஷ்டிகளது கூட்டமைப்புதான் கட்சி என்பது டிராட்ஸ்கியவாதம். டிராட்ஸ்கியவாதிகள் ஸ்டாலினிசத்தை எதிர்ப்பதாகக் கூறிக் கொண்டாலும் உண்மையில் லெனினிசத்தையும், போல்ஷ்விசத்தையும்தான் எதிர்க்கிறார்கள்.

**புதிய இடதுகள் ஏகாதிபத்திய ஏஜெண்டுகள் அடங்கிய சதிகாரக் கும்பல்:** டிராட்ஸ்கிய வாதம் அடிப்படையில் பிழையானதென்று சித்தாந்தபூர்வமாகவும் நடைமுறையிலும் நிரூபிக்கப்பட்டது; இருந்தபோதும் அதை ஏற்காத டிராட்ஸ்கியவாதிகள் புரட்சிகர இயக்கங்களை சீர்குலைப்பது, நாசவேலைகள் - சதிகள் மூலம் சோசலிச நிர்மாணத்தை முறியடிப்பது என்ற வேலைகளில் ஏகாதிபத்திய சதிகாரர்கள், உளவாளிகளுடன் கூட்டுச் சேர்ந்தனர். பலர் ஏகாதிபத்திய ஏஜெண்டுகளாகவும் மாறினர். எனவேதான், "டிராட்ஸ்கியவாதம் இனிமேலும் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் ஓர் அங்கமாக இல்லை. அதற்கெதிரான சதியாகவும், டிராட்ஸ்கியவாதிகள் ஏகாதிபத்திய ஏஜெண்டுகளாகவும் செயல்படுகிறார்கள்" என்று மாவோ வரையறுத்தார்.

இவ்வாறு டிராட்ஸ்கியவாதம் அம்பலப்பட்டுப் போன நிலையில் புதிய இடதுகள் அதன் பணிகளைப் பொறுப்பேற்றனர். மார்க்சிய - லெனினியம், பகுதியாகவோ, முழுமையாகவோ காலாவதியாகிவிட்டது, புதிய ஆய்வுகள், கோட்பாடுகள், சித்தாந்தத்தை உருவாக்க வேண்டும்; பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம், போல்ஷெவிக் கட்சி ஆகியவை ஸ்டாலினிசச் சர்வாதிகாரம் என்பது போன்ற வாதங்களை முன்வைத்து டிராட்ஸ்கியவாதச் சீர்குலைவுகளை இப்போது புதிய இடதுகள் தொடர்கின்றனர்.

● *உங்களையும், உங்கள் வெளியீட்டையும் நான்காம் அகிலம் என்ற அமைப்பாளர் மாவோயிச குட்டி முதலாளித்துவவாதி என்கிறார்கள்? அவர்களைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?*

*— விநாயகமூர்த்தி, பாரீஸ், பிரான்சு.*

☆ மார்க்சிசம், லெனினிசத்தின் வளர்ந்த நிலைத் தத்துவம்தான் மாவோ சிந்தனை. புரட்சியின் நிகழ்கால, எதிர்காலப் பிரச்சினைகளுக்கு சித்தாந்த வழிகாட்டும் அம் மாவோ சிந்தனையைப் பின்பற்றுபவர்கள் என்றழைக்கப்படுவது குறித்து வருந்துவதற்கு எதுவுமில்லை; பெருமிதமே கொள்கிறோம். மாவோவையே விவசாயக் குட்டி முதலாளி, மார்க்சிய - லெனினிய அறிவற்ற பாமரன் என்றுதான் டிராட்ஸ்கியவாதிகளான நான்காம் அகிலத்தினர் அவதூறு செய்கின்றனர். அவர்களைப் பற்றி மாவோ வரையறுத்துச் சொன்னது மிகச் சரியானதென்றே அபிப்பிராயப் படுகிறோம். இங்கே நடைமுறையிலேயே அதைக் காண்கிறோம்.

★ டிராட்ஸ்கிய வாதம் என்றால் என்ன?

★ பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் புரட்சிக் கவிஞரா?

★ திராவிடர் கழகம் தற்போது பெரியாரின் நடைமுறையில் இருக்கிறதா?

படிப்பகம்

www.padippakam.com



கொள்கைக்கு 'டாடா': தரகுப் பெருமுதலாளி டாட்டாவின் வாரிசு ரத்தன் டாடாவுடன் கைகுலுக்கும் 'மார்க்சிஸ்டு' முதல்வர் நாயனார்; அருகில் தொழிலமைச்சர் கே.ஆர்.கௌரி.

# டாட்டா பிர்லா கூட்டாளி! பாட்டாளிக்குப் பகையாளி!

"டாட்டா – பிர்லா கூட்டாளி, பாட்டாளிக்குப் பகையாளி." என்று கொடி பிடித்து கோஷம் போட்ட 'மார்க்சிஸ்ட்' கட்சி தொண்டர்கள் இனிமேல் இந்த கோஷத்தை முழங்க முடியாது. தவறிப் போய் முழங்கிவிட்டால் அது கட்சிவிரோத நடவடிக்கையாகிவிடும். நக்சலைட் சீர்குலைவுவாதிகள் என்று முத்திரை குத்தி தலைமை அவர்களை வெளியேற்றவும் கூடும். காரணம், இப்போது 'மார்க்சிஸ்டுகள்' டாட்டா–பிர்லாவின் கூட்டாளிகளாகி விட்டார்கள். வங்கத்தையும் கேரளத்தையும் ஆளும் 'இடதுசாரி' அரசுகள் ஏகபோக முதலாளிகளின் பங்காளிகளாகிவிட்டன.

அண்மைக் காலமாக, கேரளா - மே.வங்கத்தை ஆளும் போலிக் கம்யூனிஸ்டுகள், தரகுப் பெருமுதலாளிகளையும் வெளிநாட்டில் வாழும் இந்தியர்களையும் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கத் தொடங்கியுள்ளனர். இதற்காகவே நாயனாரும் ஜோதிபாசுவும் வெளிநாடுகளுக்குப் பறக்கின்றனர். "தனியார் முதலாளித்துவத்துக்கு நாங்கள் எதிரிகளல்ல" என்று கொள்கை விளக்கம் அளிக்கத் துவங்கியுள்ளார் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் பொதுச் செயலாளர் நம்பூதிரிபாடு

அதிகார வர்க்க முதலாளித்துவமாகிய அரசுத் துறை நிறுவனங்களை வளர்ப்பது சோசலிசத்துக்கான பாதை என்பது இப்போலிகளின் பூர்வீக கொள்கை. இதற்காகவே அரசுத்துறை நிறுவனங்களை நிறுவிய நேருவையும் இந்திராவையும் முற்போக்கு ஜனநாயக சோசலிசவாதிகளாகச் சித்தரித்தனர். அரசுத் துறையைப் புறக்கணித்து தனியார் துறையை ஊக்குவித்த ராஜீவை கடுமையாகச் சாடினர்.

எந்தக் கொள்கையை கடுமையாக எதிர்த்தார்களோ, அதே ராஜீவின் கொள்கைதான் இன்று போலிக் கம்யூனிஸ்டுகளின் சோசலிசக் கொள்கையாகிவிட்டது. பாசிச ராஜீவே மூக்கின் மேல் விரலை வைக்கும் அளவுக்கு அரசுத்துறை நிறுவனங்களை டாட்டாவுக்குத் தாரை வார்ப்பதில் முதலிடம் வகிக்கிறது கேரள இடது சாரி அரசு.

கேரளாவில் உள்ள திருவாங்கூர் டைட்டானியம் புராடெக்ட்ஸ் என்பது ஒரு அரசுத் துறை நிறுவனம். டைட்டானியம் என்ற கனிமப் பொருள் தற்போது கலவை உலோக உற்பத்தியில் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. எனவே இதன் மூலம் ஆதாயமடையும் நோக்குடன் தரகுப் பெருமுதலாளிகள் இந்த அரசுத்துறை நிறுவனத்தில் கூட்டுச் சேர முன்வந்தனர். டாட்டா, பிர்லா, தப்பார் முதலான தரகுப் பெருமுதலாளிகள் இதற்குப் போட்டி போட்டனர். ஆனால் 'மார்க்சிஸ்டு'களின் கடைக்கண் பார்வை டாட்டா மீது தான் விழுந்தது. பிரிட்டிஷ் நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்து 70 கோடி ரூபாய் முதலீட்டில் டைட்டானியம் ஆலையைத் துவங்க டாட்டாவுக்கு இப்போது 'மார்க்சிஸ்டு'கள் உரிமம் வழங்கியுள்ளனர். இதுதவிர கண்ணனூர் மாவட்டத்தில் 30 கோடி ரூபாய் முதலீட்டில் தொலைபேசிக் கருவிகள் தயாரிக்கும் ஆலையை துவக்க டாட்டாவுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதுவும் போதாது என்று அமெரிக்காவில் வாழும் மலையாள முதலாளிகளிடம் கேரளாவில் வந்து முதலீடு செய்யுமாறு கோருவதற்காக 'மார்க்சிஸ்டு' முதல்வர் நாயனார், தொழிலமைச்சர் கே.ஆர்.கௌரி, புரட்சி சோசலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த மீன் முதலாளி பேபிஜான் ஆகியோர் அமெரிக்காவுக்குச் சென்றுள்ளனர். ஊரறிந்த இந்த ரகசியத்தை மறைக்க வட அமெரிக்க மலையாளி சங்கத்தின் அழைப்பின் பேரில் செல்வதாக மாய்மாலம் செய்தனர். சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியினரான காங்கிரசார் உங்கள் பயணத்தின் நோக்கம் என்ன என்று கேட்டபோது முதல்வர் நாயனார் வாய் திறக்க மறுத்ததால் எதிர்கட்சியினர் வெளிநடப்பு செய்தனர். "உதவி தேவையென்றால் சோசலிச நாடுகளுக்குப் போக வேண்டியதுதானே! பரம எதிரியான அமெரிக்காவுக்கு ஏன் ஓடுகிறீர்கள்?" என்று காங்கிரசுக்காரர்களே போலிக் கம்யூனிஸ்டுகளின் யோக்கியதையை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றனர்.

எனவே ஏகபோக முதலாளிகளுடன் கூடிக் குலாவும் தங்களது அயோக்கியத்தனத்தை மறைக்க 'மார்க்சிஸ்டு'கள் இப்போது சித்தாந்த விளக்கமளிக்கத் துவங்கியுள்ளனர். பொதுச் செயலாளரான நம்பூதிரிபாடு அரசுத்துறையை வளர்ப்பதாக இருந்தால், தனியார் முதலாளிகள் அரசுத் துறையுடன் கூட்டுச்சேருவதை எங்கள் கட்சி எதிர்க்காது இன்றைய சூழ்நிலையில் முதலாளிகளுடன் கூட்டுச் சேர்வதைத் தவிர வேறு மாற்று வழி இல்லை" என்று தமது கொள்கையை நியாயப்படுத்துகிறார் நம்பூதிரிபாடு. "அரசுத் துறையிலும், முக்கியமான தொழில்களிலும் தனியார் முதலாளிகள் நுழைவதால் எந்த தீங்கும் ஏற்படாது" என்று ஆறுதல் கூறுகிறார் கேரள 'மார்க்சிஸ்ட்' முதல்வர் நாயனார். "கேரள மாநிலம் தொழில் துறையில் பின் தங்கியுள்ளது. மாநிலத்தில் வேலை வாய்ப்பைப் பெருக்க இத்தகைய கொள்கை இன்று அவசியமாக உள்ளது" என்று புள்ளி விபர சதவிகித கணக்கு காட்டி சதிராடுகிறார். தொழில் மந்திரி கே.ஆர்.கௌரி.

இப்படி தனியார் ஏகபோக முதலாளிகளுக்கு பச்சைக் கொடி காட்டி அழைப்பு விடுத்தால் மட்டும் அவர்கள் தொழில் தொடங்க முன்வந்து விடுவார்களா? இதோடு கூடவே தமது ஆட்சியில் தொழில் அமைதியைக் காப்பதாக முதலாளிகளுக்கு உத்திரவாதமும் தரவேண்டும். அதாவது தொழிலாளிகள் போராடினால் அவர்களுக்குச் சாதகமாக நடந்து கொள்ள மாட்டோம்; முதலாளிகளுக்கு ஆதரவாக தொழிலாளர் போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குவோம் என்று முதலாளிகளிடம் நம்பிக்கையூட்ட வேண்டும். இதன்படி தொழிலமைச்சர் கே.ஆர்.கௌரி, "கேரளா ஒரு விசித்திரமான மாநிலம். இங்கே ஆலையில் உற்பத்தி தொடங்குமுன்னரே ஆலை வாயிலில் செங்கொடிகள் பறக்கத் தொடங்கி விடுகின்றன" என்று தொழிற் சங்கங்கள் மீது வெறுப்பை உமிழ்ந்தார். "நாட்டிலேயே கேரளாவில்தான் மனித உழைப்பு நாட்கள் இழப்பு மிகக் குறைவாக உள்ளது. இங்கு

படிப்பகம்

www.padippakam.com

தான் தொழில் அமைதி நிலவுகிறது'' என்று ஏகபோக முதலாளிகளை முதலீடு செய்ய அழைத்தார்.

இவையனைத்துக்கும் முத்தாய்ப்பாக, ''மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு முன்னுரிமை தரும் வகையில் நாம் புதியதொரு அரசியல் கலாச்சாரத்தை உருவாக்க வேண்டும்'' என்கிறார் நம்பூதிரிபாடு. அதாவது கம்யூனிஸ்டுகள் என்றால் முதலாளித்துவத்துக்கு எதிரானவர்கள் என்ற பழமைவாதக் கருத்தை மாற்றி முதலாளிகளின் பங்காளிகள் என்ற புதுமையை சாதிக்க வேண்டும்; தொழிலாளிகளின் வர்க்கப் போராட்ட உணர்வை மழுங்கடிக்கும் வகையில் தொழிற் சங்கங்களை மாற்றியமைக்க வேண்டும். அதையும் மீறி தொழிலாளிகள் போராடினால் குண்டர்களை ஏவி ஒடுக்க வேண்டும். இதர ஓட்டுக் கட்சிகளின் ஆட்சியைப் போலவே அரசு எந்திரத்தை ஏவி முதலாளிகளுக்கு ஆதரவாக போராட்டங்களை அடக்க வேண்டும் என்பதை பூடகமாகச் சொல்கிறார்.

கேரளாவைப் பொருத்தவரை போலிக் கம்யூனிஸ்டுகளின் இப்புதிய கொள்கை ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் கடந்த பத்தாண்டுகளாக மே.வங்கத்தை ஆளும் போலிகள் இதே கொள்கையைத்தான் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். அதிலும் மகா மோசடி தரகுப் பெரு முதலாளியான அம்பாணியுடன் சேர்ந்து பம்பாய் ஐந்து நட்சத்திர ஓட்டலில் விருந்துண்டு களிக்கும் அளவுக்கு வங்கத்து சிங்கம் ஜோதிபாசு முன்னேறிவிட்டார். அம்பாணியின் தோழராகிவிட்ட ஜோதிபாசு,ஹால்டியா பெட்ரோ - ரசாயன ஆலைத் திட்டத்தை அம்பாணிக்கு தாரை வார்த்துக் கொடுத்து விட்டார். ஜோதிபாசுவின் முதலாளித்துவ மகன் சந்தன் பாசுதான் இதற்கான தரகு வேலை செய்தார்.

இதெல்லாம் பழைய கதை. இப்போது மேலும் ஒருபடி முன்னேறி, சர்வதேச ஆயுத பேரத் தரகர்களும், போபர்ஸ் பீரங்கி பேர ஊழலில் சிக்கிய ரகசிய உலகப் பேர்வழிகளுமான இந்துஜாக்களை ஆதரிக்கத் தொடங்கியுள்ளார். அண்மையில் லண்டனுக்குச் சென்ற ஜோதிபாசு இந்துஜாக்களிடம் மே.வங்கத்தில் முதலீடு செய்யுமாறு வேண்டிக் கொண்டார். லண்டனில் வாழும் இந்திய முதலாளிகளுடன் அவர் நடத்திய கூட்டத்தில், ''முந்தைய ஆட்சிக்கு ஆதரவான முதலாளிகளை தேசிய முன்னணி அரசு பழிவாங்கக்கூடாது. இப்படிச் செய்வதால் நாட்டின் தொழில் வளர்ச்சி பாதிக்கப்படும். அவர்களது பழைய வரலாறுகளை தோண்டிக் கொண்டிராமல் அவர்கள் மேலும் முதலீடு செய்வதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்'' என்று இந்துஜாக்களுக்கு ஆதரவாக முழங்கினார். இதோடு தமது கூட்டாளியான ''அம்பாணியின் நிறுவனங்களை அரசியல் காரணங்களுக்காக தேசிய முன்னணி அரசு அழிக்க முயற்சிப்பது தவறு'' என்று சாடினார்.

அம்பாணியும் இந்துஜாக்களும் ராஜீவ் தயவில் அரசு நிதி நிறுவனங்களை மோசடி செய்து, சர்வதேச போதை மருந்து - ஆயுதக் கடத்தல் மாஃபியாக்களின் பினாமிகளாகச் செயல்பட்டு அவர்களின் கருப்புப் பணத்தை இந்தியாவில் முதலீடு செய்த பொருளாதாரக கிரிமினல் பேர்வழிகள் என்பது யாவரும் அறிந்த உண்மை. ஆனால் 'மார்க்சிஸ்டு' முதல்வர் ஜோதிபாசுவைப் பொருத்தவரை இவர்கள் உலக மகா உத்தமர்கள்! ஆளும் வர்க்கக் கட்சிகளைவிட வரிந்து கட்டிக் கொண்டு இந்த மோசடிப் பெருமுதலாளிகளை ஆதரிக்கும் ஜோதிபாசுவின் லண்டன் உரையை அவரது கட்சியினராலேயே ஜீரணிக்க முடியவில்லை. கல்கத்தாவிலிருந்து வெளிவரும் மார்க்சிஸ்டு கட்சியின் அதிகாரபூர்வ வங்கமொழி நாளேடான ''ஜன சக்தி'' ஜோதிபாசுவின் லண்டன் உரையை செய்தியாக வெளியிட்ட அதேசமயம் அவர் அம்பாணியையும், இந்துஜாக்களையும் ஆதரித்துப் பேசியதை இருட்டடிப்பு செய்துவிட்டது. இதோடு ஆளும் இடதுசாரிக் கூட்டணியிலுள்ள கட்சிகளே ஜோதிபாசுவின் போக்கைக் கண்டித்துள்ளன.

அன்னிய ஏகாதிபத்தியங்களையும், தரகு பெரு முதலாளிகளையும் போலிக் கம்யூனிஸ்டுகள் ஆதரித்து அவர்களின் கூட்டாளிகளாவது ஒன்றும் புதிய விஷயமல்ல. 1958-ல் கேரளாவின் முதல் இடதுசாரி முதல்வராக இருந்த நம்பூதிரிபாடு, மாவூரில் பிர்லாவின் குவாலியர் ரேயான் ஆலையை நிறுவ விசுவாசமாக சேவை செய்தார். பின்னர் 1967 - 68ல் வலது கம்யூனிஸ்டுகள் ஆட்சி அமைத்தபோது அதன் தொழில் மந்திரியான டி.வி.தாமஸ், ஜப்பானுக்குச் சென்று ஏகாதிபத்தியக் கூட்டுடன் கேரளாவில் தொழில் தொடங்க ஏற்பாடுகளைச் செய்தார். அன்று இலைமறை காய்மறையாக முதலாளிகளின் கூட்டாளிகளாகச் செயல்பட்டதை இன்று கூச்சமின்றி பகிரங்கமாகச் செய்கின்றனர் என்பதைத் தவிர அவர்களது கொள்கையில் வித்தியாசம் ஒன்றுமில்லை. அவர்களின் குருபீட சித்தாந்த வழிகாட்டிகளான ரஷியாவின் கோர்பச்சேவும், சீனாவின் டெங்கும் பன்னாட்டு பகாசுர முதலாளிகளை சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கும் போது, போலிக் கம்யூனிஸ்டுகள் இதைக்கூட செய்யாவிட்டால், அப்புறம் 'சர்வதேசியம்' என்னாவது?

● குமார்.

## 2000 பேருக்கு ஆடம்பர விருந்து 250 சவரன் வரதட்சிணை இந்துமத பிற்போக்கு சடங்குகள் / மகனுக்குத் திருமணம் நடத்திய 'மார்க்சிஸ்டு' தலைவர்

கேரளத்தை ஆளும் 'மார்க்சிஸ்ட்' கட்சிக்குள் நம்பூதிரிபாடு கோஷ்டிக்கும் பொலிட் பீரோ உறுப்பினர் பாலானந்தன் கோஷ்டிக்குமிடையே 'கொள்கைத் தகராறு' இப்போது கொடி கட்டிப் பறக்கிறது.

பாலானந்தன், கேரளாவின் மலபார் - கொச்சி வட்டாரத்தைச் சேர்ந்த பிரபல 'கம்யூனிஸ்டு' தலைவர். அவர் மனைவி சரோஜினி, ஜனநாயக மாதர் சங்கத் தலைவர்.

இத்தம்பதி தலைவர்கள் தமது மகன் சுனிலுக்கு அண்மையில் நடத்திய திருமணத்தில் 250 சவரன் நகையை வரதட்சிணையாகப் பெற்றதோடு, ஐயர் வைத்து இந்து மத சடங்கு சம்பிரதாயங்களுடன் திருமணத்தை நடத்தி, 2000 பேருக்கு ஆடம்பர விருந்தும் கொடுத்துள்ளனர்.

''தனது பகட்டு ஆடம்பரத்தைக் காட்டும் விதத்தில் கொச்சையாகவும் மதச்சடங்கு சம்பிரதாயங்களுடன் அருவறுப்பாகவும் இத்திருமணம் நடந்துள்ளது'' என்று மார்க்சிஸ்டு கட்சி ஊழியர்களே வெளிப்படையாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

பாலானந்தன், நம்பூதிரிபாடுக்கு எதிராக தனி கோஷ்டி கட்டிக் கொண்டு செயல்படுவர். கேரளாவில் 'மார்க்சிஸ்ட்' கட்சிக்கு 'தாழ்த்தப்பட்ட' ஈழவா சாதியினர் மத்தியில் செல்வாக்கு உண்டு. பாலானந்தன் இந்தச் சாதிக்காரர். எனவே சாதி பலத்தைக் காட்டி தன்னை கேரள மாநில முதல்வராக்கும்படி நிர்பந்தித்து வந்தார். ஆனால் நம்பூதிரிபாடு மேல் சாதிக்காரரான ஈ.கே.நாயனாரை முதல்வராக்கி பாலானந்தனைப் பழிவாங்கி விட்டார். சாதி பலத்தைக் காட்டி 'கலகம்' செய்யும் பாலானந்தனை அடக்க, அதே சாதியைச் சேர்ந்த அச்சுதானந்தனை கட்சியின் மாநிலச் செயலாளராக்கியுள்ளார், நம்பூதிரிபாடு. அச்சுதானந்தன் மூலம் கேரளத்தின் பிரபல தலைவர்களான தனது எதிர்ப்பாளர்கள் 7 பேரை கட்சியை விட்டே நீக்கி விட்டார் நம்பூதிரி. இப்போது அதே நோக்கத்தோடு பாலானந்தன் தனது மகனுக்கு திருமணம் நடத்திய விவகாரத்தைக் கிளப்பி விட்டு நாறடிக்கிறது அச்சுதானந்தன் - நம்பூதிரி கோஷ்டி.

பாலானந்தன் இதைக்கண்டு அசரவில்லை. இன்னுமொரு 'மார்க்சிஸ்ட்' தலைவரின் யோக்கியதையை அவிழ்த்து விட்டு நாறடிக்கிறார். ஆளும் இடதுசாரி முன்னணியின் கன்வீனராக உள்ள எம்.எம். லாரென்சு, தனது மகளுக்கு பெரும் பணக்காரத் தொழிலதிபரை மருமகனாகத் தேர்ந்தெடுத்து பாதிரிகள் ஆசியுடன் மாதாகோயிலில் கிறித்துவ முறைப்படி திருமணம் நடத்திய விவகாரத்தை அம்பலப்படுத்திக் காட்டுகிறார். அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத கட்சி என் மீது மட்டும் குற்றம் சாட்டுவது எந்த விதத்தில் நியாயம் என்று சீறுகிறார். நீயும் அயோக்கியன், நானும் அயோக்கியன்: இதிலே என்னை மட்டும் ஏன் காட்டிக் கொடுக்கிறாய்? என்பதுதான் பாலானந்தனின் நியாயவாதம்!

''சாதி - மத - மூடநம்பிக்கைகளை ஒழிப்போம்! வரதட்சிணை கொடுமையை ஒழிப்போம்!'' என்று இத்தலைவர்கள் மேடையில் முழங்கியதெல்லாம் ஊருக்கு உபதேசம் தானே தவிர, தமது சொந்த வாழ்க்கையில் கடைபிடிப்பதற்கானதல்ல என்பதை இதர ஓட்டுக் கட்சிகளைப் போலவே நிரூபித்துக் காட்டி விட்டார்கள். ஒருவழியாக, இந்திய ஓட்டுப் பொறுக்கிக் கலாச்சாரத்துக்கு ஏற்ற தகுதி வாய்ந்த தலைவர்களாக 'மார்க்சிஸ்டுகள்' முன்னேறி விட்டார்கள். நல்ல முன்னேற்றம்தான்!

☆ ☆ ☆

படிப்பகம்

www.padippakam.com

# ஆப்பிரிக்க நாடுகளில் ஆட்சிக் கவிழ்ப்புகள் - ஏன்?



சோமாலியாவின் ராணுவ சர்வாதிகார ஆட்சிக்கெதிராக கிளர்ந்தெழும் தேசிய மக்கள் இயக்கப்படை.

ஆப்பிரிக்காவில் இருந்து அடிக்கடி வரும் செய்திகள், தென் ஆப்பிரிக்க பாசிச அரசின் மிருகத்தனமான நிற - இன வெறிக் கொடுமைகள்; அல்லது ஆட்சிக் கவிழ்ப்புகள்; அல்லது பெருந்திரளான பட்டினிச் சாவுகள். உலகின் துயரமிகு மையமாகவும் அதேசமயம் எழுச்சி என்னும் வெடி மருந்துக் கிடங்காகவும் அந்த 'இருண்ட கண்டம்' இருப்பதையே இந்தச் செய்திகள் குறிக்கின்றன.

26 ஆண்டுகளாக ஆப்பிரிக்காவின் ஜாம்பியா நாட்டை ஆண்டு வரும் கென்னத் கௌண்டாவைத் தூக்கி எறிய கடந்த மாதம் ஒரு ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி தோற்றுப் போனது. மேற்கு ஆப்பிரிக்காவின் லைபீரியாவை ஆளும் அதிபர் சாமுவெல்டோ ஆட்சியை வீழ்த்த ஐந்தாண்டுகளாகப் போரிடும் 'தேசபக்த - கலகப்படை' தலைநகரைச் சுற்றிக் கொண்டுள்ளது; எந்த நேரத்திலும் அதைக் கைப்பற்றிப் புது ஆட்சியை நிறுவிவிடும். கடந்தமாதமே சூடானின் ஆட்சியை அதிரடி நடவடிக்கையின் மூலம் முஸ்லீம் மதவெறியர்கள் பிடித்துக் கொண்டனர்.

இப்படி ஆட்சிக் கவிழ்ப்பு அதிரடி நடவடிக்கைகள் நடப்பது ஆப்பிரிக்க நாடுகளில் சர்வசாதாரணமாகிவிட்டன. இதற்கு என்ன காரணம்? ஆப்பிரிக்காவின் பெரும்பான்மை நாடுகளில் பெயரளவிலான ஜனநாயக அமைப்புகள் கூடக் கிடையாது. இராணுவத் தளபதிகளின் பாசிச சர்வாதிகாரம் அல்லது போலி சோசலிஸ்டுகளின் அதிகார வர்க்க பாசிச சர்வாதிகாரம் - இவர்களின் ஒரு கட்சி ஆட்சிதான் உள்ளது.

ஒவ்வொரு நாட்டிலும் இந்த பாசிஸ்டுகள் ஆட்சிக்கு வந்ததும், ஆட்சி நடத்துவதும் மயிர்க் கூச்செறியும் கோரமான கதைகளாகும். உலக ஜனநாயகத்தின் காவலர்கள் எனப் பீற்றிக் கொள்ளும் காலனிய, ஏகாதிபத்திய வல்லரசுகள் தான் இந்த பாசிஸ்டுகள் ஆட்சியைப் பிடிக்கவும், நீடிக்கவும் காரணமானவர்கள்.

ஆப்பிரிக்கா - இயற்கைச் செல்வங்கள் மிக்க இருண்ட கண்டம். ஏராளமான காட்டு வளம். அவற்றுக்குக் கீழே தங்கம், வெள்ளி, செம்பு, பிளாட்டினம் போன்ற உயர்ரக உலோகங்கள் முதல் இரும்பு, நிலக்கரி, எண்ணெய் ஆகிய ஆலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருட்களின் கிடங்காகவே உள்ளது. இவைதவிர வைரம், தந்தம் போன்ற விலையுயர்ந்த பொருட்கள் ஏராளமாக உள்ளன.

வடக்கிலும் வடகிழக்கிலும் அராபிய முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் அல்ஜீரியா, லிபியா, எகிப்து, சூடான், ஆகிய நாடுகள்; மீதிப் பெரும்பகுதியான ஆப்பிரிக்கா முழுவதும் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை பழங்குடிச் சமுதாய அமைப்பாகவே இருந்தது. அவர்களுக்கிடையிலான பிளவு - சண்டைகளையும், அறியாமை - பின்தங்கிய நிலைமைகளையும் பயன்படுத்திக் கொண்டு இங்கிலாந்து, பிரெஞ்சு, ஜெர்மனி, ஸ்பெயின், போர்த்துக்கீசிய காலனியவாதிகள் ஆப்பிரிக்காவை அடிமை நாடுகளாக்கிவிட்டனர்.

உலக நாகரிகத்தின் பாரம்பரியம் கொண்டாடும் இக்காலனிய வாதிகளோ, காட்டுமிராண்டிகளாக மாறி ஆப்பிரிக்கக் கறுப்பின மக்களை அடிமைகளாகப் பிடித்து சங்கிலியால் பிணைத்து ஆடுமாடுகளைப் போல இழுத்துக் கொண்டு போய் அடிமைச் சந்தைகளில் விற்றனர். சிறுகச்சிறுக விழிப்புணர்வு பெற்ற ஆப்பிரிக்க மக்கள் போராட்டங்களில் குதித்தனர்.

குறிப்பாக, இரண்டாம் உலகப் போருக்கு முன்னும் பின்னும் காலனிய விடுதலைப் போர்கள் பலவும் வெடித்தன. ருஷ்ய, சீனப்புரட்சிகளின் வெற்றியும், ஆப்பிரிக்க விடுதலைப் போர்களுக்கு சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கமளித்த பேராதரவும் இதற்கு முக்கியக் காரணங்களாக அமைந்தன. ஆயுதமேந்திய விடுதலைப் போரில் ஊன்றி நின்று காலனியவாதிகளையும் அவர்களது அடிவருடிகளையும் முறியடித்து சுதந்திரத்தை நிலைநாட்டுவதில் காமரூன், கென்யா, காங்கோ, அல்ஜீரியா, துனிசியா, லிபியா, மொராக்கோ, எகிப்து போன்றவை வெற்றி பெற்றன.

ஆனால், ஐரோப்பியக் காலனியவாதிகள், புதிய அமெரிக்க ஏகாதிபத்திய வல்லரசின் துணையோடு இராணுவத்தைக் குவித்து 1947ல் மடகாஸ்கரிலும், 1948ல் கானாவிலும், 1949ல் எனுகு, நைஜீரியா நாடுகளிலும் நடந்த விடுதலைப் போர்களை ஈவிரக்கமின்றி ஒடுக்கினர். அதைப் போலவே அங்கோலா, மொசாம்பிக், கினியா, பிசாவு நாடுகளின் விடுதலைப் போர்களை போர்த்துக்கீசிய காலனியவாதிகள் ஒடுக்கித் தக்கவைத்துக் கொண்டனர்.

இருந்தபோதும், அடிமைகளாய் வாழ விரும்பாத ஆப்பிரிக்க மக்கள் விடுதலைப் போர்களில் அடிக்கடி எழுச்சியுறுவதையும் அவற்றுக்கு சர்வதேசப் புரட்சி இயக்கத்தின் ஆதரவு பெருகுவதும் கண்ட ஏகாதிபத்திய வாதிகள் புதிய - நவகாலனிய ஆதிக்கத்தை நிறுவும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். உண்மையான, உறுதியான விடுதலைப் போராளிகளையும், தலைவர்களையும் சதிகளின் மூலம் படுகொலைகள் செய்துவிட்டு தமது அடிவருடிகளை சுதந்திரப் போராட்ட அமைப்புகளின் தலைமைக்குக் கொண்டு வந்தனர். பெயரளவிலான சுதந்திரப் பிரகடனத்துக்குப் பிறகு இந்த ஏகாதிபத்திய அடிவருடிகளின் - இவர் பெரும்பாலும் பழங்குடி இன அரசு பரம்பரையினர் - ஆட்சிகளை நிறுவினர்

ருஷ்யா சமூக ஏகாதிபத்தியமாக மாறியபிறகு ஆப்பிரிக்காவின் பலநாடுகளில் நடந்து வந்த காலனிய விடுதலைப் போராளி அமைப்புகளை பழங்குடி இன அடிப்படையில் பிளவுபடுத்தித் தமது விசுவாச கும்பல்களை உருவாக்கியது. காலனிய விடுதலைப் போர்கள் 'சகோதர' யுத்தங்களாக மாறின. குறிப்பாக 75-ல்போர்த்துக்கீசிய பாசிச அரசு வீழ்ந்த பிறகு மொசாம்பிக், அங்கோலா, கினியா - பிசாவு நாடுகளின் சுதந்திரம் - விடுதலை இதனால் இழுத்தடிக்கப்பட்டது. கியூபா கூலிப் படையின் ஆதரவோடு அங்கோலாவிலும், மொசாம்பிக்கிலும் ருஷ்ய சமூக ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் ஆதரவு ஆட்சிகள் நிறுவப்பட்டது. இதன் காரணமாக அந்நாடுகளில் அமெரிக்க ஆதரவுப் படைகளின் கலகம் - உள்நாட்டுப் போர்கள் நீடிக்கின்றன.

இவை தவிர ஏற்கனவே அமெரிக்க அடிவருடிகளின் பாசிச சர்வாதிகாரத்தின்



படிப்பகம்

www.padippakam.com

கீழிருந்த பெனின், எத்தியோப்பியா, சோமாலியா போன்ற நாடுகளில் இராணுவ அரண்மனைப் புரட்சிகள் நடத்தி 'இராணுவ பாசறைப் பாணி சோசலிச'த்தை நிறுவியுள்ளனர் ருஷ்ய சமூக ஏகாதிபத்திய விசுவாசிகள்.

இவ்வாறு பல்வேறு ஏகாதிபத்திய வல்லரசுகளின் நவீன காலனி ஆதிக்கத்தின் கீழுள்ள பாசிச அரசுகள் 'ஆப்பிரிக்க சோசலிசம்', 'ஜனநாயக சோசலிசம்', 'முஸ்லீம் சோசலிசம்' என வேடங்கட்டிக் கொண்டுள்ளன. தான்ஜானியாவில் கம்யூன் பாணி சோசலிசம்; மொசாம்பிக், பெனின், எத்தியோப்பியா,அங்கோலா ஆகியநாடுகளில் மார்க்சிய சோசலிசம் என்றுகூட சொல்லிக் கொள்கிறார்கள். உலகம் முழுவதிலுமுள்ள போலிக் கம்யூனிஸ்டுகள் இதை அங்கீகரிக்கின்றனர். ஆனால் இந்த நாடுகளில் கொண்டுவரப்பட்ட அதிகாரவர்க்க, அரசுத் துறைப் பொருளாதார சீர்திருத்தங்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்க வைத்து விட்டன.

ஆயுதப் போராட்டங்கள் மூலம் விடுதலையடைந்த நாடுகளானாலும் சரி; பெயரளவிலான சுதந்திரமடைந்த ஏகாதிபத்திய நவீன காலனிய, அரைக்காலனி நாடுகளானாலும் சரி, இவை எதுவும் நிலச்சீர்திருத்தங்கள் மூலம் பழங்குடி இனப் பொருளாதார அமைப்பை மாற்றவே இல்லை அதோடு ஏகாதிபத்திய - பன்னாட்டு பகாசுரக் கம்பெனிகள் அந்நாடுகளின் மூல - செல்வங்களையும் உழைப்பையும் சந்தையையும் கொள்ளையிடவும் முழு வசதி - உரிமையளித்துள்ளனர்.

பழங்குடி அரச பரம்பரையினராகவோ, இராணுவத் தளபதிகளாகவோ உள்ள இந்த பாசிஸ்டுகள் உகாண்டாவின் இடி அமீனைப் போன்றவர்கள் - பகிரங்கமாகவும் வக்கிரமாகவும் நடந்து கொள்ளும் அளவிலேதான் வேறுபாடு. ஆடம்பரக் கேளிக்கையிலும் அதிகார போதையிலும் மிதக்கும் இந்த பாசிஸ்டுகள், சொந்த நாட்டையே சூறையாடி அமெரிக்கா, இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து, பனாமா, பகாமாஸ் போன்ற சர்வதேச இரகசிய வங்கிகளில் ஏராளமாக கறுப்புப் பணத்தையும், சொத்துக்களையும் குவித்துள்ளனர். தமது கேடுகெட்ட பாசிச ஆட்சியும் சுரண்டலும் தொடர்வதற்காக ஏகாதிபத்திய நாடுகளிடமும், சர்வதேச நிதி நிறுவனம் - உலகவங்கியிடமும் கோடி கோடியாகக் கடன் வாங்கி தமது சொந்த நாட்டையும் மக்களையுமே அடகு வைத்துவிட்டார்கள். அவர்களின் உத்தரவுகளை ஏற்று பொருளாதாரத்தை நாசப்படுத்தியதோடு, கடனிலே மூழ்கிப் போனார்கள்.

தேசப் பொருளாதாரம் முழுவதும் போண்டியாகிப் போனது. சுற்றுச்சூழல் பேரழிவுகளால் சாடு, எத்தியோப்பியா, சூடான் போன்ற நாடுகள் கடும்பஞ்சம் வெடித்து லட்சக்கணக்கான மக்கள்பெருந்திரள் பட்டினிச் சாவுகள் நடக்கின்றன. பன்மடங்கு உணவு பொருள் விலை ஏற்றத்தைத் தாங்கமுடியாத மக்கள் 'உணவு கலவர'ங்களில் இறங்குகின்றனர். பாசிச அரசுகளே இராணுவத்தை ஏவி போராடும் மக்களைத் தெருக்களில் சுட்டு வீழ்த்துகின்றன. சில மாதங்களுக்கு முன்பு அல்ஜீரியாவிலும், கடந்த மாதம் ஜாம்பியாவிலும் மிகப்பெரும் அளவு 'உணவுக் கலவரங்கள்' வெடித்தன.

ஆப்பிரிக்க நாடுகளில் ஏற்கனவே அதிகாரத்தில் உள்ள பாசிஸ்டுகள் ஒரு ஏகாதிபத்திய வல்லரசின் கட்டுப்பாட்டில் இருந்து விசுவாசத்தை மாற்றிக் கொள்ளும் போது அதுவே ஆட்சிக் கவிழ்ப்புகளை நடத்தி புதிய ஆட்சியாளர்களுக்கு ஜனநாயகச் சான்றிதழ் - முத்திரை குத்திவிடுகின்றது. ஆப்பிரிக்க சமுதாயம் இன்னமும் பழங்குடி இன அடிப்படையில் பிரிந்து கிடப்பது இதற்கு வசதியாக இருக்கிறது.

சிறிய நாடான ஐவரி கோஸ்டின் 116 லட்சம் மக்கள் 60 பழங்குடி இனங்களாகப் பிரிந்து கிடக்கின்றனர். ஜைரே நாட்டின் 325 லட்சம் மக்கள் 200 பழங்குடி இனங்களாகப் பிரிந்து கிடக்கின்றனர். இவற்றிலே தங்களுக்கு விசுவாசமான பழங்குடி இனத் தலைவர்களின் பொம்மை ஆட்சியை நிறுவி மற்ற இனங்களை அடக்கி ஒடுக்குகின்றன வல்லரசுகள். இதனால் மற்ற இனத்தவர்கள் தனித்தனி படையமைத்து உள்நாட்டுப் போர்களைத் தொடர்ந்து நடத்துகின்றனர். இவர்களுக்கு வேறு சில வல்லரசுகள் ஊக்கமளித்து உதவிபுரிகின்றன. லைபீரியா, மொசாம்பிக், அங்கோலா போன்ற நாடுகளில் நடக்கும் பழங்குடி இன அடிப்படையிலான 'கலகப்படைகள்' அதிகாரத்தைப் பிடிக்குமளவு அச்சுறுத்துகின்றன. குறிப்பாக தென் ஆப்பிரிக்க இனவெறி அரசு இம்மாதிரியான 'கலகப்படைகளின்' சூத்திரதாரியாக இருக்கிறது.

இதுதான் ஆப்பிரிக்க நாடுகளின் உள்நாட்டுப் போர்கள், இராணுவ அதிரடி ஆட்சிக் கவிழ்ப்புகளின் பின்னணி. இந்த நிலைமையிலும் சில பாசிச சர்வாதிகாரிகள் பல ஆண்டுகளாகத் தமது இரும்புப் பிடியைத் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். ஆனால், ஏகாதிபத்தியவாதிகள் தமது சுரண்டலுக்கு ஆபத்து ஏற்படுவதாலும், அது சுருங்கி வருவதாலும், கிழக்கு ஐரோப்பிய பாணியில் பல கட்சி ஆட்சி, நாடாளுமன்ற அமைப்பு ஆகிய ஜனநாயக சீர்திருத்தங்கள் செய்யும்படி உலகவங்கி, சர்வதேச நிதி நிறுவனம் மூலம் நிர்பந்தங்களைத் தருகின்றனர். சில பாசிஸ்டு அரசுகள் பெயரளவிலான ஜனநாயக சீர்திருத்தங்களுக்குச் சம்மதமும் தெரிவித்துள்ளன.

பெனின் நாட்டில் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் 1972ல் அதிகாரத்தைப் பிடித்த மாத்தியூ கெரெகௌ, மார்க்சிய - லெனினியத்தின் பெயரால் பாசிச ஆட்சி நடத்திவந்தார். ஏகாதிபத்திய நிர்ப்பந்தம் காரணமாக கடந்த பிப்ரவரியில் ஒரு சீர்திருத்த மாநாடு கூட்டினார். அது அவரது அதிகாரங்களைப் பறித்து முன்னாள் உலகவங்கி அதிகாரி நிசெபோர் சொக்லோவைப் பிரதமராகக் கொண்ட அதிகார வர்க்கத்தினரின் மந்திரி சபையிடம் ஆட்சியைக் கொடுத்தது.

> ஆடம்பர கேளிக்கையிலும், அதிகார போதையிலும் மிதக்கும் ஆப்பிரிக்க நாடுகளின் அதிபர்களாக உள்ள பாசிஸ்டுகளும் போலி சோசலிஸ்டுகளும் உகாண்டாவின் இடிஅமீனைப் போன்றவர்.

கபோன் நாட்டை ஒருகட்சி சர்வாதிகாரம் மூலம் 22 வருடங்கள் ஆண்டு வந்த அதிபர் ஓமர்போங்கோ, எண்ணெய் விலை வீழ்ச்சியைத் தொடர்ந்து நடந்த மக்கள் எழுச்சிக்குப் பணிந்தார். வங்கி முதலாளி காசிமிர் ஓயேம்பாவைப் பிரதமராகக் கொண்ட எதிர்க்கட்சி மந்திரி சபையிடம் அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டார். அதேபோல 30 ஆண்டுகளாக ஐவரிகோஸ்டை ஆண்டு வரும் பெளிக்ஸ் ஹௌபௌயிட் - பாயிக்னி, வரி உயர்வு - பொருளாதார நெருக்கடியை எதிர்த்த மக்கள் போராட்டங்களை ஒடுக்க முயன்று தோற்றுப்போனார். பிறகு ஒரு கட்சி சர்வாதிகாரத்தைக் ஸ்கவிட்டு மற்ற எதிர்க் கட்சியினரை அங்கீகரித்துள்ளார்.

25 ஆண்டுகளாக ஜைரே நாட்டை ஆளும் பாசிஸ்டு மொபுடு செசெசெகோவும், டான்சானியாவை ஆளும் அலிஹஸான் - ம்வினியிவும் ஜாம்பியாவை ஆளும் கென்னத் கௌண்டாவும் பலகட்சி ஆட்சிச் சீர்திருத்தங்கள் செய்வதற்கு இசைந்துள்ளனர்.

இந்தச் சீர்திருத்தங்களுக்கான நிர்ப்பந்தங்களை சில பாசிஸ்டு அரசுகள் எதிர்க்கவும் துணிந்துள்ளன. கம்யூனிசம் பேசிக் கொண்டே முதலாளித்துவத் தொழில்களை அனுமதித்து, ஏகாதிபத்தியங்களுடன் கூடிக் குலாவும் நாடு கென்யா. அங்கே பல கட்சி ஆட்சியை நிறுவும்படி அமெரிக்கா பல நிர்ப்பந்தங்கள் கொடுத்தபோதும் 12 ஆண்டுகளாக அதிபராக இருக்கும் டேனியல் அரப் மாய் தனது ஒரு கட்சி சர்வாதிகாரத்தைக் கைவிட மறுத்துவிட்டார்.

ஆக, ஆப்பிரிக்க நாடுகளில் பகிரங்கமான பாசிச அரசுகள் நீடித்தாலும் சரி, புதிய பெயரளவிலான ஜனநாயக அரசுகள் வந்தாலும் சரி, ஆளப்போவது யார்? போலி சோசலிச, போலி ஜனநாயக வேஷம் போடும் பழங்குடி இன அரச பரம்பரைத் தலைவர்கள், இராணுவத் தளபதிகள் அல்லது அதிகாரவர்க்க உயர்குடியினர். இவர்கள் அனைவரும் ஏதாவது ஒரு வல்லரசின் அடிவருடிகளாகவே இருக்கின்றனர்.

இவர்கள் அனைவருக்கும் எதிராக உண்மையான அரசியல் - பொருளாதார சுதந்திரத்தை நிறுவி இயற்கை வளங்களைப் பாதுகாத்து தேச - மக்கள் உடைமையாக்கி சுயசார்புப் பொருளாதாரத்தைக் கட்டியமைக்க வேண்டும். ஜனநாயக சக்திகள் எல்லாம் பாட்டாளி வர்க்க தலைமையில் திரண்டு அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலமே இதைச் சாதிக்க முடியும். அப்போது தான் இருண்ட கண்டமாகிய ஆப்பிரிக்கா ஒளியைக் காணமுடியும்.

● ஜனா.



படிப்பகம்

www.padippakam.com





கோவா; விதிமுறைகளை மீறி கடற்கரையை ஆக்கிரமித்துள்ள ஐந்து நட்சத்திர விடுதி.
உள்ளே: பர்போசா.

# சீரழிவுக்கு சிவப்புக் கம்பளம்

மேற்கத்திய கலாச்சார சீரழிவுகள், ஆபாசக் களியாட்டங்கள், சூதாட்டம், போதைப் பொருட்கள், விபச்சாரம் என எதற்கும் பஞ்சமில்லை; இவற்றிற்கு பேர் போன பாரீஸ், சிங்கப்பூர் போன்ற இடங்களுக்குச் செல்லத் தேவையில்லை; அனைத்தையும் இந்தியாவிலேயே உங்களுக்காகத் தருகிறோம் வாருங்கள் என்கிற பாணியில் விளம்பரம் கொடுத்து சுற்றுலா பயணிகளை கூவி அழைத்துக் கொண்டிருக்கின்றன, கடற்கரையோர ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள். இத்தகைய சீரழிவுகளை பரப்பிவரும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களுக்கு மேலும் அகலப்பாதை அமைத்துக் கொடுத்திருக்கிறது தேசிய முன்னணி அரசு. கடற்கரையோர ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் கடற்கரை எல்லைக் கோட்டிலிருந்து 500 மீட்டர் தள்ளிதான் கட்டிடம் கட்ட வேண்டும் என்றிருக்கும் விதியை 200 மீட்டருக்கு அடுத்தே கட்டிடங்களைக் கட்டிக் கொள்ளலாம் என மாற்றி அறிவித்துள்ளது. இப்புதிய சட்டதிருத்தத்தை கோவா முதலமைச்சர் பர்போசா பெரிதும் வரவேற்று புளகாங்கிதமடைந்தார். மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் அருண்நேரு சிலவாரங்களுக்கு முன்பு கோவா வந்தபொழுது அரசு அதிகாரிகள் மற்றும் சுற்றுலாத் துறையைச் சேர்ந்த அமைப்பினரை கூட்டிவைத்து தெற்கு கோவாவில் உள்ள ராமதா ஹோட்டலில் விருந்து கொடுத்தார். இதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

கோவா கடற்கரையில் 107 கி.மீ. பரப்பளவிற்குள்ளேயே 69 ஹோட்டல்களை கட்டுவதற்கு தனியாருக்கு அனுமதி வழங்கினார் முதலமைச்சர் பர்போசா. தாஜ் குரூப், லீலா கெம்பின்ஸ்கி மற்றும் ராமதா ஹோட்டல் முதலாளிகளே அதிக இடங்களை வளைத்துப் போட்டு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் (எம்.இ.எஃப்.பின்) அனைத்து விதிகளையும் மீறி கட்டிடங்களை எழுப்பியிருக்கிறார்கள். பக்கத்து நிலத்து சொந்தக்காரர்களை எல்லாம் தமது வன்முறை வழிகள் மூலமே நிர்பந்தித்து நிலத்தை அபகரித்துக் கொண்டு கட்டிடங்களை கட்டுகிறார்கள். ஹோட்டல் ராமதா, 9 மீட்டர் உயரத்திற்குள் கட்டிடம் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்ற விதிமுறையை மீறி கட்டிடம் கட்டியுள்ளது. லீலா கெம்பின்ஸ்கி முதலாளிகளோ இந்த கோவாதிட்டத்தில் ஹோட்டல் கட்டுவதற்கு 4.25 கோடி ரூபாயை செலவழித்து இவ்வருடத்தில் மூன்றரை கோடிக்கு மேல் வருமானம் வரும் என காத்திருக்கிறார்கள்.

ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் கடற்கரைப் பகுதிகளை வளைத்து கட்டிடம் கட்டி வருவதால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுகிறது. இவர்கள் வெளிநாடுகளிலிருந்து கட்டிட இன்ஜினியர்களை வரவழைத்து பிரம்மாண்டமான கட்டிடங்களை கட்டுவதற்காக கடற்கரை மணல்மேடுகளை தரைமட்டம் ஆக்குகிறார்கள். இதனால் கடல் - புயல், வெள்ள அபாய பாதுகாப்புகள் அழிந்து வருகின்றன. இத்தகைய கட்டிடங்களுக்காக மணற்பரப்பை செம்மண்ணால் மூடுவதால் தாவரங்கள் நாசமாகின்றன. இவ்வாறு டாக்டர் ஆல்வார் தலைமையிலான 'கோவா பவுண்டேசன்' அறிக்கை சமர்ப்பித்தது. கோவா சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பற்றி கண்காணித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக எம்.இ.எஃப்-பால் நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழுதான் 'கோவா பவுண்டேசன்'. இக்குழுவும், இதன் துணை அமைப்பான 'ஜாக்ரூட் கோயன் கரான்சி பௌக்' என்ற அமைப்பும், சில சமூக நல அமைப்புகளும் சேர்ந்து கோவாவில் 200 மீட்டர் பரப்பளவில் கட்டப்படும் ஹோட்டல்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டதை எதிர்த்து வழக்கும் தொடுத்துள்ளன. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் மேனகா காந்தியோ எம்.இ.எஃப் மூலம் தாஜ், லீலாகெம்பின்ஸ்கி முதலான எட்டு ஹோட்டல்களை இடித்துத் தள்ள ஆணை பிறப்பித்தார். இந்த ஆணையை நடைமுறைப்படுத்த தமக்கு ஆதரவாக உள்ள 'கோவா பவுண்டேசன்' குழு மூலம் நெருக்கடி கொடுத்தார்.

''ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் மூலம் பலபேருக்கு வேலைக் கிடைக்கிறது. ஹோட்டல் ஒன்றுக்கு 400 முதல் 500 பேர் வேலைக்குத் தேவைப்படுகிறார்கள். ஹோட்டல்களில் பல மரங்களும், தோட்டங்களும் அமைத்து கோவா நகரை அழகுபடுத்துகிறார்கள். மேலும் விளையாட்டுத் துறைக்கு பல நன்கொடைகள் கொடுக்கிறார்கள். இந்த ஆண்டு 'சந்தோஷ் டிராபி' கால்பந்தாட்டப் போட்டிக்குக்கூட உரிமம் பெறாத ஹோட்டல் முதலாளிகளிடமிருந்து நன்கொடையாக அபராதம் வசூலிக்கப்பட்டது. அடுத்த ஆண்டு கால்பந்தாட்டப் போட்டியை நடத்துவதற்கு முழு நிதியையும் ஹோட்டல் லீலா முதலாளிகள் கொடுப்பதாக பொறுப்பெடுத்துக் கொண்டுள்ளார்கள். சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கு பெரிதும் உதவும் இவர்களது ஹோட்டல்களை நாங்கள் இடிக்க மாட்டோம். வேண்டுமானால் மேனகா காந்தியே வந்து இடித்துக் கொள்ளட்டும்'' என பகிரங்கமாக அறிவித்தது பர்போசா கும்பல். அரசியல் 'ஸ்டண்ட்' அடித்த மேனகா காந்தியும் இதற்குப்பின் மௌனமாகிவிட்டார்.

சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திலே காபினெட் மினிஸ்டர் நீலாமணி ரௌத்ராய்க்கும், துணையமைச்சர் மேனகா காந்திக்கும் இடையிலான அதிகார மோதல் நெடுநாளாக இருந்து வருகிறது. மேனகா காந்தி வெளிநாட்டு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த சமயத்தில் ரௌத்ராய் அருண்நேருவுடன் சேர்ந்து முடிவெடுத்து இப்புதிய சட்டதிருத்தம் அமுலுக்கு கொண்டு வர முயற்சியெடுத்தார். மேனகா காந்தியின் செயல்களை முடக்குவதற்காக மேலும், அவருக்கு ஆதரவாக இயங்கும் 'கோவா பவுண்டேசன் குழுவையும் கலைப்பதென சேர்ந்து முடிவெடுத்திருக்கிறார்கள்.

சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்யும் பொழுதும் சரி, அதற்காக பல சலுகைகளை செய்யும் பொழுதும் சரி அரசுக்கு இதன் மூலம் அன்னிய செலாவணி அதிகரித்து வருமானம் கிடைக்கும் என்ற காரணத்தையே முன்வைக்கிறார்கள். இப்புதிய சட்டதிருத்தத்திற்கும் தேசிய முன்னணி அரசு இதையே காரணமாக வைக்கிறது. இதற்கு "டாலருக்காகவும்(அன்னிய செலாவணிக்காகவும்), பெரிய செல்வந்த மேட்டுக்குடி வகுப்பினரின் உல்லாச பொழுது போக்கிற்காகவும் நமது நாட்டு இயற்கை வளத்தை (கடற்கரை மணல்மேட்டை) நாம் ஏன் அழித்துக் கொள்ள வேண்டும்? நமது நாட்டுச் சுற்றுச் சூழலையும், சுகாதாரத்தையும் அழித்துக் கொள்ளாமல் அன்னிய செலாவ



படிப்பகம்

www.padippakam.com

ணியை ஈட்டுவோம். மாறாக இன்று சுற்றுச்சூழலை அழித்தால் நாளை அது சுற்றுலாத்துறையையே பாதிக்கும்'' என எச்சரித்து பதில் தருகிறார், சுற்றுச்சூழல் ஆய்வாளர் டாக்டர் ஆல்வார்.

ஐந்து நட்ச்சத்திர ஹோட்டல்களால் சுற்றுச் சூழல் மட்டுமல்ல நமதுநாட்டு பொருளாதாரமும், கலாச்சாரமும் பாதிக்கப்படுகிறது. கிராமத்து பட்டிதொட்டிவரை மேற்கத்திய கலாச்சார சீரழிவுகள் பரவியதற்கு ஐந்து நட்சத்திர ஹோட்டல்களும் காரணமாக விளங்குகின்றன. ஐந்து நட்சத்திர கலாச்சார மோகத்தால் காதலுக்காக யாரையும் கொலை செய்வது மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையாவது, விபச்சாரம் - ஓரினச் சேர்க்கை முதலானவைகளில் ஈடுபடுவதன் மூலம 'எயிட்ஸ்' நோயால் பாதிக்கப்படுவது என நமது இளைஞர்கள் சீரழிந்து நிற்கிறார்கள். 'கோவாவில் 50 முதல் 100 பேர் வரை 'எயிட்ஸ்' நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக கணக்கிட்டுள்ளார்கள். இந்த ஹோட்டல் முதலாளிகள் நமது நாட்டு பொருளாதாரத்தைச் சூறையாடுவதும், பல கடத்தல் - பேரங்கள் மூலம் வெளிநாட்டு கம்பெனிகளுக்கு - முதலாளிகளுக்கு தாரைவார்த்துக் கொடுப்பதும் சாதாரணமாக நடக்கிறது. இத்தகைய தொழிலில் மஃபியா கிரிமினல் கும்பல்களும் நுழைந்து செல்வாக்கு செலுத்துகின்றன. பம்பாய் முதல் கோவா வரையுள்ள கடற்கரையோர ஹோட்டல்களில் மஃபியா கிரிமினல் கும்பலின் செல்வாக்கும் - ஆதிக்கமுமே அதிகம்.

ஐந்து நட்ச்சத்திர ஹோட்டல் தொழிலில் - சுற்றுலாத் துறையில் அரசியல்வாதிகள், தரகு முதலாளிக் குடும்பங்கள், மஃபியாக்கள், அரசு அதிகாரிகளின் கூட்டுக் கொள்ளைக்கு இப்படி சட்டத்தையே வளைத்து கொடுத்துள்ளது தேசிய முன்னணி அரசு. 1986ல் ராஜீவ் அரசு இதே சட்ட திருத்தத்தை கோவா, திருவனந்தபுரம், பூரி - கொனாரக் மற்றும் மஹாபலிபுரம் ஆகிய நான்கு பகுதிகளுக்கு மட்டுமே உரியது என அறிவித்திருந்தது. இன்று வி.பி.சிங் அரசு இதை நாடு முழுவதுக்குமான சட்டமாக திருத்தியிருக்கிறது; ராஜீவின் நடைமுறையை மேலும் வளர்த்தெடுத்திருக்கிறது. இதுதான் தேசிய முன்னணியின் காங்கிரசு மாற்றுக் கொள்கை!

● ராசு.

# இயக்கச் செய்திகள்

## பகத்சிங் இளைஞர் முன்னணியின் கொள்கை விளக்கப் பொதுக்கூட்டம்

திருச்சி காந்தி மார்க்கெட் நெரிசல், பொது இடங்களில் சைக்கிள் ஸ்டாண்டு காண்டிராக்டர்களின் கொள்ளை - இவைகளை அம்பலப்படுத்தி 24.6.90, 25.6.90 ஆகிய இரண்டு நாட்களில் முறையே தாராநல்லூர், எடத்தெருஅண்ணாசிலை ஆகிய பகுதிகளில் தமது கொள்கை விளக்கப் பொதுக்கூட்டத்தை நடத்தியது, பகத்சிங் இளைஞர் முன்னணி.

தோழர் சுந்தர் தலைமைதாங்க தோழர்கள் சுகதேவ், ஜெகதீசன் ஆகியோர் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். தோழர்கள், தமது இரண்டம்ச திட்டத்தை விளக்கிப் பேசியதோடு, சர்வதேச அளவில் இளைஞர்களின் பங்களிப்பு பற்றியும், இன்றைய இளைஞர்கள் நிலை; அவர்கள் செய்ய வேண்டியது பற்றியும் பேசினர். கூட்டங்களில் 150க்கும் மேற்பட்டவர்கள் கூடி ஆர்வமாகக் கேட்டனர். பலர் அமைப்பில் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர்.

தகவல்: ப.இ.மு., திருச்சி.

○ ○ ○

## தொடர்ச்சியான போராட்டம்; அதிகார வர்க்கம் பணிந்தது

திருவண்ணாமலை வட்டம் மங்கலத்தை அடுத்த மணிமங்கலம் கிராமத்தில் குடிநீர் பிரச்சினை கடுமையாக உள்ளது. இதைத் தீர்க்கக் கோரி துரிஞ்சாபுரம் ஒன்றிய அலுவலகம் முன்ப 26.4.90 அன்று விவசாயிகள் விடுதலை முன்னணி தலைமையில் பகுதி மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதற்குப் பிறகும் பிரச்சினை தீர்க்கப்படாமல் நிலைமை அப்படியே தொடர்ந்தது.

இதையடுத்து 8.6.90 அன்று திருவண்ணாமலை காமராஜ் சிலையிலிருந்து கலெக்டர் அலுவலகம் வரை பிரதான வீதிகளின் வழியே ஊர்வலமாகச் சென்று திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இரண்டு பெண்கள் உட்பட 5 பேர் கொண்ட பிரதிநிதிகள் குழு ஒன்று கலெக்டரை சந்தித்து மனு கொடுத்தது. மனுவை பெற்ற கலெக்டர் அலட்சியப்படுத்தி - பதில் கூறாமல் திருப்பி அனுப்பினார். பின்னர், வி.வி.மு. அமைப்பாளர் தோழர் பழனி, அதிகார வர்க்கத்தினரின் திமிர்த்தனத்தைப் பற்றியும் அதற்கு உதாரணமாகத் திகழும் கலெக்டரைப் பற்றியும் விளக்கிப் பேசினார். அடுத்து 'இந்த அதிகாரக் கூட்டத்தை நிர்பந்திக்கும் வகையிலான அடுத்தக்கட்டப் போராட்டத்தை நடத்த தயாராக வேண்டும்' என்று மக்களை கேட்டுக் கொண்டதற்குப் பிறகு எழுச்சிகரமாக மக்கள் முழக்கமிட ஆர்ப்பாட்டம் முடிந்தது.

தற்பொழுது குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆரம்ப வேலைகள் கிராமத்தில் தொடங்கப்பட்டுள்ளன. உறுதியான - தொடர்ச்சியான போராட்டங்கள் இல்லாமல் அதிகார வர்க்கம் சிறிதும் அசையாது என்பதை மக்கள் நன்கு புரிந்து கொண்டனர்.

தகவல்: வி.வி.மு., திருவண்ணாமலை.

● ● ●

## சாதி-மத கலவர அபாயத்தை முறியடித்து பொதுக்கூட்டம்

திருவையாறு சுற்றுவட்டாரத்தில் உள்ள ஒரத்தூர், கண்டியூர் முதலான பல ஊர்களில் சாதி-மதக் கலவரங்கள் தலைதூக்குவதும் பல கிராமங்களில் அதற்கான புகைச்சலும் இருந்து வருகிறது.

எனவே, சாதி-மதக் கலவரங்களைத் தூண்டும் ஆதிக்க சக்திகளை அம்பலப்படுத்தியும், சாதி-மத வெறிக்குப் பலியாகாமல் அவற்றிற்கு எதிராக ஒன்றுபடும்படி உழைக்கும் மக்களை அறைகூவியும் கடந்த 22.6.90 அன்று திருக்காட்டுப்பள்ளியிலும், 23.6.90 அன்று கண்டியூரிலும் வி.வி.மு. பொதுக் கூட்டம் நடத்தியது.

திருக்காட்டுப்பள்ளி பொதுக்கூட்டத்திற்கு தோழர் மா.இலட்சுமணனும், கண்டியூர் பொதுக்கூட்டத்திற்கு தோழர் எஸ்.சீனிவாசனும் தலைமை தாங்கினார்கள். இரு கூட்டத்திலும் தோழர்கள் இராம.துரை மாணிக்கம் (வி.வி.மு. திருவோணம் வட்டச் செயலாளர்), காளியப்பன் (ம.க.இ.க. மாநிலப் பொருளாளர்), ஜெயசீலன் (வி.வி.மு., திருவையாறு ஒன்றிய அமைப்பாளர்) ஆகியோர் உரை நிகழ்த்தினர். 200க்கும் மேற்பட்ட மக்கள் கூடி ஆதரவளித்தனர். எம்.சி.பி.ஐ., சி.பி.எம். ஆகிய கட்சிகள் உட்பட அனைத்து கட்சிகளும் பகுதியில் நிலவும் இப்பிரச்சினை குறித்து வாய்மூடிக் கொண்டிருக்கும் பொழுது வி.வி.மு. நேர்மையுடன் தைரியமாக மக்களிடம் சாதி-மத அபாயத்திற்கு எதிரான இயக்கம் மேற்கொண்டதை பொதுமக்கள் பாராட்டினர்.

தகவல்: வி.வி.மு., திருவையாறு

● ● ●

## நன்கொடை கொள்ளையை எதிர்த்து இயக்கம்

நல்லம்பள்ளி அரசு மேனிலைப்பள்ளி நிர்வாகமும், கட்டிடக் கமிட்டி என்கிற பெயரில் ஒரு மோசடிக் கும்பலும் சேர்ந்து வருடந்தோறும் மாணவர் சேர்க்கையின் போது கட்டாய கட்டிட நிதிவசூல் செய்கின்றன. இவர்கள் நிர்ணயித்த தொகையை கட்ட பெற்றோர்கள் கடனை உடனை வாங்கி அவதிப்படுகிறார்கள். பணம் கட்ட முடியாதவர்கள் அவமானப்படுத்தப்பட்டு வெளியே விரட்டியடிக்கப் படுகிறார்கள்.

இவ்வசூல் முறையைக் கண்டித்து புதிய ஜனநாயக வாசகர் வட்டம் 9.6.90 அன்று தட்டி - சுவரொட்டி மூலம் இயக்கம் எடுத்தது. இதனால் நிர்வாகம் மற்றும் கட்டிடக் கமிட்டியினர், அமைப்புத் தோழர்களுக்கும் அவர்களது குடும்பத்தாருக்கும் பலவித நெருக்கடிகள் கொடுத்தனர்; தோழர்கள் கட்டியிருந்த தட்டியை ஆள்வைத்து கழட்டிச் சென்றனர். இதை அம்பலப்படுத்தி பிரசுரம் விநியோகிக்கப்பட்டது. 10.7.90 அன்று மாலை பள்ளியின் வாயில் முன்பு நிதிவசூல் முறையை எதிர்த்து - அம்பலப்படுத்தியும், ஆசிரியர் பெருமக்களையும், உழைக்கும் மக்களையும், மாணவர்களையும் இதற்கெதிராக அணிதிரளும்படியும் கேட்டு தெருமுனைப் பிரச்சாரமாக நாடகம் நடத்தப்பட்டது. பகுதிவாழ் மக்கள் சுமார் 200-க்கும் மேற்பட்டோர் கூடியிருந்து நிகழ்ச்சியைக் கண்டனர்.

— பு.ஜ. வாசகர் வட்டம், நல்லம்பள்ளி.

படிப்பகம்

www.padippakam.com

# ஈழத்தில் இனப்படுகொலை! துரோகிகளின் பாசாங்கு!

கடந்த ஒரு மாத காலமாக பாசிச பிரேமதாசா கும்பல் ஈழத்தமிழர்கள் மீது நடத்திவரும் கொலை வெறியாட்டம், பாசிச ஜெயவர்த்தனே கும்பலின் அட்டூழியங்களையும் விஞ்சிவிட்டது.

"இது பயங்கரவாதிகளான புலிகளுக்கு எதிரான யுத்தம்; சிவிலியன்களுக்கு எதிரானதல்ல" என்று பசப்பிக் கொண்டே தரை, வான், கடல் என மும்முனைகளிலும் தாக்குதல் தொடுத்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை குண்டுகளால் துளைக்கப்பட்ட மயான பூமியாக மாற்றியுள்ளது, பாசிச பிரேமதாசா கும்பல். புலிகளை ஒழிப்பது என்ற பெயரில் கொத்துக் கொத்தாக தமிழ் இளைஞர்களைச் சுட்டுக் கொன்றும், பிணங்களை நட்ட நடுவீதியில் டயர்களைப் போட்டு எரித்தும் இனவெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

புலிகளுக்கு எதிரான போரில் வெற்றி கொள்ள முடியாத ஆத்திரத்தில் சிவிலியன்களைத் தாக்கி அழிப்பதையே சிங்கள ராணுவம் நோக்கமாகக் கொண்டுள்ளது. தரைப்படை மூலம் புலிகளை வீழ்த்த முடியாத தோல்வி ஜுரத்தில் போர் விமானங்கள் மூலம் பெட்ரோல் பேரலில் தீவைத்து வீசியும், ஹெலிகாப்டர்கள் மூலம் கண்மூடித்தனமாக குண்டுவீசி சிவிலியன்களை அழிப்பதையுமே சிங்கள ராணுவம் தனது போர்முறையாகக் கொண்டுள்ளது

தொடர்ச்சியான விமானக் குண்டு வீச்சுக்கு அஞ்சி பள்ளிகளிலும் கோயில்களிலும் தஞ்சம் புகுந்த மக்கள் மீதே சிங்கள ராணுவம் தாக்குதல் நடத்துகிறது. கோயில்களில் கூட தஞ்சம் புகவிடாமல் திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்தையே சிங்கள ராணுவம் பாசறையாக்கிக் கொண்டு தாக்குகிறது. ஈழத்தமிழர்களைப் பட்டினி போட்டுக் கொல்லும் நோக்கத்தோடு தொடர்ந்து ஊரடங்கு உத்திரவு போட்டும், அரிசி - உணவுப் பொருட்கள் - மருந்துப் பொருட்கள்கூட கிடைக்காமல் தடுத்தும் அட்டூழியம் புரிகிறது. பட்டினியால் பரிதவிக்கும் குழந்தைகளுக்காக பால் பவுடரையும் உணவுப் பொருட்களையும் கொண்டு சென்ற செஞ்சிலுவைச் சங்கத்தினரையே தாக்கி விரட்டுகிறது. அகதிகளாகத் தப்பியோடி வரும் ஈழத்தமிழர்களின் படகுகளின் மீதே குண்டு வீசித் தாக்கி இனவெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது, சிங்கள கூலிப்படை. இதோடு, கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக உள்ள அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம்கள் சிலரைக் கொன்றும் கடைகளைத் தீயிட்டுக் கொளுத்தியும் பழியைப் புலிகள் மீது போட்டு இனக் கலவரத்தைத் தூண்டி விட்டுள்ளது பாசிச பிரேமதாசா கும்பல்.

ஆனாலும் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் பாசிச பிரேமதாசா கும்பலால் வெற்றி பெற முடியவில்லை. ஆயுதமேந்திப் போராடும் இளஞ்சிறுவர்களைப் பார்த்து, புலிகளின் இந்த "பேபி" (குழந்தை) படையினர் சிங்கள ராணுவத்தைப் பார்த்தால் சிறுநீர் கழித்து விடுவார்கள்" என்று ஏளனப்படுத்தினார் பிரேமதாசா. ஆனால் அந்த இளம்புலிகள்தான் இன்று சிங்கள ராணுவத்துக்கு தண்ணி காட்டுகிறார்கள். ஏறத்தாழ இரு மாதங்களாகியும் சிங்கள ராணுவத்தால் யாழ்கோட்டையைக் கைப்பற்ற முடியவில்லை. கிழக்கு மாகாணத்தையும் தம் கட்டுப்பாட்டில் கொண்டு வர முடியவில்லை. சிங்கள ராணுவத் தளபதியே வெளிப்படையாக தமது தோல்வியை ஒப்புக் கொண்டுள்ளார்.

பாசிச பிரேமதாசா கும்பலுக்கு எதிராக ராணுவ ரீதியில் புலிகள் தாக்குப்பிடித்து நின்ற போதிலும், அரசியல் ரீதியிலும் தார்மீக ரீதியிலும் பாசிச கும்பல் கட்டவிழ்த்து விடும் அவதூறு - பொய் பிரச்சாரத்துக்கு எதிராக வெற்றியை ஈட்ட முடியவில்லை. புலிகள் தமது பாசிச நடவடிக்கைகளால் இதர ஈழ விடுதலை இயக்கங்களின் ஆதரவைத் திரட்டத் தவறியிருப்பதே இதற்குக் காரணம்.

ஈழவிடுதலைப் போர் முன்னேறத் தொடங்கியதும் பாசிச பிரேமதாசா கும்பலுக்குப் போட்டியாக, இந்திய தேசிய வெறியர்களும், பாசிஸ்டுகளும் பத்திரிக்கைகளும் புலிகளுக்கு எதிரான அவதூறு பிரச்சாரத்தை நைச்சியமான முறையில் செய்யக் கிளம்பிவிட்டார்கள். புலிகளிடம் 'அமைதிப்படை' உதைபட்டுத் திரும்பியதால் ஏற்பட்ட ஆத்திரமும், அதைவிட ஈழ விடுதலைப் போர் வெற்றி பெற்றால் அதன் தாக்கம் காரணமாக இந்தியாவிலும் பல்வேறு தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போர் தீவிரமாகிவிடும் என்கிற பீதியும் காரணமாக இரட்டிப்பு வெறியோடு எதிர்க்கிறார்கள். இந்திய மண்ணில் அகதிகள் குவிவதைக் கண்டு நீலிக்கண்ணீர் வடிக்கும் அவர்கள், இதற்கெல்லாம் புலிகள் தொடுக்கும் அனாவசியமான யுத்தம்தான் காரணம்; அவர்களால்தான் இந்த அவல நிலை ஏற்பட்டுள்ளது என்று கீழ்த்தரமான பிரச்சாரத்தில் இறங்கியுள்ளனர். இன்னொருபுறம் ஆயுதப் போராட்டத்தின் மூலம் ஒருபோதும் வெற்றி கொள்ள முடியாது; அது துன்ப துயரமிக்க தற்கொலைப் பாதை; ஆயிரக்கணக்கானோர் கடந்த ஏழாண்டுகளாக தியாகிகளாகிய போதிலும் இன்னமும் வெற்றி பெற முடியாததற்கு இதுவே காரணம் — என்று புரட்சிப் பாதையில் இறங்கும் இளைஞர்கள் மீது உளரீதியான யுத்தத்தைத் தொடுக்கின்றனர்.



ஈழ விடுதலைப் போரை அழித்துவிட முடியாது. எழுகிறது புதிய தலைமுறை!

இருப்பினும், இனத்துரோகியாக அம்பலப்பட்டுப் போயுள்ள கருணாநிதி ஈழத்தில் நடக்கும் இனப்படுகொலையைக் கண்டித்து கடையடைப்பு போராட்டத்தை அறிவித்து ஆதாயம் தேடமுயன்றதும், அனைத்து ஓட்டுக்கட்சிகளும் பிழைப்புவாத நோக்குடன் இதை ஆதரித்து தம்மையும் ஈழவிடுதலை ஆதரவாளராக காட்டிக் கொள்ள முயல்கின்றன. ஆனால் இவர்கள் எவருமே ஈழவிடுதலைப் போரை ஆதரிப்பவர்கள் அல்ல; இனப்படுகொலைக்கும் ஒடுக்குமுறைக்கும் ஒரே தீர்வாக அமையும் சுயநிர்ணய உரிமையை ஏற்பவர்களுமல்ல. பாசிச பிரேமதாசா கும்பலுடன் சமரசமாகப் போய், ஈழத்தமிழர்களின் உரிமைகளை அடகு வைத்து 'அரசியல் தீர்வு' காண வேண்டும்' என்றுதான் கோருகின்றனர். ஆயிரக்கணக்கில் அகதிகளாகக் குவியும் ஈழத்தமிழர்களுக்காக நீலிக்கண்ணீர் வடித்து ஆறுதல் கூறியதைத் தவிர இந்த ஓட்டுக்கட்சிகளும் கருணாநிதி அரசும் ஒரு மண்ணும் செய்யவில்லை. தட்டுமுட்டுச் சாமான்களையும் சோப்பு - சீப்பு - பவுடர்களையும் அற்ப விலைக்கு விற்று அகதிகள் தமது வயிற்றைக் கழுவுகின்றனர். அகதிகள் முகாம் என்ற பெயரிலுள்ள வெட்டவெளிப் பொட்டல்களில் தமது பிஞ்சுக் குழந்தைகளுடன் அல்லற்படுகின்றனர்.

துன்பமும் துயரமும் வேதனையும் தொடர்ந்து வாட்டினாலும் ஈழமக்களின் தேசிய இன உரிமைப் போரை ஒருபோதும் அடக்கிவிட முடியாது. ஈழ விடுதலைப் போர் உள்ளிட்டு எந்த ஒரு இனவிடுதலைக்கான கொரில்லா போராட்டத்தையும் ராணுவ ரீதியில் வெற்றி கொண்டதாக உலகில் எங்குமே வரலாறில்லை. ராணுவ ரீதியில் வலுவான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கூட உள்நாட்டில் தொடரும் ஐரிஷ் இன உரிமைப் போராட்டத்தை அழிக்க முடியவில்லை. இந்தியாவிலும் கடந்த 40 ஆண்டுகளாகத் தொடரும் காஷ்மீர் மற்றும் வடகிழக்கிந்திய மக்களின் சுயநிர்ணய உரிமைப் போரை வேரறுக்க முடியவில்லை. இன்று பாசிச பிரேமதாசா கும்பல் தொடுக்கும் யுத்தத்தின் மூலம் ஈழ விடுதலைப் போர் தற்காலிகமாக பின்னடையலாமே தவிர அதை ஒருக்காலும் அழித்தொழிக்க முடியாது.

■ குமார்.

படிப்பகம்

www.padippakam.com

# மதவெறிக் கட்சி: ஆட்சியின் லட்சணம்!

காங்கிரசுக்கு அடுத்து தனிப்பெ ரும் கட்சியாக உருவெடுத்துள்ளது பாரதீய ஜனதா கட்சி. நாடாளுமன்றத்தில் 82 உறுப் பினர்களைக் கொண்ட தனிப்பெரும் 2வது கட்சியாகவும் வி.பி.சிங் ஆட்சியின் தலை விதியைத் தீர்மானிக்கும் கட்சியாகவும் இருக்கிறது. மத்தியப் பிரதேசம், ஹிமாச்ச லப் பிரதேசம் இரண்டு மாநிலங்களில் தனிப் பெரும்பான்மை பெற்றும் ராஜஸ்தான், குஜ ராத் மாநிலத்தில் ஜனதாதள கட்சி கூட்ட ணியோடும் ஆட்சியை நடத்துகிறது. '94 ஆம் ஆண்டு வரும் பொதுத் தேர்தலில் இந் திய நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கத்தோடு செயலாற்றுகிறது.

காங்கிரசு, ஜனதாதளம் போன்று பதவி வேட்டைக்காரர்களைக் கொண்ட கட் சியோ, போலிக் கம்யூனிஸ்ட்டுகளைப் போல சந்தர்ப்பவாத தலைமையைக் கொண்ட கட்சி அல்ல! மாறாக, தன்னலம் - பதவி மோகமற்ற, அப்பழுக்கற்ற, கொள்கை - லட்சியப் பிடிப்பு மிக்க தலைவர் களைக் கொண்ட கட்சி என்ற கருத்தை உரு வாக்கி அதிகாரத்தை கைப்பற்றியுள்ளது.

இந்து மதவெறி, கடைகோடி வலது சாரி பிற்போக்கு தேசியவெறி ஆகிய அதனு டைய நிலையான கொள்கை லட்சியங்களு டன் மக்களின் அன்றாட பிரச்சினைகளை யும் சேர்த்து இயக்கங்கள் மற்றும் ஆசிரமங் கள், சமூக சேவை அமைப்புகள் நடத்தியது. இதன் மூலம், தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக் கள் உட்பட விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், சிறு வியாபாரிகள் அனைவ ரது நண்பன் என்ற கருத்தை உருவாக்கியது.

குறிப்பாக, பொது வாழ்வில் நேர்மை யின்மை, அரசியலில் ஊழல், அரசு நிர்வா கத்தில் அரசியல் குறுக்கீடு போன்ற காங்கி ரசு கட்சியின் அரசியல் கலாச்சாரத்தை தனது ஆதரவு பத்திரிக்கைகள் மூலம் கடு மையாக எதிர்த்தது. அத்தியாவசிய பண் டங்கள் விலை உயர்வு, பஸ்கட்டண உயர்வு மற்றும் போதை மருந்து, குடி, 'டிஸ்கோ' ஆகிய கலாச்சார சமூக சீரழிவுகளுக்கு எதி ராக அமைப்பு ரீதியில் திரண்டது. விவசாயி களுக்கு கடன் நிவாரணம், சலுகை, மான் யம் கோரியும் போராடியது. எதிர்க்கட்சி யாக இருக்கும் போது ஓட்டுக்கட்சிகள் அடிக்கும் சவடால்கள், 'ஸ்டண்டு'களிலி ருந்து மாறுபட்டு பொறுப்பான, மக்கள் நல னுக்காக போராடும் கட்சியாக காட்டிக் கொண்டது!

உண்மையில் இக்கட்சி மற்ற ஓட்டுப் பொறுக்கி கட்சிகளிலிருந்து வேறுபட்டதா? தரகு முதலாளிகள், நிலப் பிரபுக்களுக்கு எதி ராக மக்கள் நலன்களுக்காக அரசு அதிகா ரத்தை செலுத்தக் கூடியதா? அதன் தலைவர் கள் பதவி மோகமற்ற, அப்பழுக்கற்ற கொள்கை லட்சியப் பிடிப்பு மிக்கவர் களா? இதோ! மத்திய பிரதேசம், ஹிமாச்சல பிரதேசம் ஆகிய இரண்டு மாநிலங்களில் நேரடியாகவும், குஜராத், ராஜஸ்தான் இரண்டு மாநிலங்களில் ஜனதாதள கட்சி கூட்டணியோடும் ஆட்சி நடத்தும் பாரதீய ஜனதா கட்சியின் முகவிலாசம்!

**மத்திய பிரதேசம்**

319 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட மத்தியபிரதேச மாநிலத்தில் தனித்து 269 இடங்களுக்கு போட்டியிட்ட பாரதீய ஜனதா கட்சி 220 இடங்களில் வெற்றி பெற்றது. விவசாயக் கடன்கள் தள் ளுபடி, நேர்மையான அரசாங்கம், வேக மான வளர்ச்சி திட்டங்கள், ஊழலற்ற முன் மாதிரியான அரசியல் இவற்றை மக்களுக்கு வழங்கப் போவதாக வாக்குறுதி கொடுத்தது.

அர்ஜுன் சிங், எஸ்.சி.சுக்லா போன்ற காங்கிரசு ஊழல் பெருச்சாளிகளின் ஆட்சி யில் சிக்கியிருந்த மக்கள் பாரதீய ஜனதா கட்சிக்கு நம்பிக்கையோடு வாக்களித்தனர். முதல்வரை தேர்ந்தெடுக்கும் போதே அதி கார சண்டை முற்றியது. வாஜ்பேயின் ஆதர வாளரான கைலாஷ் ஜோஷி பின்னுக்கு தள் ளப்பட்டார். கட்சி உயர் மட்டத்தின் இன் னொரு கோஷ்டியான விஜியராஜ் சிந்தியா, மாநிலத் தலைவர் சாதார்அங்கர் ஆதரவுடன் சுந்தர்லால் பட்வா முதல்வரானார்.

இவர் ஏற்கனவே '80 ஆம் ஆண்டில் 3 வாரம் ம.பி. முதல்வராக இருந்து 'புகழ்' பெற்றவர். அதிகாரத்தில் அமர்ந்த பிறகு வாக்குறுதிகள் அனைத்திற்கும் கையை விரித்தார். தங்கள் ஆட்சியின் செயல்பாட் டைப் பற்றி ஜூன் 2, 3 தேதிகளில் பிலாஸ் பூர் நகரத்தில் கூடிய பா.ஜ க. மாநில நிர்வா கக் குழு கீழ்கண்டவாறு கூறியது. "விவசா யிகள், கட்சியின் உள்ளூர் தலைவர்களை நெருக்குகிறார்கள். அவர்கள் மக்களிடம் செல்லவும் பயப்படுகிறார்கள்.... கடன் களை விவசாயிகள் கட்ட வேண்டாம் என்று விவசாயிகளுக்கு கொடுத்த வாக்குறுதிகள் நடைமுறைக்கு வரவேயில்லை" என்று எச்ச ரித்தது.

'கடன்களிலிருந்து விவசாயிகளுக்கு விடுதலை', 'கார்ஜா முக்தி' என்ற முழக் கத்தை வைத்துதான் ஓட்டு வேட்டையாடி யது. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் குறுவை சாகுபடிக்கு விவசாய கடனைதான் விவசாயிகள் மலையாக நம்பியிருப்பார் கள். கடந்த ஏப்ரலில் பழைய கடன்களையும் தள்ளுபடி செய்யாமல் வாழ்க்கையோடு விளையாடுகிறது. பா.ஜ.க. ஏறக்குறைய 50 லட்சம் விவசாயிகளை கடனை கட்ட தவறி யவர்கள் என்று கறுப்பு பட்டியலில் சேர்த் தது.

தேர்தல் வாக்குறுதிபடி சுமார் 1150 கோடி ரூபாய் விவசாயக் கடனை தள்ளுபடி செய்திருக்க வேண்டும். இதில் 50 சதவிகி தத்தை மத்திய அரசு கொடுப்பதாக கூறிய பிறகும் பா.ஜ.க. விவசாயிகளுக்கு கடனை தள்ளுபடி செய்யவில்லை.

இதே போல், பீடி இலை பறிப்பதில் ஈடுபடும் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட பழங்கு டிகளுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் கூலி உயர்வு, சிறு தொழிலாளிகளுக்கு குறைந்தபட்ச விலையில் பீடி இலையும் வழங்குவதாக தேர்தல் வாக்குறுதி அளித் தது. ஆனால் ஆட்சிக்கு வந்த பிறகு கிடைத் துக் கொண்டிருந்த கூலிக்கும் வேட்டு வைத் தது. கூட்டுறவு நிறுவனங்கள் நேரடியாக பெற்றிருந்த பீடி இலை கொள்முதலை தனி



குஜராத்: கள்ளச்சாராய சாவு; குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை.

www.padippakam.com

யார் முதலாளிகளுக்கு மாற்றி விட்டது. ஏறக்குறைய ஆண்டுக்கு 150 கோடி ரூபாய் புழங்கும் இத்தொழில் இப்போது வர்த்தக சூதாடிகள் கைவசம்!

நிலப்பட்டா வழங்குவதாக, பழங்குடிகள் தாழ்த்தப்பட்டவர்களிடம் வாக்குறுதிகள் கொடுத்து அவர்களின் வாக்குகளை பெற்றது. பஸ்தார் மாவட்டத்தில் பழங்குடிகள் பெரும்பான்மையாக வாழும் பகன்பூரி தொகுதியில் இவ்வாறு பா.ஜ.க. எம்.எல்.ஏ. வானவர் இப்போது பழங்குடிகள் நல மந்திரியாகவும் ஆகிவிட்டார். பழங்குடிகளுக்குத்தான் இன்னும் பட்டா வழங்கவில்லை. பட்டா வழங்குவதற்காக என்று ஏறக்குறைய 15,000 மரங்களை வெட்டி காட்டை அழித்து அம்மரங்களை விற்று தனக்கு வளம் சேர்த்துக் கொண்டார். இதை மறைக்க அப்பகுதியில் வேரூன்றியிருக்கும் நக்சல்பாரிகள்தான் காடுகளை அழிப்பதாக பழி போடுகிறது பா.ஜ.க. காடுகளை அழிக்கும் அம்மாநிலத்தின் மிகப்பெரும் கிரிமினல் ஆல்வி பாபா மக்களிடம் அம்பலப்பட்ட பிறகும் அவனை கைது செய்யவில்லை.

மறுபுறம் சாதாரண மக்களின் உடமைகளையும் உரிமைகளையும் சட்டத்தைக் காட்டி அழித்து அவர்களை நிராதரவானவர்களாக்கி அவமானப்படுத்துகிறது.

போபால் விஷவாயு "விபத்தில்" பாதிக்கப்பட்டவர்களுக்கு 6 ஆண்டுகளுக்கு பிறகும் நீதி கிடைக்கவில்லை. அமெரிக்க ஏகாதிபத்திய பன்னாட்டு நிறுவனம் இழைத்த இந்த தேசிய அவமானத்திற்கு நியாயமான நீதிகேட்க தனது அதிகாரத்தை பயன்படுத்தவில்லை. மாறாக, ஏற்கனவே வாழ்க்கையும் உடல் நலத்தையும் இழந்த - விஷவாயுவால் பாதிக்கப்பட்ட மக்களை அவர்களின் குடிசைகளிலிருந்து விரட்டியது. ஏறக்குறைய 4000 ஏழை குடும்பங்களை நடுத்தெருவுக்கு தள்ளியது. முக்கிய சாலைகளையும் சந்தைகளையும் காங்கிரசுக்காரர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு குடிசைகளைக் கட்டி வாடகை வசூலிக்கிறார்கள் என்று கூறியது. வசிப்போர் பெரும்பாலும் ஏழை முஸ்லீம்கள். இவ்வாறு அடுத்தகட்டமாக 13 நகரங்களில் 'ஆக்கிரமிப்பு' குடிசைகளை தரைமட்டமாக்கியது. "இது எனக்கு துர்க்மான்கேட் சம்பவத்தை (நெருக்கடி நிலை காலத்தில் டில்லியில், சஞ்சய்காந்தி தலைமையில் பல ஆயிரக்கணக்கான குடிசைகள் இடிக்கப்பட்டது) நினைவுப் படுத்துகிறது" என்று மத்திய நிதி அமைச்சர் மது தண்டவதே கண்ணீர் வடித்துவிட்டு ஒதுங்கிக் கொண்டார். அக்குடிசைவாசிகளுக்கு மாற்று ஏற்பாடு செய்துவிட்டுதான் வெளியேற்ற வேண்டும் என்ற சாதாரண மனிதாபிமான உணர்வுகூட இல்லாமல் சட்டம் பேசியது, பா.ஜ.க.



மத்தியப் பிரதேச மாநில முதல்வர் சுந்தர் லால் பட்வா.



மத்தியப் பிரதேசம்: அழிக்கப்படும் பஸ்தார் காடுகள். உள்ளே: மரங்களைக் கடத்தும் பாரதீய ஜனதா எம்.எல்.ஏ. பாலிராம் காஷ்யப்.

ஆனால், முன்னாள் காங்கிரசு முதலமைச்சர் அர்ஜுன் சிங், தேர்வான் அணைக்கட்டுக்கருகில் சட்டவிரோதமாக அரசு நிலங்களை ஆக்கிரமித்து கட்டியிருக்கும் ஐந்து நட்சத்திர பங்களாவின் அருகில்கூட நெருங்கவில்லை. "சட்ட விரோதமாக அரசு நிலங்களை ஆக்கிரமித்ததற்கு மறுக்க முடியாத ஆதாரங்கள் உள்ளது" என்று எதிர்க்கட்சியாக இருந்தபோது பலமாக எதிர்த்தது, பா.ஜ.க.

பல ஆண்டுகளாக தொடரும் நர்மதா அணைக்கட்டு திட்டத்தை எதிர்த்த போராட்டத்தை ஆட்சிக்கு வருவதற்கு முன் ஆதரித்தது. ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட உழைப்பாளி மக்களின் வாழ்க்கை பறிக்கும் அத்திட்டத்தை ஆட்சிக்கு வந்த பின் ஆதரிக்கிறது. பாபா ஆம்தே தலைமையிலான அமைப்பினர் ஏப்ரல் 6ந் தேதி பர்வானி துணை நீதிமன்ற வளாகத்தை சுற்றி மனித சங்கிலி போராட்டம் நடத்தினர். போலீசு அவர்களை துப்பாக்கி கட்டையால் அடித்து விரட்டியது. பலரை கைது செய்தது. போராட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் அடிதாங்க முடியாமல் அழுத போதும் விடவில்லை. குதிரை படையை ஏவி அவர்களை ரத்த காயப்படுத்தியது. பாபா அம்தேவை நேற்றுவரை மாசற்ற மகான், ஒப்பற்ற சமூக சேவகர் என்று பாராட்டிய பா.ஜ.க, 'குழப்பத்தை உண்டாக்கும் ஆள்' என்று சாடியது. அவரது ஆசிரமத்திற்கு முன் போலீசு சோதனைச் சாவடியை நட்டு அவரை கண்காணிக்கிறது.

அரசு நிர்வாகத்தில் அரசியல் குறுக்கீட்டை கடுமையாக எதிர்த்த இவர்கள் இப்போது அதிகாரிகளின் மாவட்ட திட்டக்குழுவில், தலைவர் குடுமியை பிடித்துக் கொள்கின்றனர். மே மாதம் 15ம் தேதி டில்லியில் மாநில எம்.பி.க்கள் கூடி தங்களுக்கு அப்பதவியை தருமாறு முதல்வருக்கு வேண்டுகோள் விடுத்தனர்.



மேலும், கீழ்மட்ட கட்சி ஊழியர்களும் அதிகார சுவையை அனுபவிப்பதற்காக கூட்டுறவு நிறுவனங்களில் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத்தை கலைத்தார், முதல்வர். காங்கிரசு கும்பல் அனுபவித்த அதிகாரத்தை பறித்துக் கொள்ள இப்படி குறுக்கே பாய்ந்தார். மக்களின் அடிப்படை உரிமையை மீறிய இந்த முறைகேடான உத்திரவை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது. மேலும் தங்கள் அதிகார முறைகேடுகளுக்கு வசதியாக ஊழல் நிரூபிக்கப்பட்ட உயர் அதிகாரிகளைகூட அதே பதவியில் வைத்து சீராட்டுகிறது.

மாநிலத்தின் பொருளாதார குற்ற புலனாய்வுத் துறை 150க்கும் மேற்பட்ட உயர் அதிகாரிகளை குற்றவாளிகள் என்று அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்தது. இந்த குற்றவாளிகள் பட்டியலில் ஐ.ஏ.எஸ்; ஐ.எஃப்.எஸ். ஐ.பி.எஸ். போன்ற சிவில் நிர்வாகம், போலீசு, அயலுறவு துறை உயர் இயக்குனர்களும் இருந்தனர். இவர்கள் சுகாதாரம், பொறியியல், கல்வி - இப்படி அத்தியாவசிய துறைகளில் லஞ்சப்பணம் மூலம் கறுப்புப் பணம் சேர்த்தவர்கள். இதற்கு முன் இருந்த காங்கிரசு அரசாங்கம் பாணியில் அறிக்கையை அப்படியே அமுக்கிவிட்டது. பா.ஜ.க. அவர்கள் மீது சாதாரண அலுவலக விசாரணையைக்கூட நடத்தவில்லை! மாறாக அவர்களுடன் அதிகார பூர்வமாக ரகசிய கூட்டங்கள் நடத்தி பேரம் செய்து கொண்டார், முதல்வர் சுந்தர்லால் பட்வா.

பா.ஜ.க.வின் அமோக வெற்றியும் அதன் அதிகார பூர்வமான ஆதரவும் இந்துமத வெறியர்களுக்கும், நிலப்பிரபுத்துவ கொடுங்கோலர்களுக்கும் வரப்பிரசாதமாக இருக்கிறது; சிவ்பூரி மாவட்டம் சாய்பியா கிராமத்தில் தாக்கூர் உயர்சாதி இந்து வெறி



படிப்பகம்

www.padippakam.com





ராஜஸ்தான் மந்தாவரி கிராமம்; மேல்சாதி இந்துவெறியர்கள் கஞ்சார் பழங்குடிகளைத் தாக்கி ஏழு பேரை வெட்டிக் கொன்றனர். படத்தில் - பாதிக்கப் பட்டவர்கள்.

யர்கள ஹோலி பண்டிகையின் களி வெறியாட்டத்தில் மூழ்கினர். தாழ்த்தப்பட்டவர்களை பறையடிக்கச் சொல்லி தாழ்த்தப்பட்ட குடும்பப் பெண்களை நிர்வாணமாக ஆடும்படி நிர்ப்பந்தித்தனர். அவர்கள் மறுக்கவே அடியாட்களை வைத்து உதைத்து அவமானப்படுத்தி ரசித்தனர். அதிகாரத்தை காண்பிக்க அவர்களின் குடிசைகளை கொளுத்தி பாத்திரங்கள்,தானியங்களை அழித்தனர்.

மாநில சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் இவ்விவகாரம் வந்தபிறகும் குற்றவாளிகளை தண்டிக்கவில்லை, பா.ஜ.க. அரசு. பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளை புதுப்பித்து தருவதாகவும், நிவாரணம் வழங்குவதாகவும் சொல்லி தட்டிக் கழித்தது. பா.ஜ.க.வின் அரசியல் மோசடி, அதிகார முறைகேடுகளை அம்பலப்படுத்திய 'சவ்தேஷ்' என்ற இந்தி தினசரி ஆசிரியர் ராஜேந்தர் சர்மாவை மிரட்டி முதல்வர் பகிரங்கமாக கடிதம் எழுதினார். பா.ஜ.க.வின் இந்த அப்பட்டமான ஜனநாயக விரோத செயலை கண்டித்து பத்திரிக்கையாளர்கள் ஜூன் மாதம் ஆர்ப்பாட்டத்திலும், வேலைநிறுத்தத்திலும் இறங்கினர். 'எது எக்கேடு கெட்டு போனாலும் எங்களுக்கும் அதிகாரத்தில் பங்கு கொடு' என்று கட்சிக்குள் கோஷ்டி சண்டை வலுத்தது. விளைவு, மந்திரிசபை 100 நாளில் இரண்டு மடங்காக ஊதியது. 8 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு மந்திரி என்று 40 மந்திரிகள் இப்போது பரிபாலனம் செய்கின்றனர்.

## குஜராத்

ஜனதாதள் கட்சியின் முதன் மந்திரியின் கீழ் பாரதீய ஜனதா கட்சி கூட்டாக ஆட்சி நடத்தும் குஜராத் மாநிலத்தின் அரசியல் இன்னும் அருவறுப்பாகவும் விகாரமாகவும் காட்சி தருகிறது. பா.ஜ.க. ஆதரவுடன் ஜனதாதள கட்சியின் சிமன்பாய் படேல் இங்கு முதல்வர். '74ஆம் ஆண்டு மாணவர் போராட்டத்தால் தூக்கியெறியப்பட்ட இவர் மீண்டும் அரசியல் வாழ்வு பெற்றிருக்கிறார். இம்மாநிலத்தில் கவர்ச்சி காட்டிதான் இவ்விரு கட்சிகளும் ஆட்சியைப் பிடித்தன.

சத்துருக்கன்சின்ஹா, ராஜ்பாபர் போன்ற இந்தி நடிகர்கள் ஜனதாதளத்திற்கும், ராமாயணம் 'டி.வி.' தொடரில் ராவண வேடம் கட்டிய அரவிந்த் திரிவேதி பா.ஜ. கட்சிக்கும் ஓட்டுப் பொறுக்கி கொடுத்தனர். தொழில் ரீதியான கிரிமினல்களைக் கொண்டு ஓட்டுப் பெட்டி சூறையாடல், கள்ள ஓட்டு என்று சௌதாலா பாணியில் வெற்றிப் பெற்றன, இக்கட்சிகள். அரசியல் ரௌடி சிமன்பாய் படேலை முன்தள்ளி விட்டு பின்னால் இருந்து இயங்குகிறது. பா.ஜ.க.

இந்த கூட்டணி ஆட்சியின் மூடுதிரையை கோஷ்டி சண்டையில் ஜனதாதள எம்.எல்.ஏ.க்களே இழுத்து காட்டி விட்டனர். ஜாஸ்பால் சிங் என்ற எம்.எல்.ஏ.வின் தலைமையில் 7 பேர் கொண்ட குழு தலைமைக்கு புகார் மூட்டைகளை அனுப்பிக் கொண்டிருக்கிறது. 'சிமன்பாய் படேல் புளுகுவதை ஒரு வழக்கமாகவே வைத்திருக்கிறார். கட்சிக்குள் கோஷ்டி அரசியல் நடத்துகிறார். மாதவசிங் சோலங்கி, அமர்சிங் சௌத்திரி போன்ற மக்களால் ஒதுக்கப்பட்ட ஊழல் காங்கிரசு தலைவர்களுடன் ரகசிய உறவு வைத்திருக்கிறார். போகிலால் பட்டேல் போன்ற மாநில தொழிற்துறையின் கருப்பு பட்டியல் பேர்வழியுடன் கூடிக் குலாவுகிறார். மேலும் சாதாரண ஆசிரியர் நியமனங்களுக்குக் கூட மந்திரிகள் லஞ்சம் வாங்குகின்றனர்' என்று போட்டுடைத்தனர். அரசியல் நேர்மையின் ஏகபிரதிநிதியாக அமைச்சரவில் அங்கம் வகிக்கும் பா.ஜ.க. இதைப் பற்றி கருத்துக் கூறாமல் நழுவிக் கொண்டது. கொள்கைப் பூர்வமான நழுவலோ என்னமோ தெரியவில்லை!

மறுபுறம் காந்தி பிறந்த மண்ணில் பூரண மதுவிலக்கின் கீழ் கள்ளச்சாராயம் சாலையோரங்களில் 'ரேடியோ' வைத்து விற்கப்படுகிறது. ராஜ்கோட் நகரத்தில் ஷா ஆலம் போலீசு நிலையத்தின் பக்கத்திலும், லால் தர்வஜா நகர் பேருந்து நிறுத்தத்திலும் பெரும் விளம்பரத்துடன் கள்ளச் சாராய வியாபாரம் நடக்கிறது. பிப்ரவரி மாதம் 50க்கும் மேற்பட்டோர் கள்ளச்சாராயத்தில் கும்பலாக மாண்ட பிறகும் அரசு அசரவில்லை. ஒரே நேரத்தில் 10,000 பீப்பாய் கள்ளச் சாராயத்தை குஜராத்தின் குக்கிராமம் வரை 'சப்ளை' செய்யும் மிகப் பெரும் புள்ளிகள் இருக்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு போலீசு, அரசியல்வாதிகளுக்கு 10 கோடி ரூபாய் கள்ளச்சாராய வியாபாரிகள் லஞ்சம் கொடுக்கிறார்கள் என்று பத்திரிக்கைகள் புள்ளிவிபரங்கள் கொடுக்கின்றன. கள்ளச்சாராயம் தலைமையிடங்களின் அருகில் உள்ள போலீசு நிலையங்களில் நியமனம் பெற ரூ.50,000-ல் இருந்து 2 லட்சம் வரை லஞ்சம் கொடுக்கும் போலீசு, உயர் அதிகாரிகளும் உண்டு. டில்லி சாராய வியாபாரிகளிடம் இருந்து கள்ளச்சாராய கரைசலை அதிகம் வாங்கி அக்கம்பெனிகளிடம் இருந்து மாருதிகார் பரிசு வாங்கிய நபர்களும் இருக்கிறார்கள். இக்கள்ளச்சாராய நபர்களின் எதிரில் நிற்கக்கூட நடுங்கும் போலீசு, சாதாரண மக்களின் மீது வெறிநாய் போல் சீறுகிறது.

இக்கூட்டணி ஆட்சி அமைந்து ஒரு மாதத்திற்குள் குஜராத்தில் மிகப் பெரும் மதக்கலவரங்கள் வெடித்தது. காஷ்மீர் தீவிரவாதிகள் பாகிஸ்தானில் பயிற்சிப் பெற்று கலவரங்களை தூண்ட குஜராத்தில் ரகசியமாக நுழைந்திருப்பதாக வதந்திகளை பரப்பியது. ஆர்.எஸ்.எஸ். பொது இடங்களில் நடமாடிய முஸ்லீம்கள் கதற கதற வெட்டிக் கொல்லப்பட்டனர். பத்தாயிரம் பேர் வீடு வாசல் இழந்தனர். 200க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 40 பகுதிகள் இன்றுவரை 'மிகவும் பதட்டம் நிலவும்' இடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்விடங்களில் போலீசு, ஆர்.எஸ்.எஸ். கிரிமினல்களின் கட்டுப்பாட்டினுள் இருக்கிறது.

மலை மாநிலமான ஹிமாச்சலப் பிரதேசத்திலும், வறட்சி பாலைவன பிரதேசமான ராஜஸ்தானிலும், இக்கட்சிகள் இதே முறையில்தான் ஆட்சி புரிகின்றன.

சிக்கனமான, தூய்மையான, ஊழலற்ற, நெறிதவறாத பெருமை தரக்கூடிய அரசாங்கத்தை - கொள்கை பூர்வமான அரசாங்கத்தை தரப்போவதாக சொன்னார்கள். இப்போதும் சொல்கிறார்கள், எங்களால் தான் நிலையான நேர்மையான அரசாங்கத்தை தர முடியும் என்று! காரணம், மற்ற ஓட்டுக் கட்சிகளைப் போலவே தங்களாலும் மக்களை ஏமாற்ற முடியும் என்று அசையாத நம்பிக்கை வைத்துள்ளார்கள்.

● பச்சையப்பன்



படிப்பகம்

www.padippakam.com



# இரத்த வாடையை மறைக்கும் முயற்சி

அரசு பயங்கரவாதத்தை ஏவிவிடுவதிலும், அதற்குத் துணை நிற்பதிலும் நமது நாட்டு நாடாளுமன்ற அரசியல் கட்சிகள் அதீத அக்கறை காட்டுகின்றன. இது தான் அவர்களது தேசிய ஒருமைப்பாடு!

சர்வதேச மனித உரிமைகள் கழக (அம்னெஸ்டி இன்டர் நேஷனல்) பிரதிநிதிகள் இந்தியாவுக்குள் நுழைவதைத் தடுப்பதில் அனைத்துக் கட்சிகளும் காட்டிய சமீபத்திய அக்கறை இதை மேலும் தெளிவுபடுத்துகிறது.

சர்வதேச மனித உரிமைகள் கழகமானது இலண்டனைத் தலைமையகமாகக் கொண்டது. 44 நாடுகளில் அதற்குக் கிளைகள் உள்ளன. உலகம் முழுவதுமுள்ள அரசுகள் செய்து வரும் மனித உரிமை மீறல்களை ஆய்வு செய்து அவ்வப்பொழுது அம்பலப் படுத்தி வருகிறது.

ஜனநாயக, குடியுரிமை மறுப்பு, விசாரணையின்றிக் கைது, சிறை, சித்திரவதைக் கொலைகள், நிராயுதபாணிகளான சிவிலியன்கள், அரசியல் போராளிகளைச் சுட்டுக் கொல்வது இவை போன்ற பல அரசு பயங்கரவாதச் செயல்களை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்துகின்றன. சர்வதேச மனித உரிமைகள் கழகத்தின் ஆண்டறிக்கைகள்.

அவை உலகின் பல நாட்டு அரசுகளுக்குத் தலைவலியாக, தொடையிலே குத்தும் முள்ளாக இருக்கின்றன. ஜனநாயகம், அகிம்சை, சமாதானம், மனித உரிமைகள் பற்றி உள்ளூர் மேடையிலிருந்து ஐக்கிய நாடுகள் சபை வரை பேசும் அரசுத் தலைவர்களின் கொல்லைப்புரத்திலே நடக்கும் கொலைகளைப் பற்றிய விவரங்கள் வெளியே வந்து நாறுகின்றன.

## இந்தியா

சிறைக் கொட்டடிச் சாவுகள் அதிகரித்து வருகின்றன. பஞ்சாபில் காலிஸ்தான் ஆதரவாளர் எனச் சந்தேகிக்கப் படுபவர்கள் கூட சித்திரவதை சாவுகளுக்குப் பலியாகின்றனர். போலீசு நிலையங்களில் பெண்கள் கற்பழிக்கப் படுவதும் ஏராளமாக நடக்கின்றன.



பாசிஸ்டுகளோ, ஆத்திரமடைகின்றனர்; அகிம்சை - ஜனநாயக வேடதாரிகளோ, தர்மசங்கடத்துக்குள்ளாகி நெளிகின்றனர். இன்னமும் ஜனநாயக நம்பிக்கையும், மனிதநேயமும் ஒட்டிக் கொண்டுள்ளவர்களோ அதிர்ச்சியடைகின்றனர்.

இந்தச் சர்வதேச மனித உரிமைகள் கழகத்தின் ஆண்டறிக்கையில் இந்தியாவும் தவறாது இடம்பெறுகிறது. பஞ்சாப்பில் நடக்கும் அரசு பயங்கரவாத அக்கிரமங்கள், வட இந்தியாவில் நடக்கும் இந்திய இராணுவ வெறியாட்டங்கள், கற்பழிப்புகள், இந்திய இராணுத்தின் ஈழப்படுகொலைகள் - சித்திரவதைகள், பீகாரில் நடக்கும் சாதிவெறியாட்டங்கள், மத்தியப் பிரதேசத்தில் மலைவாழ் மக்களுக்கு எதிரான அக்கிரமங்களைக் கொண்ட ஆண்டறிக்கை 1988 - '89-ம் ஆண்டுகளில் இக்கழகம் வெளியிட்டது.

உடனே பாசிச ராஜீவ் கும்பல் சர்வதேச மனித உரிமைகள் கழகத்தின் மீது பாய்ந்தது. அதன் பிரதிநிதிகள் இந்தியாவுக்கு நுழைவதற்கு எட்டு மாதங்களுக்கு முன்பு தடை விதித்தது. அதே கொள்கையைப் பின்பற்றிய வி.பி.சிங், "அவர்கள் இந்தியாவுக்குள் நுழைவதானால் கராச்சி வழியாகத்தான் வரவேண்டும்" என்று 2 மாதங்களுக்குப் முன்பு கிண்டலடித்தார். ஆனால் கடந்த மாதம் தடையை நீக்கி, பஞ்சாப், ஜம்மு - காஷ்மீருக்குள் நுழைவதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கியது. ஜனதா தள - தேசிய முன்னணி அரசு.

இதற்குக் காரணம் சீக்கியத் தீவிரவாத அமைப்புகளும் பாகிஸ்தான் அரசும் மட்டுமல்ல, பல்வேறு நாடுகளிலும் இயங்கும் ஜனநாயக அமைப்புகளும், நபர்களும் காஷ்மீர் விடுதலை முன்னணியும், குறிப்பாக சர்வதேச மனித உரிமைகள் கழகமும், இந்தியாவில் நடக்கும் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தி நடத்தி வந்த உலகு தழுவிய இயக்கம்தான். சீக்கியத் தீவிரவாதிகளும் பாகிஸ்தான் அரசும் மேற்கொண்ட தூண்டுதல் காரணமாக இந்திய மனித உரிமை மீறல்கள் காரணமாக இந்தியாவுக்கு வழங்கியுள்ள 'சிறப்பு சலுகை பெற்ற நாடு' என்ற வியாபாரத் தகுதியை ரத்துச் செய்யும்படி அமெரிக்க நாடாளுமன்றத்திலே தீர்மானம் வந்தது.

அது அங்கே தோற்றுப் போனாலும், சர்வதேச மனித உரிமைகள் கழகம் இந்தியாவுக்குள் நுழைந்து விசாரணைகள் நடத்துவது போன்று மனித உரிமைகளை நிலைநாட்டும்படி மேற்கு நாடுகளின் நிர்ப்பந்தம் அதிகமானது. 50 அமெரிக்க எம்.பி.க்கள் வி.பி.சிங்குக்கு இதுபற்றி நேரடியாகவே எழுதினர். இதற்கு இன்னுமொரு காரணம், இந்தியாவின் ஈழ ஆக்கிரமிப்புப் போரில், இந்திய இராணுவம் புரிந்த அக்கிரமங்கள் மீது ஐக்கிய நாடுகள் சபை உட்பட பல அரங்குகளில் தமிழ்ப் போராளிகள் நடத்திவந்த பிரச்சாரமும் ஆகும்.

சர்வதேச மனித உரிமைகள் கழகத்தினர் பஞ்சாப், ஜம்மு - காஷ்மீருக்குள் நுழைய அனுமதி என்றதும் ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா இந்துமதவெறி பாசிச கும்பலின் கடும் எதிர்ப்பு வந்தது. அதோடு போட்டி போட்டுக் கொண்டு கிளம்பின, பாசிச ராஜீவ் கும்பலும் போலிக் கம்யூனிஸ்


படிப்பகம்

www.padippakam.com

டுக் கட்சிகளும்.

''விமான நிலையத்திலேயே மறியல் செய்து அவர்களை விரட்டியடியுங்கள்'' ''நமது கொள்கைகளையும் விதிகளையும் தீர்மானிப்பதற்கு அவர்கள் யார்?'' என்று இளைஞர் காங்கிரசுக் குண்டர்களுக்கு உத்தரவு போட்டுள்ளார். பாசிச ராஜீவ்.

''சுதந்திரமான பத்திரிக்கைத் துறையுள்ள, உண்மையான வெளிப்படையான ஜனநாயகம் நிலவும் இந்நாட்டில் சர்வதேச மனித உரிமைகள் கழகத்துக்கு என்ன வேலை? ஒரு சர்வாதிகார நாட்டுக்குப் போய் விசாரணைகள் நடத்தினால் புரிந்து கொள்ள முடியும். இங்கே அவர்கள் வருவது இந்தியப் பத்திரிக்கைத் துறையையும், நாடாளுமன்றத்தையுமே அவமதிப்பதாகும்'' என்று கூசாமல் பேசுகிறார் காங்கிரசின் வெளி விவகாரத் துறைத் தலைவர்.

''இது காலிஸ்தான்களுடைய ஏற்பாடு. காலிஸ்தானிகளிடம் இந்த அரசு அடிபணிந்துவிட்டது. மனித உரிமைகள் கழகத்திடமிருந்து நமக்கு ''நன்னடத்தை சான்றிதழ்'' வேண்டியதில்லை. 45 ஆண்டுகளுக்கு முன்பே வெள்ளைக்காரனைத் தூக்கி எறிந்துவிட்டோம். அவனிடமிருந்து. சான்றிதழ் பெறுவதை அவமானமாகவே கருதுகிறேன்'' என்று உணர்ச்சி வசப்படுகிறார் காங்கிரசின் ஊதாங்குழல் அக்பர்.

இரண்டு போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளும். ''இது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அத்துமீறிய செயல்; உள்விவகாரங்களில் தலையிட சர்வதேச மனித உரிமைகள் கழகத்தினர். யார்? அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?'' என்று குதிக்கின்றன.

இதெல்லாம் தனக்குக் கிடைத்த வாய்ப்பாக. ஆதரவாகக் கருதிய ஜனதாதள - தேசிய முன்னணி அரசு. திடீர் பல்டி அடித்து. முடிவை மாற்றிக் கொண்டது. சர்வதேச மனித உரிமைக் கழகத்தின் பிரதிநிதிகள் என்கிற முறையில் அனுமதிக்கவில்லை. தனி நபர்கள் என்கிற முறையில் பஞ்சாப். காஷ்மீருக்குள் வந்து போகலாம் என்று அறிவித்தது. இதன் பொருள் என்ன? 'அனுமதி கிடையாது; தடை நீடிக்கிறது; மீறி வந்தால் திரும்பிப் போக முடியாது; இராணுவத்தை ஏவித் தீர்த்து கட்டிவிடுவோம்' என்பது தானே!


சர்வதேச மனித உரிமைகள் கழகப் பிரதிநிதிகளுக்குத் தடை விதிப்பதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் என்ன? அவை உண்மையா? முதலாவதாக, 'இந்தியா ஒரு ஜனநாயக நாடு. சுதந்திரமான பத்திரிக்கைகளும் நீதித்துறையும் உள்ளன. இங்கே மனித உரிமை மீறல்களே கிடையாது' என்கின்றனர். இது உண்மையானால் ச.ம.உ.க. பிரதிகள் தாராளமாக வந்து போகட்டும் என்று தானே அனுமதிப்பார்கள். அதற்கு மாறாக போலி ஜனநாயகமும். அரசு பயங்கரவாதமும் தான் இந்திய ஆளும்வர்க்கங்களின் ஆட்சியை நீட்டித்து வருகின்றன என்பதே உண்மை. அதனால்தான் ச.ம.உ.க. பிரதிநிதிகளை மட்டுமல்ல. இந்திய ஜனநாயகக் குடியுரிமை அமைப்புகளின் மீது கூட பல தடவை பாய்கிறது. இந்திய அரசு

இரண்டாவதாக, சர்வதேச மனித உரிமைக் கழகத்தின் நேர்மையே கேள்விக்குரியது. இந்தியாவுக்கு எதிராக அவதூறு செய்வதற்காக அதன் எதிரிகள். வெள்ளையர்கள். ஏகாதிபத்தியவாதிகள் நடத்துவது' - என்கின்றனர். 'இந்தியாவின் மனித உரிமைகளைப் பற்றிப் பேசும் இவர்கள். மேற்கத்திய நாடுகள். அவற்றின் ஆதரவு நாடுகள் பற்றி எதுவுமே பேசுவதில்லை. அதுமட்டுமல்ல. இந்தியாவின் உள்விவகாரங்களில் தலையிட இவர்கள் யர்ர்? அப்படிச் செய்ய யாருக்கும் உரிமை கிடையாது' என்று கூச்சல் போடுகின்றனர்..

இவையும் கூட உண்மை அல்ல. ச.ம.உ.கழகத்தின் '89-ம் ஆண்டறிக்கையில் கூட அமெரிக்காவிலும். இங்கிலாந்தும். பிரான்சும் மனித உரிமைமீறல்கள் செய்வது குறித்து செய்திகள் - கண்டனங்கள் இருக்கின்றன. அடுத்து அவர்கள் நோக்கங்கள் எதுவாக இருப்பினும் இந்த நாட்டில் மனித உரிமைமீறல்கள் நடப்பதை அது பெருகி வருவதை யாருமே மறுக்க முடியாது. இவை பற்றிப் பேசும் இந்திய ஜனநாயக - குடியுரிமை அமைப்புகளையே கூட இவ்வாறுதான் முத்திரை குத்தி ஒடுக்க முயலுகிறது. இந்திய அரசு. பஞ்சாப், ஜம்மு - காஷ்மீர் மக்கள் மீதும். டெல்லி சீக்கியர்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்ட அரசு. மதவெறி பயங்கரவாதங்களைப் பற்றி அறிக்கை வெளியிட்டபோது அவற்றைத் தாக்கியது. இந்திய அரசு.

சர்வதேச மனித உரிமைகள் கழகம். உட்பட இம்மாதிரியான மனித உரிமை. குடியுரிமை. ஜனநாயக உரிமை அமைப்புகளில் ஏகாதிபத்திய சக்திகள் ஊடுருவி இருப்பதை நாம் மறுக்கவில்லை. இந்த உரிமைக்கான அமைப்புகளைக் கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சாரத்துக்கு அவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம்.

ஏன். இந்த உரிமைகள் பற்றிய அவர்களது கண்ணோட்டமே. வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட அடிப்படையான உரிமைகள் என்று கூறிக்கொள்ளும் முதலாளித்துவத் தத்துவம்தான்! இருந்தபோதும், முதலாளித்



துவ நீதித்துறை சில சமயம் தனித்து இயங்குவது போன்ற பிரமையுடன் செயல்படுவது போல. இந்த மனித உரிமை அமைப்புகள். செயல்பட்டு உலகம் முழுவதுமுள்ள அரசுகளின் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்துகிறது.


நமது நாட்டு அரசுத் தலைவர்கள் ஒருபுறம் ஜனநாயகம். சமத்துவம். அகிம்சை - காந்தீயம் என்று சவடால் அடிக்கின்றனர்; ஈழத்தமிழர் மீது சிங்கள இராணுவத்தின் இனவெறிப் படுகொலைகள். தென் ஆப்பிரிக்க நிறவெறி பாசிசத்தின் அக்கிரமங்கள் போன்றவற்றை எதிர்ப்பதாகக் குரல் கொடுக்கின்றனர். மறுபுறம் சொந்த மக்கள் மீதே அரசு பயங்கரவாதத்தை ஏவி விட்டு ரத்தம் குடிக்கின்றனர்.

இந்த உண்மைகளை. இரட்டை வேடத்தை சர்வதேச ரீதியில் அம்பலப்படுத்த உதவும் என்கிற காரணத்திற்காக சர்வதேச மனித உரிமைகள் கழகம் போன்ற குடியுரிமை. ஜனநாயக உரிமை அமைப்புகளுக்கு விதிக்கப்படும் தடைகளை. நெருக்கடிகளை எதிர்ப்போம்.

● கரீம்.

## அமெரிக்கா

**16 அரசியல் கைதிகள் தூக்கில் இடப்பட்டனர்; 2300 பேர் மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ளனர். ஒரே குற்றத்துக்காக மரண தண்டனை வழங்குவதில் கறுப்பர்களுக்கும் வெள்ளையர்களுக்கும் இடையே பாகுபாடு காட்டப்படுகிறது.**



படிப்பகம்

www.padippakam.com

# 1989-ம் ஆண்டின் மனித உரிமை மீறல்கள்

சர்வதேச மனித உரிமைகள கழகத்தின் (ஆமெனஸ்டி இன்டர்நேஷனல்) 1990ம் ஆண்டுக்கான 298 பக்க அறிக்கையை வெளியிட்டுள்ளது. 138 நாடுகளில் நடந்துள்ள மனித உரிமை மீறல்களை அவ்வறிக்கை தொகுத்தளிக்கிறது. பின்வரும் விவரங்களை அது தருகிறது.

புகார்களோ, விசாரணைகளோ, அல்லது நேர்மையான விசாரணைகளே இல்லாது ஆயிரக்கணக்கான அரசியல் கைதிகள் உலகம் முழுவதும் கைது செய்து, சிறை, சித்திரவதைக்கு ஆளாகி, படுகொலை செய்யப்படுவது அதிகரித்து வருகிறது. பலர் 'காணாமல் போகிறார்கள்' - அதாவது இரகசியமாகக் கொல்லப்படுகின்றனர். அவர்கள் பெரும்பாலும் மொழி, இனச் சிறுபான்மை உரிமைக்காகப் போராடியவர்கள்.

1989ம் ஆண்டு மட்டும் 34 நாடுகளில் 2,229 பேர் விசாரணையின்றிச் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் 62 நாடுகளில் 2,826 பேர் அநீதியான மரணதண்டனைக்குப் பலியாகினர். இத்தனைக்கும் இவர்களில் மிகவும் பெரும்பான்மையினர் நிராயுத பாணிகளான அரசியல் போராளிகள்தாம்! இந்நாடுகளின் போலீசும் இராணுவமும் புதிய புதிய சித்திரவதை முறைகளைப் பின்பற்றுகின்றன. இரும்பு கம்பிகளாலும், சவுக்காலும் அடிப்பது, தீயால் சுடுவதும, கற்பழிப்பதும் சர்வசாதாரணமாக நடக்கின்றன.

**இலங்கை:** தென்னிலங்கையில் அதிரடிக் கொலைக் குழுக்கள் மூலமாக நூற்றுக்கணக்கான ஜே.வி.பி. போராளிகள் இரகசியமாகக் கொல்லப்பட்டனர். இந்திய இராணுவமும், அதன் கூட்டாளிகளான ஈழத் தமிழ்க் குழுக்களும் பல தமிழ் இளைஞர்களைச் சித்திரவதை செய்து கொன்றது; தமிழ்ப் பெண்களைக் கற்பழித்தனர்; சிவிலியன் வாழுமிடங்கள் மீது குண்டு வீசித் தாக்கிக் கொன்றனர்.

**மயன்மார் (பர்மா):** ஆயுதந்தாங்கிய கலகப்படைகளை ஒடுக்குவதற்காக அனுப்பப்பட்ட அரசு இராணுவக் குழுக்கள் மலைப்பிரதேசங்களிலும் தொலைதூரங்களிலும் வாழும் ஆதிவாசி - விவசாயிகளைச் சித்திரவதை செய்து கொன்றன.

**பிரேசில்:** வேட்டைக்காரர்கள், சுரங்கங்கள், மூங்கில் வெட்டும் கம்பெனிகள் ஆகியவற்றால் தமது நிலமும் சமூகமும் அழிக்கப்படுவதை எதிர்த்த மேற்கிந்தியப் பழங்குடியினர் அரசு ஆதரவுடன் தனியார் படைகளால் கொல்லப்பட்டனர்.

**இஸ்ரேல்:** இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பகுதியில் அரசியல் எழுச்சியில் பங்கேற்றதற்காக 25,000 பாலஸ்தீனியர்களைக் கைது செய்து, 4000 பேர் மீது விசாரணையோ, புகாரோ இல்லாமல் சிறையில் அடைத்து சித்திரவதை செய்து வருகிறது. இஸ்ரேல் அரசு, நிராயுதபாணிகளாக, பாலஸ்தீனிய ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தி 260 சிவிலியன்களைச் சுட்டுக் கொன்றது.

**இந்தியா:** சிறைக் கொட்டடிச் சாவுகள் அதிகரித்து வருகின்றன. பஞ்சாப்பில் காலிஸ்தான் ஆதரவாளர் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் கூட சித்திரவதை சாவுகளுக்குப் பலியாகின்றனர். விசாரணையின்றி அடைத்து வைக்கும் பயங்கரவாத - கலவர நடவடிக்கைச் சட்டப்படி ஆயிரக்கணக்கானோர் கைதாகியுள்ளனர். பீகார், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்கள் போலீசு நிலையங்களில் சித்திரவதைகளுக்குப் பலியாவதும், பெண்கள் கற்பழிக்கப்படுவதும் ஏராளமாக நடக்கின்றன.

**இங்கிலாந்து:** பிரிட்டிஷ் இராணுவமும் போலீசும் இரகசிய கூட்டுச் சேர்ந்து சுயநிர்ணய உரிமைக்குப் போராடும் அயர்லாந்து போராளிகளை கைது செய்வதற்குப் பதில் வேண்டுமென்றே சுட்டுக் கொல்கின்றன. இந்தக் கொலைகள் மீதான விசாரணைக்கான கோரிக்கையை அரசு நிராகரித்தே வருகிறது.

**அமெரிக்கா:** 16 அரசியல் கைதிகள் தூக்கிலிடப்பட்டனர்; 2300 பேர் மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ளனர். ஒரே குற்றத்துக்காக மரண தண்டனை வழங்குவதில் கறுப்பர்களுக்கும் வெள்ளையர்களுக்கும் இடையே பாகுபாடு காட்டப்படுகிறது. 1975-ம் ஆண்டு சியேக்ஸ் பழங்குடி எழுச்சியில் இரண்டு போலீசாரைக் கொன்றதாக ஆயுள்தண்டனை அனுபவித்து வருகிறார் லியேனார்டு பெல்டியர். இது பொய்ச்சாட்சி - ஜோடிக்கப்பட்ட வழக்கு என்பதை அமெரிக்க உளவுத்துறை பகிரங்கமாக ஒப்புக் கொண்டும் அவர் விடுதலை செய்யப்படவில்லை.

- இவ்வாறு பலநாடுகளிலும் நடக்கும் மனித உரிமைமீறல்கள் பட்டியலிடுகிறது ச.ம.உ.கழக அறிக்கை. உலகம் முழுவதும் முதலாளித்துவ ஜனநாயகம் வெற்றி பெற்று வருவதாகப் பீற்றிக் கொள்கிறார்களே, இது தான் அதன் யோக்கியதை!

---



## விவசாயிகள் விடுதலை முன்னணியின் கல்லை வட்ட முதல் மாநாடு

## புதிய அத்தியாயம் தொடங்கியது!

*தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் விடுதலை முன்னணி தனது முதல் வட்டார மாநாடுகளை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது. அதில் ஒன்றான கல்லை வட்ட வி.வி.மு.வின் முதல் வட்டார மாநாடு 7.7.90 அன்று சிறப்பாக நடந்தது. தியாகத் தோழர் கணேசன் அரங்கம் - சங்கராபுரத்தில் தோழர் மாணிக்கம் தலைமையில் தோழர் வடிவேல் கொடியேற்றி தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்த மாநாடு தொடங்கியது.*

*ஆயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்த அரங்கத்துக்குள் வி.வி.மு. மாநில இணைப்பாளர் தோழர் மாது மாநாட்டை தொடங்கி வைத்து எழுச்சிமிகு உரையாற்றினார். அதன்பிறகு தோழர் துரை மாணிக்கம் தலைமையில் நடந்த கருத்தரங்கத்தில் தோழர் கே.பி.ராமசாமியும் (வி.வி.மு), தோழர் சீனிவாசனும் (ம.க.இ.க.) கருத்துரை வழங்கினர்.*

*பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்களை தோழர் மாது அறிவித்தார். செயற்குழுவுக்ுத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர்கள் கண்ணன், மாணிக்கம், தாமோதரன், பழனி ஆகியோர் சார்பில், தோழர் கதிர்வேலன் (செயலர்) ஏற்புரை நிகழ்த்தினார். பிறகு சிறுவர்கள் பங்கேற்ற 'முட்டாள் அரசனின் விசித்திர ஆடை' எனும் நகைச்சுவை நாடகம் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட ஊர்வலம் எழுச்சிகரமான முழக்கங்களுடன் பொதுக்கூட்டத் திடலை வந்தடைந்தது. பொதுக்கூட்டம் தோழர் கண்ணன் தலைமையில் நடைபெற்றது. தோழர் மாது புதிய பொறுப்பாளர்களை அறிமுகப்படுத்த தோழர்கள் கதிர்வேலன், சீனிவாசன் சிறப்புரையாற்றினர். பொதுக்கூட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் மழை பெய்யவே தோழர்கள் குடைபிடித்துக் கொண்டு பேச பொதுமக்களனைவரும் கலைந்து செல்லாமல் ஒரமாக நின்று பேச்சை செவிமடுத்தனர். மழையில் நனைந்து கொண்டே கலைக்குழு தோழர்கள் கலைநிகழ்ச்சி நடத்தியதற்குப் பின் மாநாடு நிறைவடைந்தது. இந்த மாநாடு, விவசாயிகளின் விடுதலைக்கு புரட்சிகர அரசியலே தீர்வு என்பதை பகுதி மக்களுக்கு மேலும் உணர்த்தியது.*

**— வி.வி.மு. கல்லை வட்டம்.**



படிப்பகம்

www.padippakam.com



ஆக்ரா மருத்துவமனை; சாதிக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட மக்கள்.

# ஆக்ரா சாதிக் கலவரம் ஓட்டுக்கட்சிகள் கைவரிசை

ஆக்ரா, உலகப் புகழ்பெற்ற தாஜ்மஹாலுக்கு மட்டுமல்ல இந்தியாவின் செருப்புத் தொழிலுக்குப் பெயர்போன இடம். இங்கு செருப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் ஜாதவ் எனும் ஹரிஜனர்களான சிறுபான்மையினர். ஆக்ராவிலுள்ள ஜாட் எனப்படும் மேல்சாதியைச் சேர்ந்தவர்களால் நிராகரிக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் வருகிறார்கள். இதனால் இருபிரிவினருக்கும் இடையே நெடுநாளாக பகை இருந்து வருவதும் அவ்வப்போது மோதல்கள் ஓட்டுக்கட்சிகளின் தூண்டுதல்களினால் நடந்தவண்ணம் இருக்கின்றன. 1978-ல் ஆர்கோலா என்ற இடத்தில் சாதிக்கலவரம் நடந்தது. அதன்பிறகு சமீபத்தில் ஜூன் 21-ம் தேதி ஜாதவ் சாதியைச் சேர்ந்த ராம்தீன் (வயது 15) - மந்திரா (வயது 13) ஆகியோர் திருமண ஊர்வலம் (பாராட் - BARAAT), ஜாட் பிரிவினர் அதிகம் வசிக்கும் பன்வாரி கிராமத்து வழியே செல்ல மாவட்ட நிர்வாகத்திடம் அனுமதி பெற்று போலீஸ் பாதுகாப்புடன் சென்றது. "திருமண ஊர்வலத்தை, எங்களை இழிவுபடுத்துவதற்கென்றே எங்கள் கிராமத்தின் வழியே நடத்த முற்படுவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" என ஜாட் பிரிவினர் ஊர்வலத்தை வழிமறித்து துப்பாக்கி முதலான ஆயுதங்களைக் கொண்டு தாக்கவே கலவரம் மூண்டது.

கலவரத்தைத் தடுக்க போலீஸ் துப்பாக்கி பிரயோகம் செய்ததில் 9-க்கும் மேற்பட்டவர்கள் இறந்தனர்; சுமார் 500 பேர் படுகாயமுற்று மருத்துவமனைகளிலும், பள்ளிகளிலும் வைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறார்கள். இச்சம்பவத்தை தொடர்ந்து பக்கத்து கிராமங்களான அகோலா, பாலி, அந்தெரா, பர்கான், லாகன்பூர், ஜாசிங்பூரி, அடுஸ், நெதர்கா முதலிய இடங்களில் கலவரம் பற்றி எரிந்தது. ஜாட் சாதியினரால் பல இடங்களில் ஹரிஜனங்களின் குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டன. நகரத்திலோ ஆக்ரா - மதுரா நெடுஞ்சாலை, ஆக்ரா - டெல்லி நெடுஞ்சாலை, ஆக்ரா - குவாலியர் சாலை ஆகிய இடங்களில் ஜாதவ் ஜாதியினர் பல வாகனங்களை மறித்து தாக்கினர்; தீ வைத்தனர். இதனால் அரசு பல பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தது. மத்திய ரிசர்வ் போலீஸ் மற்றும் ஆயுதமேந்திய துணை ராணுவப்படையையும் கொண்டு நகரில் பல இடங்களில் அணிவகுப்பு நடத்தி பீதியூட்டியது.

சட்டப்படி அரசு, இக்குழந்தை திருமணத்தை தடை செய்திருக்க வேண்டும். ஆனால், இதை தடை செய்யாததோடு ஊர்வலம் மாற்றுச் சாதியினரது கிராமத்திற்குள் செல்வதற்கு அனுமதி வழங்கி பாதுகாப்பு கொடுத்தது. "இது சட்டவிரோத திருமணம் தான். ஜாதவ் சாதியினரது பாரம்பரியமாக இருந்து வரும் பழக்கத்தை எங்களால் தடை செய்ய முடியவில்லை. ஆனால், இருசாதியினரையும் அழைத்து வைத்துப் பேசித்தான் ஊர்வலம் செல்வதற்கான பாதை முடிவெடுக்கப்பட்டது. இதை ஜாட் சாதியினர்தான் மீறினார்கள்" என்று தமது செயலுக்கு நியாயம் கற்பிக்கிறார், மாவட்ட சட்டம் மற்றும் ஒழுங்குத்துறை நீதிபதி ஏ.கே.வர்மா. தான் வகுத்துக் கொண்ட சட்டதிட்டங்களைக் .கூட ஆளும்வர்க்கம் கடைபிடிப்பதில்லை என்பதற்கு இச்சம்பவம் ரத்தசாட்சியாகி நிற்கிறது.

இக்கலவரம் ஓட்டுப்பொறுக்கிகளின் தூண்டுதலால் அதிகார வர்க்கத்தின் உடந்தையோடு நடந்ததே. அரசு நிர்வாகத்தினரிடமிருந்து வெளிவந்த இருவேறு முரண்பட்ட தகவல்களும், இச்சம்பவத்தில் ஓட்டுப் பொறுக்கிகளின் ஆதாயமான செயல்பாடுகளுமே இதற்கு நிரூபணமாகிறது. ஜாதவ் ஜாதியைச் சேர்ந்தவர்களான ஆசாத் குமார் கர்தாம் (முன்னாள் காங்கிரசு எம்.எல்.ஏ) மற்றும் அவரைச் சார்ந்த கட்சித் தலைவர்கள், பெரோசாபாத் - தனித் தொகுதியின் ஜனதாதள எம்.பி. ராம்ஜிலால் சுமன் (சந்திரசேகர் கோஷ்டியைச் சேர்ந்தவர்) முதலியோர் ஜாதவ் சாதியினருக்கு சாதகமாக செயல்பட்டார்கள். எனவே, அரசு நிர்வாகத்தில் ஒரு பிரிவினர் ஜாதவ் சாதியினருக்கு ஆதரவாக நின்றார்கள். ஆக்ரா தொகுதியின் எம்.பி.யான அஜய்சிங் ஜாட் சாதியைச் சேர்ந்தவர் (சந்திரசேகர் - தேவிலால் கோஷ்டி எதிர்ப்பாளர்) என்பதால் நிர்வாகத்தில் ஒரு பிரிவினர் ஜாட் சாதியினருக்கு பக்கபலமாக நின்றார்கள். இருசாதியினரிடமும் இருந்துவந்த பகைமையுணர்வு அரசியல்வாதிகளின் இத்தகைய பின்னணியில் - தூண்டுதலில் கொழுந்து விட்டு எரிந்து திருமண ஊர்வலத்தில் கலவரமாக வெடித்தது.

பதவியிழந்த பின் 'எளிய' மனிதரான ராஜீவ்காந்தி ரயிலில் 2-ம் வகுப்பு பயணத்தில் ஆக்ராவிற்கு வந்து மருத்துவமனையில் இருந்த ஜாதவ் சாதியினரைச் சந்தித்து ஆறுதல் கூறினார். பின்னர் கிராமத்திற்குள் செல்ல முயன்ற ராஜீவ்காந்திக்கு 'ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது' எனக்கூறி மாநில அரசு அனுமதி தர மறுத்தது. "என்னைக் கைது செய்தாலும் சரி, சுட்டுத் தள்ளினாலும் சரி நான் கிராமத்திற்குள் செல்லாமல் திரும்ப மாட்டேன்" என மார்தட்டி முரண்டு பிடித்தார் ராஜீவ்காந்தி. பின்னர் மாநில அரசு அனுமதித்தப் பிறகு பன்வாரி மற்றும் அக்கோலா கிராமத்திற்கு சென்று திரும்பிய ராஜீவ்காந்தி தனக்கு அனுமதி மறுத்ததை பிரதானமாக முன்னிறுத்தி கண்டித்துவிட்டுப் போனார்.

உத்திர பிரதேசத்திலுள்ள மற்ற கட்சிகள் மாநில அரசு இக்கலவரத்தை முன்பே தடுத்திருக்க வாய்ப்பிருந்தும் தடுக்காதது தவறு என கண்டித்தன. பகுஜன் சமாஜ் கட்சி நகரத்தில் போக்குவரத்தை மறித்தும், வாகனங்களை தாக்கியும் தாழ்த்தப்பட்டவர்கள் மீதான அநீதியை கண்டித்து எதிர்ப்பு தெரிவித்தது.

சாதிக் கலவரத்திற்கு தூண்டுதலாக இருந்து இப்படி ஆதாயமடைவது ஓட்டுப் பொறுக்கிகளின் நெடுநாளைய பாரம்பரியம்தான். இதற்கு ராஜீவிற்கு மாற்றான ராஜா வி.பி.சிங் கட்சியும் - ஆட்சியும் விதிவிலக்கானதல்ல என்பதை நிரூபித்திருக்கிறார்கள். ஒருபுறம் தாழ்த்தப்பட்டவர்களின் தலைவர் அம்பேத்காருக்கு 'பாரத ரத்னா' விருது கொடுத்து அம்பேத்கார் நூற்றாண்டு விழா கொண்டாடிக் கொண்டே மறுபுறம் தாழ்த்தப்பட்ட சிறுபான்மையினர் மீது அடக்குமுறையை ஏவுவதும் அவர்களுக்கு எதிராக செயல்படுவதையும் அனுமதித்துக் கொண்டிருக்கிறது தேசிய முன்னணி அரசு.

● சுப்பு

படிப்பகம்

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

பம்பாய், பைதோனி பகுதியில் கடந்த மாதம் இந்த 4 மாடிக் கட்டிடம் இடிந்து விழுந்து 28 பேர் மாண்டனர். 100 பேர் படுகாயமுற்றனர். இன்னும் இடிபாடுகளில் சிக்கியுள்ளோரை மீட்கின்றனர். இது ஒரு விபத்து அல்ல. ஒருவகையில் கிரிமினல், 'கொலை' குற்றத்தினால் ஏற்பட்டது. பிரபல கடத்தல் மன்னர்களான ஹாஜி மஸ்தான், பாகி நாராயணன், யூசுப் பட்டேல் போன்றவர்கள் பாசிச இந்திரா - அந்துலே கும்பலின் கைங்கரியத்தால் மதிப்புக்குரிய கட்டிடத் தொழில் அதிபர்கள் ஆனார்கள் அல்லவா? அந்த யூசுப் பட்டேல் தான் இந்தக் 'கொலை'களுக்குப் பொறுப்பு.

பம்பாயின் குடிசைப்பகுதிகள், புறம்போக்குகள், பழைய குடியிருப்புகளை ஆள் பலம், பணபலத்தைக் கொண்டு கைப்பற்றி, மாநகர விதிகளுக்கு விரோதமாக பல அடுக்குமாடிகள் கட்டி, கள்ளச்சந்தையில் விற்று, கோடிகோடியாக சம்பாதிப்பது - இவர்களது தொழில். இதிலே அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் இவர்களது நெருங்கிய கூட்டாளிகள்.

பம்பாயின் நெரிசல் மிகு பைதோனியில் இடியும் நிலையில் இருந்த 75 ஆண்டு பழைய வீட்டை வாங்கி, விதிமுறைகளை மீறி அதன் மேலே மூன்று மாடிகள் கட்டினார், யூசுப் பட்டேல். தங்கம் - வைர நகைத் தொழிலகமாகவும், குடியிருப்புமாக உள்ள இதை ஒரு முஸ்லீம் அறக்கட்டளையின் பெயரில் எழுதி வைத்துக் கொண்டுள்ளார். இம்மாதிரி வீடுகள் இடிந்து விழுந்தால், பல அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டிக் கொள்ளை லாபமடிப்பது வழக்கம். அதற்காக பழுது பார்ப்பதுமில்லை; மேலும் விரிவுபடுத்துகிறார்கள்; விபத்துக்கள் நடக்கின்றன. 304(அ) பிரிவின்படி பலர் சாவுக்குக் காரணமான யூசுப் பட்டேல் கிரிமினல் குற்றவாளி. இதைச் சொல்லி அவரைக் கைது செய்வதாக சட்டமன்றத்தில் வாக்குறுதியளித்தது மராட்டிய அரசு. ஒருமாதமாகியும் கைதாகவில்லை; அவரது தம்பி அப்துல் மஜீத் பட்டேல் மீது கண்துடைப்பு வழக்குப் போடப்பட்டு கவுரவத்துடன் விசாரணைக்கு வந்து போகிறார்.

ஆனால் இங்கே போலீசு சுற்றி வளைத்துக் கொண்டுள்ள முற்போக்கு நாடகக்காரர் பி.எம்.அந்தோணி செய்யாத கொலைக் குற்றத்துக்காக திருவனந்தபுரம் மத்திய சிறையில் ஆயுள்தண்டனை அனுபவித்து வருகிறார்.

"1980-ம் ஆண்டு ஆலபபுழையில் தொழிலதிபர் சோமராஜனைக் கொன்ற நக்சல்பாரிக் கும்பலில் அந்தோணியும் இருந்தார்" என்பதுதான் குற்றச்சாட்டு. அதற்கான சாட்சியமோ, ஆதாரமோ கிடையாது. ஏசு கிறிஸ்துவை ஒரு மனிதப்பிறவி, ஜூடாஸ் ஒரு துரோகியல்ல என்பது போன்ற கருத்துடைய பிரச்சினைக்குரிய, "கிறித்துவின் ஆறாம் காயம்" என்ற நாடகத்தை 1986-87-ம் ஆண்டுகளில் அந்தோணி நடத்தினார். பாதிரியார்களின் முயற்சியால் அரசு விதித்த தடைக்கு எதிராக உச்சநீதிமன்றம் வரை வழக்காடித் தோற்றுப் போனார். இருந்தாலும் அவரை பழிவாங்கும் நோக்கத்தோடு பாதிரிகளோடு சேர்ந்து கொண்டு காங்கிரசு, போலிக் கம்யூனிஸ்டு அரசுகள், பொய் வழக்காடி ஆயுள் தண்டனை விதித்துள்ளன.

பலரது சாவுகளுக்குக் காரணமான கிரிமினல் குற்றங்களையே தொழிலாகக் கொண்ட யூசுப் பட்டேல்கள் சுதந்திரமாக உலாவுகின்றனர். பிரச்சினைக்குரிய, மாறுபட்ட கருத்தைச் சொன்னதற்காகப் பொய் வழக்கு - ஆயுள்தண்டனை என அந்தோணிகள் தண்டிக்கப்படுகின்றனர். இந்த அநீதி இன்னும் நீடிக்கலாமா?



படிப்பகம்